சர்வேஸ்வராய நம:

# வீரமாமுனிவர் அருளிச்செய்த

திருக்காவலூர்கலம்பகமும்.

அன்னையழுங்கலந்தாதியும்.

தேம்பாவணியிற்சிலபாடலும்-வண்ணமும்-வாமன்சரித்திரமும்.புத்தகப்பெயரட்டவணையும்.

சென்னைக்கல்விச்சங்கத்து மாநேசராகிய

## அ-முத்துச்சாமிபிள்ளையவர்களால்

செய்யப்பட்ட

## வீரமாமுனிவர்சரித்திரமும்.

இவராலும்-சிலவித்துவான்களாலும் பலபிரதிகளைக் கொண்டுசொல்நடைக்கும் பொருணடைக்கு மொப்பப்பழுதறவாராயப்பட்டு-தஞ்சைநகரத்துப்பூங்கொடி-சின்னப்பிள்ளை-குமாரர்-ஈ-ஈ-மரியப்பிள்ளையவர்கள்-தம்பி

அப்பாவுபிள்ளையென்பவராலும்.

ஞானதிக்கப்பிள்ளையென்பவராலும்.

இரக்ஷணிய-௲௮௱ துஅா சயரு-ல்-

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

இதன்விலை-ரூபா, கவ.

வீரமாமுனிவர்செய்த

# தேம்பாவணிப்பாடல்

ஆறிலநன்மைநிறைவுமோர்குறைமுற்றின்மையுந்தொழத்தகுந்தெய்வ - மாறிலவியல்பேவேரிதாய்க்கிளைத்துவரும்பலசினையெனநூலோர்.ஆறிலக்கணங்களுணாத்தவையுள்ளோனுண்டகையிலனலனென்றார்தாறிலசுடாமைவரிந்தன்ன சாற்றுதும்புன்சொலாலவையே

எ-து, மட்டின்றியெல்லாநன்மைநிறைவுமெல்லாக் குறையின்மையுமென்றிவ்விரண்டேபெவரும்வணங்கத்தகு மெய்க்கடவுட் குரியமாறாதகுணமதாமே-இதுவேராகக் கொண்டுகிளைத்த பலகொம்புகளின்றன்மையாலிக்குணத்தை விரித்துநூலோர்மெய்யான தேவனையறிவதற்காறிலக்கணங்களைச்சொல்லியவையெலா முடையோன்றேவனேயென்றா- ரவற்றுளொன்றாயினுங்குறைந்தெல்லாவற்றையுமில்லாதவன்றேவனல்லனென்றார். ஆகையாலளவிறந்தகதிருள ரியனைமையாலெழுதினாற் போலநானுமென்புன் சொல்லாலத்தேவாறிலக்கணங்களைச்சொல்லிக்காட்டுவேனென்றான் கூசையென்க.

தன்வயத்தாதன்முதலிலனாதல்தகும்பொறியுருவிலனாதல் - *
மன்வயத்தெல்லாநலமுளனாதல்வயின்றொறும்வியாபகனாதல் *
பின்வயத்தின்றியொருங்குடனனைத்தும்பிறப்பித்தகாரணனாதல் *
பொன்வயத்தொளிர்வான் முதலெல்லாவுலகும் போற்றுமெய்யிறை
\- - - - - [மையினிலையே:

எ-து, தன்னாலாதலுந்தொடக்கமின்றியாதலுமைம்பொறிக்குரியவுருவில்லாதலுநிலைபெற்றசகலநன்மையுளனாதலுமெங்கும்வியாபகனாதலுந்தன்னையல்லாதோருதவியின்றி யெல்லாவற்றையு மொருங்குடன்படைத்தவாதிகாரணனாதலுமென்றிவ்வாறிலக்கணங்கள்-பொன்னொளிர்வானுலகுமுதலெவ்வுலகும்வணங்கத்தகுமெய்க்கடவுளின்றேவதத்துவமிதேயென்றானென்க. - - *

அறக்கடனீயேயருட்கடனீயேயருங்கருணாகரனீயே - - *
திறக்கடனீயேதிருக்கடனீயேதிருந்துளமொளிபடஞான *
நிறக்கடனீயேநிகர்கடந்துலகினிலையுநீயுயிருநீநிலைநான் *
பெறக்கடனீயேதாயுநீயெனக்குப்பிதாவுநீயனைத்துநீயன்றோ. *

கார்த்திரள்மறையாக்கடலினுண்மூழ்காக் கடையிலாதொளிர் பரஞ்சுடரோ-நீர்த்திரள்சுருட்டிமாறலையின்றிநிலைபெறுஞ்செல்வநற்கடலே-போர்த்திரள் பொருதக் கதுவிடாவரணே பூவனந்தாங்கியபொறையே - சூர்த்திரள்பயக்குநோய்த்திரள் துடைத்துத்துகடைத்துயிர்தருமமுதே- = = =

# வண்ணம்.

தான தந்தன தான தனு தனு தன. தான தந்தன தான தனு தனு தன—தந்தா தனதன தானதன தானன- தந்தா தனதன தான தன தானன— தனன தனன தனனத் தானனு.

காரகன்றெருவிவானிலெலேலோனெலோனிரு-டீரவங்கிடுதீபதிலாதிலாவிரு—ளண்டாவொளியினனீநிலனநாதிய னுண்டாயவையமைதாரெனுருவனுதிய—னேரமொன்றிலனேரவினுவினுவின- னேரமைத்தொருபாதிதகாதகாரிய—நொந்தாபரனருடவியதயாபர.னந்தா நலினகலாபரபராபர—காரணன்குறையாவுமிலானிலானென. வாமருங்குணயாவுமுனானுளானென—மங்காவறிவுடை ஞாபகவியாப ..னெங்காவலமெனுரு வாவலிமனுயுதன் — பொருவுமுருவு மிலன் ..ற்றேகனே. - - - - (ஹ)

காயநின்றிழிமாரிதிமீதிமீயென-பாயும்வெண்டிரையோதைகுமீகுமீரென — செந்தாமரைமலர்வாவிகள்சிவேலென-பைந்தாதவிழ்பொழினீணிலங்கறேலென— வீயினங்குழலூதியிமீயிமீயென-மேயனஞ்சிகியாடிஞுருஞுருவென — சிந்தேபரவியநீர் நுரைவிளேலென-வந்தேயுழியுழிபூவயல்பசேலென—காடுமெண்டினவாடுமொலிர்மொலீரென- பாயும்வன்றகரோதைபடீர்படீரென—கன்றுமிரயலவானழகள்சரோலென - வின்றேனெழுகுறும் பூதநளிநாடினன்—பொலியமருவிமனுவுற்றனரோ. - (வ)

சூரவும்பர்விடாதுபளீர்பளீரென- சூரியன்கதிராடைமளீர்மளீரென—மின்றாரகைமுடியாகமதிமேவடி-யுன்றுயெனவருவாயுருவதாயினே—சாரலொன்றியகூகைகுகூகுகூவென - வாரலொன்றியகோழிகொகோகொகோவென—சிந்தாமணியெனயாமநடுவேளையில்-வந்தாயொருகுகைவானவர்கடாடொழ— சூழிறைஞ்சியகோவரிரீரிரீரென - கோளெழுந்தொருமீனும்வரீர்வரீரென—மின்றுர்முடியினர்நாடியடிதாழவு-நின்றானேவரும்வாழியெனவாழ்தரு—வெருவிலளவிலருணர்சீதனே. - - (வஹ)

சோனையங்கரமாரிகொளீர்கொளீரென - ஆரிறந்தொழிவாரையழீழொழீரென—நந்தார்மகிழ்வுறநோய்வினையைமாறினே - நந்தாரயமுல்காரவருளாயினே — வானிழந்தனதீய விடீர்விடீரென-வனைநன்றெனயாவுநடீர்நடீரென — பின்றுநெறிநடைவேதமுறயோதினே-யொன்றுமிறைமையினுமதிகேபேணினே— தாயுடம்பிசோரிகுமீர்குமீரென - வாழைகண்டதிர்பூமிபகீர்பகீரென—தாந்தாயெனதுயிர்வாழவுயிர்வீயினே - யெந்தாயதிபரிபாலபர

நாயக—கவிஞர்கவிதையினினற்சேசுவே· - - (ஓ)

நேரொழுந்தும்பாதனுரோல்லுரோலென-சேரவந்திருதாளைவிடே
ன்விடேனென-கண்டாவியபுனலோடவைவினாவினள்- தண்டார்
நறுங்குழலோடிநதிநீவினள்—நீவியொன்றியவாயும்விளேல்விளே
லென-காவியன்றிரள்பூசியநுநறுவென— நந்தாமுறைறசமழ்நாண
விளாவீசினள்-பைந்தாதவிழ்மலர்பூமியடிநேடினள்— நேடியுஞ்
பசமாலையிறேனிறேனென·நீடுகண்டிலளாகியுயேனுயேனென—
சென்றுளருகுகபாலமலைமீதினை-யுன்றுளணிமதலேலனைபெனுமானி
னி—யொருவிலருநல்வினையிற்கோதையே· - - (உஹ)

நேயநின்றிருநாமவிழாவிழாவென- தூயநின்றிரிபாணர்தனுதனு
வென—சங்கீதமருவுதாளநிலைவீணைக- ளங்கீதமொடுனைநாளுநனி
பாடின—வீடுபண்படுமோதைசெனுசெனுவென- நாடுநின்பெயர்
மாலைதனுதனுவென—தண்டாதலர்முகமாமைமிகவாயித.ழொண்
டாமமாமதுவீசவிழிநீருக — நீருசந்தனை மேவியெழே னெழே
னென - சேரவந்தகை நாடிநலீர்நலீரென — தன்காவலனெடு
மேவருளையாவையு-முன்காவலிடுசெசீலியெனுமாதவ—னுயிரினு
முனையணைபொற்பாவையே· - - (ஓ)

ஆரமுண்டெழுவீரமுழாமுழாவென-கூரொழுந்ததிரோதைமு
டாமுடாவென—வெஞ்சூலமழுவில்வாளிவசிவேலிவை யஞ்சாதெ
திரொருபாதையுனையாவின — ளாவிகொண்டினி யானுமிரோனிரோ
னென - மேவிவந்துறநீயுநிலேலிலேலென — வல்பூறியபுகழாசி
மொழிவாயின - ளின்பூறியவருடேவகருணசனி—யாசனம்பொலி
ராசனடீரடீரென - கூசவெப்படைசாலதொடீர்தொடீரென —
வந்தேகொடியர்கைவேல்வெருவிலாடலை- தந்தேயுனதடிமேவிய
பராபரை—செருவிலரியின்விறலிற்பேதையே. (ஞஹ)

ஆயமஞ்சனயாயநிலாநிலாவென·தூயநின்புகழ்நேரம்விலாவிலா
வென—வம்பேரிளமயில்ஞானமுதிர்பேதையள். பொம்பேரொனு
மலைமீதுதவமேவினள்—மேவலன்பதிகாவலிடீரிடீரென -நெர்வி
டுந்தளைகூறகலீர்கலீரென— நின்றேதலையறவீமமிலநீடின·ளொ
ன்றேநிகரறவீரசயமாடின—ளாடியும் பருமவானில் அஆஅஆவெ
ன· பாடியங்களைவோரும் ஓஓ ஓஓவென. விண்டாயினதலைதானிரு
கையேமிசை-கொண்டாளுனதடிநாமமுடிசூடினள— திருவுமரு
ளும்பெருகித்தேரியே· = = (க)

# அ-முத்துச்சாமிபிள்ளையவர்களின்
# சரித்திரச்சுருக்கம்

உண்மைவிளக்குஞ்சாதாரணசத்தியவேதத்திருச்சபையின்பிரதான சேசுசபைக்குருப்பிர சாதிகளாய்ச் சிந்துதேசத்திற்கெழுந்தருளிவந்த தத்துவபோதகசுவாமி வீரமாமுனிவர், சாங்கோபாங்கர்முதலியதபோதனர்கள், சமஸ்கிருதம், தமிழ்தெலுங்கு முதலியபாஷைகளைச்சம்பூரணமாயுணர்ந்து. இத்தேசத்துப்பூர்வவிருத்தாந்தங்களையும் - பற்பலகலைஞானங்களையும் - நன்றாகவாராய்ந்தறிந்து நிகரற்றபாண்டித்திய வல்லவர்களாய்ப் பற்பலவேதவிவரணவுன்னதபிரபந்தங்களை அருளிச்செய்தனர் - அவைகளைச் சென்னைக்கல்விச்சங்கத்துமாநேசராகியும் - இங்கிலீசுபாஷையிற்பண்டிதராகியும் - தமிழிலக்கணவிலக்கியஆராய்ச்சியின்மிக்கபுலவராகியும் - வேதவிற்பன்னராகியும் - விலையுயர்ந்தமாணிக்கத்தீபம் போலவிளங்கியிருந்த - அ-முத்துச்சாமிபிள்ளையென்பவர் மிகுந்த பிரயாசப்பட்டு மஹாவருமையாகச் சம்பாதித்து அவைகளின்கட்டுரையலங்காரத்தையுங்கருத்திநுட்பத்தையும் - யாவருங்கேட்டு வியப்புறும்படியாக நாடோறும்பிரசங்கித்துவந்ததுந்தவிர அவற்றின் அருமைகளைச்சென்னைக்கல்விச்சங்கத்தின்பிரதான தலைவர்களாகிய - பிரான்சிஸ் - உவைத்து - எல்லீசு துரையவர்களுக்கும். ரிச்சார்டு - கிளார்க்குத்துரையவர்களுக்கும் - ஜெனரல் - மல்க்கன் துரையவர்களுக்கும் - பெஞ்சமின் - பாபிங்டன் துரைமுதலிய அநேகந்துரைகளுக்கும் - விளங்கவிரித்துரைத்து இரோப்புதேசத்துக்கல்விச்சங்கத்திலும் பொன்மலையுச்சிமேலெறிக்குஞ் செஞ்சுடரொப்பப்பிரகாசிக்கும்படியாகவுஞ்செய்தனர், மேலும் முன்னோர்கையெழுத்தாயெழுதிப்படித்துவந்தசெபங்கள் மந்திரங்கள் - பிரார்த்தனைகள்முதலியவைகளைப்பரிசோதித்து - லத்தீன் முதலிய மூலபாஷையின் முதனூல்களுக்கிணங்க வொத்திட்டுப் பிழையறத்திருத்தி அவைகளையொருபுத்தகமாகச் சேர்த்துஆத்துமவுத்தியானமெனப்பெயரிட்டுப்புதுவை மேற்றிராணியாரவர்களநுமதியின்மேல் அச்சிற்பதிப்பித்தனர். சாதாரணசத்தியவேதக்கிறிஸ்தவர்களொருவரும் நியாயஞ்சொல்ல மாட்டார்களென்றகங்கொண்டு பொன்னம்பலஞ் செய்தவேத விகற்பத்துக்குத் தக்க கண்டனையாகப்பற்பல நியாயப்பிரமாணங்களைக்காட்டி - வேதநுட்பங்களைப் புகட்டிச் சிறந்த அலங்காரமாய் - தெவிட்டாதமதுரமாய்ச்செப்பரும்பொருளாய்ப்பிணித்து - திக்காரமெ

ன்னும் அரியபிரபந்தமொன்றினைச் செய்தனர் - அப்பிரபந்தத்தைமுன்னிவ்விடம் வந்திருந்த கும்பகோணங் கோர்ட்டு சிரஸ்தாதாராகிய - மஹா ள-ள-ஸ்ரீ-சாமிநாதமுதலியாரவர்கள்.சமஸ்கிருதவித்துவான்கள்தமிழ்ப்புலவர்கள்முதலியோரைச்சபைகூட்டி அரங்கேற்றுதல் செய்வித்து அதனைக்கேட்டயாவருமகிழ்ந்துமிகவுங் கொண்டாட இரத்தினமிழைத்தகண்டிகை மாலையும் - விலையுயர்ந்தவுபயசூரத்துச்சாலுவையும்-வெகுமதியாகவளிக்கப்பெற்றனர்.அன்றியும்.சென்னைக்கல்விச்சங்கத்துப்பிரதானபண்டிதர்களுமற்றச் சாஸ்திரிகளும் - வித்துவான்களுமிப் பிரபந்தத்தின்சொற்றிறத்தையும் - பொருட்டிறத்தையுங் கண்டு வியந்து மகிழ்ந்துபுகழ்ந்து இப்பிரபந்தமிகுந்த பயனுளதென்று சமஸ்கிருதத்திலும் தமிழிலுஞ்சாத்துகவிகள்பாடியளிக்க - அவைகளையந் நூன்முடிவிற் சேர்த்தச்சிற் பதிப்பித்தனர். இதுவுமல்லாமல் - புறச்சமயத்தாரைச் சாதாரணசத்தியவேதத்தி னியாயப்பிரமாணங்களைக்கொண்டுபோதித்துத் திருப்பியும் - ஏழைபரதேசிகளுக்கன்னவஸ்திராதிகளையளித்தும்வந்தனர்-மேலும்இவர்வீரமாமுனிவருடைய சரித்திரத்தைத் திரட்டி - செப்பருமலங்காரக்கோவையாக்கிஇங்கிலீசுபாஷையில்மொழிபெயர்த்துஅச்சிற்பதிப்பித்ததுமன்றி - இந்துக் கிறிஸ்டியன் அப்சர்வரொன்று மொரு புத்தகம்-தமிழுமிங்கிலீசுமாகவெழுதினர் - அன்றியும்-தேவார முதலிய அநேகங்கீர்த்தனைகளுஞ்செய்தனர்.

இப்படிப்பட்டகீர்த்திப்பிரதாபம்பெற்றவேதவிற்பன்ன வித்துவசிரோமணிக்கு [illegible] கடவுள்மோட்சானந்தபேரின்ப செல்வபாக்கியத்தையளிக்கச் சித்தமாகிஅவரைத் தம்முடையதிவ்விய சந்நிதானத்திற்சேர்த்துக்கொண்டார்.

## தேம்பாவணிப்பாடல்.

தேறுந்தவையயின்முனிவோய்நீசினத்திற்கருள்செய்கனிவோய்நீ
கூறுங்கலையற்றுணர்வோய்நீகூறுந்தொனியற்றுரைப்போய்நீ *
மாறும்பொருள்யாவிலுநின்றேமாறுநிலைகொள்மரபோய்நீ[யோ
யீறுந்தவிர்ந்துன்புகழ்க்கடலாழ்ந்தெனக்கேகரைகாட்டருளா
ஒளிநாக்கொடுவான்சுடர்புகழவொளிநாக்கொடுபன்மணிபுகழக் *
களிநாக்கொடுபற்புள்புகழக்கமழ்நாக்கொடுகோமலர்புகழத் *
தெளிநாக்கொடுநீர்ப்புனல்புகழத்தினமேபுகழப்படுவோய்நீ *
அளிநாக்கொடுநானுனைப்புகழவறியாமையுணர்த்தாயோ. *

# வீரமாமுனிவர்சரித்திர

## வரலாறு.

இந்துதேசத்திற்குவந்திருந்து சமஸ்கிருதமுந் தமிழுஞ் சம்பூரணமாயுணர்ந்து-இத்தேசத்துப்பூர்வ விருத்தாந்தங்களையும்பற்பலகலைஞானங்களையுமாராய்ந்தறிந்த இராஜரிஷியாகியவீரமாமுனிவர் லத்தீன்பாஷையிலெழுதிவைத்த செந்தமிழிலக்கணத்தை இங்கிலீசுபாஷாந்தரப் படுத்தியச்சிற் பதிப்பிக்கும்படிசென்னைக்கல்விச்சங்கத்துக்குத்தந்துமீளவும் - இங்கிலாண்டுதேசத்திற்குச் சென்றங்கிருக்கின்றபெஞ்சமின் பாபிங்கடன்துரையவர்கள் வீரமாமுனிவருடைய பிரபந்தங்களெல்லாவற்றையுந் தேடிவைத்துக்கொண்டிருக்கிறவராதலாலும்- அவற்றிற்சிலபிரபந்தங்களைலண்டன் பட்டணத்திலே தானேயச்சிற் பதிப்பித்து இத்தேசத்துக்கனுப்பிப் பிரபலம்பண்ணவிருப்புற்றிருக்கிறவராதலாலும்வீரமாமுனிவருடைய சரித்திரமும் விவரமாய்வேண்டுமென்றுகேட்டுக்கொண்டதின்மேல்-இப்பொழுதுசென்னைக்கல்விச்சங்கத்திற்குத்தலைவரான மாமணிகளுக்குள்ளே விலையேறப்பெற்றவயிரமணியாகவிளங்கிச் செந்தமிழ்-கொடுந்தமிழென்னுமிருவகைத்தமிழினையு முணர்ந்து இலக்கணவிலக்கியங்களையுந் தெளிந்து அச்சங்கத்துக்குக் கலைஞானத்தாயாகிக் கல்வியமுதூட்டிக்கருணைமுகங்காட்டி யதனைக்கனிவாகவளர்த்துவருகின்றரிச்சார்டு-கிளார்க்குத்துரையவர்களுடையவுத்தரவின்படியேவீரமாமுனிவருடையசரித்திரமிப்பொழுதெழுதப் பட்டவரலாறெப்படியென்னில்-முன்னாலே அருந்தமிழ்க் கலைகளையாய்ந்து-அநேகபிரபந்த ஆசிரியராயிருந்தபுதுச்சேரிவித்துவான் சாமிநாதபிள்ளையென்பவர் வீரமாமுனிவரதுசரித்திரத்தை விருப்புற்றாராய்ந்து- ௲எ௱௯அ-ம்-௵- எழுதிவைத்ததைக்கொண்டும் - கொழுகொம்பில்லாதலைகொடிபோலுங் கொழுநனில்லாக்குலக்கொடிபோலும் ஆதாரமின்றித்தேய்ந்துகிடந்த - ஆரியம்- தெலுங்கு-மலையாண்மைமுதலிய இத்தேசபாஷைகளிற்றேர்ந்து தமிழிலக்கணவிலக்கியத்தையொருங்குணர்ந்து சென்னையிற் கல்விச்சங்கம் நாட்டுதற்கு வேண்டுமுயற்சிசெய்தமைத்து அப்பல் கலைச்சங்கத்தைப்பாண்டியனைப்போலும்பாதுகாத்திருந்த-பிரான்சீஸ்-உவைத்து - எல்லீசுதுரையவர்களுடைய அநுமதிப்படி-௲அ௱௰எ-ம் -௵- வீரமாமுனிவர்வாசம்பண்ணினஸ்தலங்கடோறுஞ்சென்று

அவர்செய்தநூற்களைச்சேகரம்பண்ணிக் கொண்டுவரப்போயின்பொழுது அங்கங்கேயவருடையவர்த்தமானங்களையறிந்துங் கேட்டுமிருந்தசீஷவருக்கங்களைவினவித்தெரிந்தெழுதி வைத்திருந்த குறிப்புகளைக்கொண்டும்- வீரமாமுனிவர் தமிழிலுண்டு பண்ணினபிரபந்தங்களினுந்தமிழைலத்தீன் முதலியபாஷைகளில் மொழிபெயர்த்தபுஸ்தகங்களிற்கண்டிருக்கிற பற்பலசங்கதிகளைக்கொண்டும் - நிச்சயித்து- ௲௮௱௨௰-ம்- (ஷு) சென்னைக்கலவிச்சங்கத்தில்-தலைமைப் புலமையுத்தியோகஸ்தர்களி லொருவராகிய- அ-முத்துச்சாமிபிள்ளையவர்களாலெழுதப்பட்டது.

## வீரமாமுனிவர்சரித்திரம்.

இராஜரிஷியாகியவீரமாமுனிவருடையசரித்திரத்தைச் சொல்வதற்குமுன்அவரிந்தச்சிந்துநாட்டுக்குவந்தவரலாற்றைச்சொல்வது மதற்கடுத்தகருமமாதலா லவ்வரலாற்றைச்சுருக்கமாயாரம்பத்திற்சொல்லப்பட்டிருக்கின்றது-அஃதெப்படியெனில்.உலகரட்சகரானசேசுக்கிறிஸ்து நாதர்· அவதாரம்பண்ணினஆசியகண்டத்துக்குட்பட்டபூகோளத்துக்குநடுப்பட்ட திருநகரமாகிய செருசலேமிலிருந்துஅதற்கடுத்த.அராபி.பார்சுதேசங்களின்வழியாகஇரட்சகருடையஅனுக்கிரகத்தாலவருடையபிரதானசீஷர்களிலொரு மாதவரிஷியாகிய-அர்-தோமையாவென்னும்அப்போஸ்தலரானவர்சத்தியவேதவிசுவாச வித்தையிந்த இந்துதேசத்தி லாதிகாலத்தி லூன்றிமுளைப்பித்தார்.இவ்வண்ணமேசத்தியவேதவிசுவாசவித்தானது இரோப்புக்கண்டத்திலுமிரட்சகருடையசீஷர்களால்முளைக்கப்பட்டு-திவ்விய விருட்சமாக வளர்ந்துபடர்ந்து இரோமைநகரத்தில்நிலைகொண்டபின்பு அந்நகரத்திற்றிருச் சபைக்குக்காணப்படுந் தலைமைபெற்ற அரியபீடாதிபதியாகிய.அர் - பாப்பானவர் கற்பித்தபிரகாரம் - சேசுசபைக்குருக்களிலொருவராகிய- அர்- சவேரியாவென்னுந் திருத்தவமுனிவரானவர்பொர்த்துகேசுக்காரர் நூதனமாயிவ் விந்துதேசத்திற்குவரத்தொடங்கினகொஞ்சகாலத்துள்ளாக இந்நாட்டுக்கெழுந்தருளிவந்துஅநந்தினம்புரிந்தஅபரிமிதமானஅர்ப்புதங்களென்னும்- அமுதமாரியால்முன்முளைத்திருந்தவேதவிசுவாச முதலானசுகிர்த புண்ணியங்களோங்கிவளரத்தலைப்பட்டன-அதன்பின்புஇந்நாட்டுக்குவந்த இரோமைப்பிராமணவென்னுந் தத்துவபோதகசுவாமி கடல்மடை திறந்தாற்போலவிரித்துக் கதிரவனொளிபோல விளக்கி வியாக்கியான

துங்கமாய்- வேதப்பிரசங்கமாய்த் தமிழிலுஞ் சமஸ்கிருதத்திலுமெழுதிப்பரப்பிய வேதசாஸ்திரங்களென்னும் விசாலமானதடாகங்களில்நின்று பாய்ந்தஞானப் பிரவாகங்களால் முன்வளரத்தொடங்கின வேதவிசுவாசமானது பணைகளைவிரித்துப்படர்ந்துசெழித்துத்தழைத்து அஞ்ஞானக்கடுங்கானலைப்பரப்பியழற்றும் புறச்சமய விசுவாசமாகியபாலையிலலைந்துநலிந்துவந்தடைந்தோர்கள் தீராவிளைப்புத்தீர்ந்துமாறுச்சுகமுறநிழற்றுகின்றதிவ்வியவிருட்சமாகவோங்கிவிளங்காநின்றது.

தத்துவபோதகசுவாமி இரோமைப்பிராமண ரென்னப்பட்டதென்னையோவெனில்- பிரமம் என்கிறபதத்துக்கு - எங்குமிருக்கிறவரென்கிறபொருளல்லாமலும் - வேதமென்கிற அர்த்தமுமிருக்கிறதினால்-பிராமணரென்பது வேதமுணர்ந்தவர்களென்றபயனும் -ஆதலால்-இரோமைப்பிராமணரென்றபொழுது இரோமையிலிருந்துவந்த வேதியரென்றபயனும்- இஃதிப்படியாயினும்- மதுரையிற்கூடின இத்தேசத்துப் பிராமணர்தத்துவபோதகசுவாமியைநீரென்றுகேட்டபொழுது அவர்தம்மைப்பிராமணரென்று அபத்தஞ்சொன்னதாயவர்கருத்தும்- அச்சொற்பயனுமறியாதசிலர்தத்துவபோதகசுவாமிமேல் தூறுசொல்லத்தொடங்கினார்கள்- அதேதெனில்-பிராமணரென்பது-பிரமதேவனுடையவம்சஸ்தரென்று சிலர்பயன்படுத்துவர் - அதுமெய்யாகில் மற்றைமூன்றுவருணத்தாரும் பிரமதேவனுடைய வம்சஸ்தரென்றே சொல்லவேண்டும்-எவ்வாறெனில்-பிரமதேவனுடைய நெற்றியிலே பிராமணர்பிறந்ததுபோலே- க்ஷத்திரியர்தோளிலும்- வைசியர் துடையிலும் - சூத்திரர் பாதத்திலுமுற்பத்தியானார் களென்று சொல்லப்படும் - ஆதலாலெல்லோரும் பிரமாவினிடத்திலிருந்து பிறந்தார்களென்றுசொல்லலாகுமே அப்படியிருக்கப்பிராமணர் மாத்திரம் பிரமதேவனுடையவம்சஸ்தரென்றெப்படிசொல்லலாம்- ஆதலால்-பிராமணரென்னுமொழி தொழிற்பெயரே யல்லாமல்வம்சப்பெயராகாது-அஃதெப்படியெனில்-வேதமுணர்ந்தவர் வேதியரென்பதுபோலப்பிரமம்- என்னும் வேதமுணர்ந் தோதுபவரெந்தத்தேசத்தாராயினும் அவரைவேதியரென்றும் - பிராமணரென்றுஞ்சொல்லலாம் - தத்துவபோதக சுவாமி இப்பயனே கருதினவராதலில் - தாமுண்டுபண்ணிய வேதவிவரணப் பிரபந்தங்களில்-வேதசாஸ்திரிகளுக்குப் பிரமவாதிகளென்றும்-பூசுர

டையகுருக்களாகிய ஆனுசன் - கைப்பாசனிவர்களையூகப்பிரம ணமொன்றும் அநேகவிடங்களிற் பிரயோகம்பண்ணி யிருக்கிறார்- இதுவுமன்றி- தத்துவபோதகசுவாமி இரோமா புரிக்குச்சென்று தமது சுவிஸ்தாரங்களைவிளக்கம் பண்ணினபொழுதுந் தம்மைப் பிராமணரொன்றது அசத்தியமல்லவென்று அங்கேகூடின விசுவா சசங்கத்தாருக்குமெய்ப்பித்தார். இவ்வரலாறு தரங்கன்பாடியில் அச்சிற்பதித்ததிருச்சபைசரித்திரமென்னும்புத்தகத்திலே - உ௱ ஈ௰அ ம்-பக்கத்திலுமின்னும் பலபுத்தகங்களினுங்காணப்படும்.

இதன்பின்பு மேற்சொல்லியபடிக்குத் தத்துவபோதகசுவா மியால் தழைத்துவிளங்கின வேதவிசுவாசத்தருவான துநிலைபெற் றிருக்கும்படிதொடர்புவிடாதமாலையாக வரப்பிரசாத நிபுணரா யரியசாமர்த்தியம் பொருந்திய பலபலசபைகளில்வருகின்ற எண் ணிறந்தகாரணக்குருக்களில் முக்கியமாய்ச் சேசுசபைக் குருக்கள் தத்துவபோதக சுவாமியைத்தொடர்ந்து அவர்நிரப்பிவைத்தவே தவிவரணசாஸ்திரங்களாகிய உளற்றடங்காத தடாகங்களில் நின்று இடைவிடாமல்முயன் நிறைத்தஞானப்பிரவாகங்களால் மேற்சொ ல்லியவேதவிசுவாசத்தருமெலிந்துவாடாமலெந்நாளும் விருத்தி யாகிவிளங்கிக்கொண்டுவராநின்றது.

இப்படிவருகையில் - இப்பொழுதிந்நாட்டில் வீரமாமுனிவ ரொன்றும் - நம்பூரி ஐயனொன்றுஞ் சொல்லப்பட்டவர்கள் செல்வ ஞ்செழித்தோங்கும் இத்தாலிய தேசத்திலுயர்ந்த கோத்திரத்தி ற் பிறந்துவளர்ந்து இரோமாபுரிமடத்தில் வேதவிவரண சாஸ்திர முதலியபலநூற்களை ஐயந்திரிபில்லாமல் நன்றாய்க்கற் றுணர்ந்து சேசுசபைக்குட்பட்டுக்காமாதிகளைவர்ச்சித்து-சிரேஷ்டதவம்வகி த்துப்பாலசந்நியாசிகளாயிருந்தமையாலவ்விருவரையும்- அர் பா ப்பானவர்தெரிந்து இரண்டுகலைஞானமணிகளென் றருளிச்செய் து அவர்களையித்தேசத்திற்கனுப்பினர்- அவ்வண்ணமே - ௲எ௱-ம் வருஷத்தில்-இரோமாபுரியிலிருந்திந்த இந்துதேசத்திற்கு வந்த அவ்விருவரில்-நம்பூரி ஐயனென்பவர் சேரனுடாகிய மலையாள த்துக்குச்சென்றுமலையாண்மையிலும்- ஆரியத்திலும் நிகரில்லாப் பாண்டித்தியமுள்ளவராய் அப்பாஷைகளிலெண்ணிறந்த வேதவி வரணசாஸ்திரங்களையுங் காவியபிரபந்தங்களையும் விளக்கி யெழு தியிவேதோபதேசஞ்செய்துவீற்றிருந்தார்.

வீரமாமுனிவரோவெனில் - இந்தத்தமிழ்நாட்டிற்கு வந்து

தமிழிலக்கணவிலக்கியங்க ளெல்லாமாராய்ந்து தேர்ந்துஒப்பற்ற
சம்பூரணவரப்பிரசாதவித்துவானாகியபின்பு-தத்துவபோதகசுவா
மி நிறைத்துவைத்தவேதவிவரண சாஸ்திரங்களென்னுந் தடாகங்
களினுடையதிருச்சுவை மாறாதிருக்கத்தாமெடுத்த தன்மைபோல
வேதவிவரணசாஸ்திரங்களைத் துலக்கம் பண்ணியும்- மேற்சொல்
லிய வேதவிசுவாசவிருக்ஷத்துக்கு விரோதமானவைகள் வந்து
அவ்வேதவிசுவாசத்தருவில் செழிப்பைப்பார்த்து மேல்விழுந்து
பூப்பிஞ்சு முதலானவைகளை நஷ்டம் பண்ணவொட்டாமல் திட்ட
மானவேலியிட்டமேரையாய் விகற்பச்சங்கையணுகாத மெய்ஞ்
ஞானத்தையுன்றி மேலான நியாயங்களாற்பிணித்த வேதப்பிரப
ந்தங்களைவிளக்கம் பண்ணியும்-வேதவிசுவாசத்தருவைக்காப்பாற்
றவேதவிவரணசாஸ்திரத்தடாகங்களில் நின்று மேற்சொன்னபடி
வேதியரிடைவிடாதுமுயன்றிறைக்கும் வருத்தவேதனையின்றியெ
ளிதாய்ப்பாய்ச்சல்சூத்திரக்கால்விடுத்தவிதமாய்·சூக்ஷமாகத்தொ
குத்ததுங்கநூற்களைப்பாடியும்,வீரமாமுனிவர்அற்புதமேலாயா
யமைத்தநூல்முதலாகியஅரியசெயல்களைக்கண்டுபிரமித்துஆச்ச
ரியப்படாதாரில்லை.

அதெப்படியெனில்- வீரமாமுனிவர்தமது ஜென்மதேசத்தித்
துனேதமது சுயபாஷையாகிய இத்தாலிய பாஷையோடுஎபிறே
கிறீக்கு,லத்தீன் - பொர்த்துகீசுமுதலநேகம்பாஷைகளிலேதேர்
ந்தபாண்டித்தியராயிருந்த தன்றியும் - இந்து தேசத்திற்கு வந்த
பின்பு சமஸ்கிருதமுந் தெலுங்கும் படித்து விசேஷமாய்த் தமி
ழ்ப்பாஷையைநானுவித இலக்கணங்களோடுமுழுதும் ஐந்துவரு
ஷத்தில் நன்றாய்ப்படித்துத் தேர்ந்து இந்நாட்டிலே தொன்று
தொட்டிருந்த திருவள்ளுவர் முதலான ஞானிகள் நல்லாசிரியர்
நற்கவிவாணர்க ளிவர்களாற் செய்யப்பட்ட சகலவிதமான இலக்
கியங்களை இருபத்தைந்து வருஷமாராய்ந்துபரிசோதித்துக்கொ
ண்டுவந்தபின்பு இத்தேசத்தாருக்குள்ளே பரம்பரையாய்த்தொ
டர்ந்துவரு மநந்தவித அஞ்ஞானநோய்களைத்தீர்க்கும் அருமரு
ந்தாக இனிச்சொல்லப்போகிற பற்பல அரியநூற்களைச்செய்தா
ர்·அந்நூல்கள் பொன்மலையுச்சி மேலெறிக்குங் கல்விச்சூரியனாக
எங்கெங்குந் தோன்றிப்பிரகாசித்து விளங்குந்தன்மை கல்வியா
ராய்ச்சியுள்ள கற்றோரெவர்க்கும் விசிதமாய்த்தெரிந்திருக்கின்ற
தாமே.

மேலுமிவரிந்தத்தேசத்தில் வந்தநாள்முதலாகப் புலால்மாம்ஸங்களை நிவர்த்தித்து இரண்டு தமிழ்த்தவசிப் பிள்ளைகளைப்பரிசுத்த அன்னபாகஞ்செய்யச்சொல்வித்தினமொருபொழுதுமாத்திரம் போசனம்பண்ணிகொண்டிருப்பார்.

தமதுமடத்திலிருக்கும்போது கோபிச்சந்தனம்நெற்றியிலிட்டுக்கொண்டு தலைகளுச்சூரியகாந்திப்பட்டுக்குல்லாவும். அரைக்கு நீர்க்காவிச்சோமனுந் திருநெல்வேலிக்கம்பிச்சோமன்போர்வை முக்காடுமிட்டுக்காவிற் பாதகுறடும் போட்டுக் கொண்டிருப்பார்- இவர்வெளியிற்சாரிபோகும்போது பூங்காவி அங்கியும், பூங்காவி நடுக்கட்டும்-வெள்ளைப்பாகையும், இளங்காவியுத்தரியமுக்காடும், கையினிற்காவியுருமாலையும்-காதில்முத்துக்கடுக்கனுங் கெம்பொட்டுக்கடுக்கனும் - விரலிற்றம்பாக்குமோதிரமும் - கையிற்றண்டுகோலும-காலிற்சோடுடனும் வந்துபல்லக்கின்மெத்தையின்மேலிட்டிருக்கும் புலித்தோலாசனத்தின்மேலெழுந்தருளி யிருந்து உபயவெண்சாமரைவீசவும், இரண்டுமயிற்றோகைக் கொத்திரட்டவும்- தங்கக்கலசம் வைத்தகாவிப்பட்டுக்குடைபிடிக்கவுஞ்சாரி போவார். இவரிறங்குமிடங்களிலும் புலித்தோலாசனத்தின் மேலுட்காருவார்.

இந்நாட்டிலுள்ள அஞ்ஞானிகளைச் சர்வேஸ்வரனுடையவேதமார்க்கத்திற்குள்ளாக்கும் படிக்குத்தமது தேசாசாரவழக்கங்களைமாற்றி-தமிழ்த்தேசாசாரவஸ்திராபரணங்கள் பூண்டு தேசங்கடோறும் யாத்திரைபண்ணியங்கங்கேபடித்தவர்களோடுவாதித்துக்கொண்டுமிருப்பார்.

இதுவுமல்லாமல்-ஏழைபரதேசிகளுக்குமிகுந்த வுபகாரங்களுந்தானதருமங்களுஞ் செய்து-அந்தந்தக்கோயிற்றிருப்பணிகளுக்குவேண்டியவுபகாரங்கள்பண்ணிக்கொண்டும்-அநேகம்பிள்ளைகளுக்குப்பாஷைகளைக்கற்பித்துயோக்கியராக்கியவர்களுக்குத்தகுமான வுத்தியோகங்கள்கொடுப்பித்துக்கொண்டுமிருப்பார்

இப்படியிருக்கையில்-வீரமாமுனிவர்-முத்துச்சாமிக்கச்சிராயப்பாளையக்காரனுடையபற்றுச்சேர்ந்த கோனாங்குப்பமென்ற ஆரியனூரிலொருகோயில்கட்டுவித்துப்பின்புமயிலாப்பூருக்குவந்து மேற்றிராணியாரைக்கண்டுபேசி வஸ்திராபரண மெல்லாந்தமிழ்ஸ்திரிரூபமாகவொருமாதாப்படமெழுதி அதைமனிலாவுக்கனு

ப்பி - ஒருஸ்திரியினுடையவுன்னதத்திற்கு மாதாசுரூபமும்-கையிலொருவருஷத்துப்பிள்ளைப் பிரமாணஞ்சேசுநாதர் சுரூபமுஞ் செய்வித்து அனத மயிலாப் பூருக்கழைப்பித்து அதற்குப்பெரியநாயகியம்மனெனப்பெயரிட்டு அதைமேற்படி பூருக்குக்கொண்டுபோய்த் திருவிழாச்செய்து அந்தஉற்சவத்திற்பதினைந்துபாடல்பாடிப்படிக்கச்சொல்லி அந்தமாதாவின் சுரூபத்தையக் கோயிலில்ஸ்தாபித்தார்.

மேலும்-அரியனூரரசினிலையிட்டாரங்கப்பமழவராயர் - முன்னே சாலிவாகனசகவருடம் ௲௬௱௫௰௭-ல் - ஏலாக்குறிச்சித்திருக்காவலூரில்-சர்வேஸ்வரன்கோயிலுக்குச்சிலாசாதனம்பண்ணிக்கொடுத்திருந்தநிலத்திற்பிற்பாடு வீரமாமுனிவர் அடைக்கலநாயகித் திருநாமத்தா லொருகோயில்கட்டுவித்தார். - அந்தச்சாசனமாவது-ஸ்வஸ்தஸ்ரீ சாலிவாகனசகாப்தம்-௲௬௱௫௰௭-இராக்ஷத ௵ ஆடிமீ-௨௰௯௳ ஸ்ரீமது-ராஜமானிப-ராஜஸ்ரீ அரியனூரரசினிலையிட்டரங்கப்பமழவராயர் ஏலாக்குறிச்சித்திருக்காவலூரில் வீரானதேவன்வழிக்குக்கிழக்கு-கோவிலூர்வழிக்குமேற்குக்குட்டைக்குத்தெற்கு பெரியஏரிக்குவடக்குப்பட்டயாவுஞ்சர்வேஸ்வரன்கோயிலுக்குச்சிலாசாதனமாகத்தந்தோம். சந்திராதித்தருங்கல்லுங்காவிரியும்புல்லும்பூமியுமுள்ளளவுஞ்சுகமேயிருக்கவும்-இந்தத்தருமத்துக்குயாதாமொருத்தன்விகாதஞ்செய்தால்கங்கைக்கரையிலே காராம்பசுவைக்கொன்றதோஷத்திற்போகக்கடவான்.

வீரமாமுனிவர் பாடலாய்ச்செய்த இசைத்தமிழ்ப் பிரபந்தங்களியாவையெனில்-முன்கோயிற்கட்டினஸ்தலமாகிய ஆரியனூர்பெயரை நாட்டியுலகத்திலவதரித்த இரக்ஷகருக்குக்கைத்தாதையாயிருந்து அவரைவளர்த்த-அர்-சூசையப்பரைக்குறித்துமூவாயிரத்தறுநூற்றுப் பதினைந்துபாடலுள்ளமுப்பத்தாறுபடலமாகவகுத்துத்தேம்பாவணியென்னும்வேதவிவரணகாப்பியத்தை. ௲௭௱௨௬ம் - வருஷத்திற்பாடினார்- அதில் கவிகளின்திட்பத்தையுங்கருத்தினுட்பத்தையுங்கனவித்துவான்களுங் கண்டுணரமாட்டாமல்- அதற்கு உரையிட வேண்டுமென்று வீரமாமுனிவருக்கு விண்ணப்பம்பண்ணிக்கொண்டதின்மேல் - ௲௭௱௨௰௯-ம் - ஆண்டிலதற்குப் பதவுரையுமிட்டார்-அதிலேவேதாகமநியாயங்களைவிரித்துவிரோதசங்கைகளையறுத்து மெய்ஞ்ஞான போதங்களைவிளக்கி அஞ்ஞானமார்க்கங்களையகற்றி அநேகவிதசரிதைகளை யடக்கிச்சிறந்

தகட்டுரையாய்த்தெவிட்டாதமதுரமாய்த் தெளிந்தகருத்தாய்ச் செப்பரும்பொருளாய்ச்சகலஅலங்காரத்தோடுதொகுத்துப்பாடியிருக்கின்றார். அந்நியபாஷையிலிப்படிப் பாடத்தக்கவல்லவரா ரொன்றுச்சரியப்பட்டு ஆண்டவரளித்தவரப்பிரசாத ஏவலாலொருவர் செய்யத்தகுவதொழிய வேறல்லவென்று கண்டவர் வியந்து மகிழ்ந்துபுகழ்வதுமன்றி அப்பெருங்காப்பியத்தைப் படித்துங் கேட்டுமுணர்ந்தோர்கடவுளளித்த மெய்ம்மறைதெளிந்து அறவழிநடந்து சசடெலாங்கடந்துகதிபெற்றுவாழ்வர்.

வீரமாமுனிவர்பாடியபெருங்காப்பியத்தைக் கண்டு வியந்த வித்துவான்களும்அவருடையமாணாக்கர்களும்அவர்பாடியபிரபந்தங்களுக்குக்குருவணக்கஞ்சொல்லவேண்டுமென்றுவிரும்பியவரநுமதிப்படி அந்நாள்வரைக்கும் அவருக்குவழங்கிவந்ததைரியநாதசுவாமியென்கிற பெயரில், தைரியத்துக்கு- வீரமென்றும்- காமாதிகளைமுனிந்துவென்றவராதலால்முனிவனென்றும்-மா- என்பதுபெருமையைக்குறித்த அடைமொழியாக முனிவனென்பதோடு கூட்டிவீரமாமுனிவனெனக்காரணப்பெயரமைத்து வணக்கங்கூறலாயினார்- இதன்பின்பு - வீரமாமுனிவரானவர்- இரண்டாவதுகட்டினதிருக்காவலூரிலெழுந்தருளியிருக்கும் அடைக்கலநாயகியைக்குறித்துத்தேர்ந்தஅலங்காரமாய்த்திவ்வியமானபேரின்பமாய்த் திருக்காவலூர்கலம்பகமும்- அடைக்கலமாலையும்- கலிவெண்பாவும்- இம்மூன்றுபிரபந்தமும்பாடினார்.

பின்னையும்- பொர்த்துகீசுதேசத்திற்பிறந்துவேதசாட்சியான- அர்- கித்தேரியம்மாளைக்குறித்து அந்த அரியதிருக்கன்னியின் சரித்திரத்தைப்பத்துறுப்பாகப்பிரித்து ஆயிரத்தொருநூறுதொடையாகப்பாடினார் - அதுவெள்ளுரையாயினுஞ்சித்திரவலங்காரமுஞ்சிறந்தமதுரமுந்திளைப்பத்தோன்றும்.

மேலும்- ஆண்டவருடைய அரியதிருப்பாடுகளின்மேல் அவரைக்கன்னிமைகுன்றாது அற்புதமாயீன்ற அமலோற்பவியான- அர்ச்சியசிஷ்டமரியாயிபிரலாபித்ததைக் குறித்து அன்னையழுங்கலந்தாதியும்- அநேகங்கீர்த்தனைகளும்- வண்ணங்களும், தேவாரங்களும் பாடினார்- மிகவுந்தேர்ந்தவித்துவான்கள்தாமேவீரமாமுனிவர் பாடிய இசைத்தமிழ்ப்பிரபந்தங்களின் கட்டுரையலங்காரத்தையுங்கருத்தினுட்பத்தையுங்கண்டுசிரமேற்கொண்டுகளித்துப்புகழ்கின்றார்கள்.

அவரிடத்திலெப்போதுமைந்துகற்றுச்சொல்லிகளிருந்து அவர் பாடும்பாட்டினாலடியை நாலுபேர் நாலேட்டிலெழுத அவற்றைச்சேர்த்தொருவன் புத்தகத்திற்பதியச்செய்வான் - ஏனெனில் - அவர் பாடுகிறவிரைவுக்குத்தக்கதா யொருவனேயெழுதக்கூடாததினால்-சொன்னவோரடியைக்கேட்டவனெழுதுமுன் அவருக்குத்தோன்றுமிரண்டாமடியைமற்றொருவனுக்கும்மூன்றாமடி நான்காமடியையும் அவ்வண்ணமேவெவ்வேறுபெயர்க்குஞ் சொல்லியெழுதுவிப்பார்-இப்படிபாடுகிறவிரைவு-இராக்காலங்களிலவர் நித்திரைசெய்யுமுன்னினைத்துச் சொல்லும்பொழுது முக்கியமாய்நடந்துவரும்.

இவையுமன்றி.வீரமாமுனிவர்செய்தஇயற்றமிழ்ப்பிரபந்தங்களியாவையெனில்-அவர்குருக்களிடமாயிருந்துவேதோபதேசஞ்சொல்ல அனுப்பப்படுமுபதேசிகளவ்வேதியர் தொழிலினுடைய இயல்பும் - மாட்சிமுதலியதன்மைகளுந்தெரிந்து பிறரையுங்கதியேற்றித்தாங்களுங் கரையேறும்படி வேதப்பிரமாணங்களைநாட்டி அவைவிளங்கத்தக்கஉபமான நியாயங்களைக்கூட்டி யவரவருக்குவேண்டின நல்லொழுக்கம் பலவையுங்காட்டிக் கற்பனையலங்காரமாய்க்கருத்தின் கூர்மையாய்ப்பொருந்தத்தீட்டி இருபததிகாரங்களாகப்பூட்டி-தூளாஉயௌ ம் - ஞூ௦,வேதியரொழுக்கமென்றொருவேதவிவரணசாஸ்திரமெழுதினார்.

மக்கட்காதிகாரணமுமவதியுமுன்னர்க்கூறி பாவத்தன்மையினையும்-இடம்-காலம்- செயல்முதலியவற்றைப்பற்றிப்பாவமெய்தும் பலவகையினையும், பாவவிஷத்தையுமதனால் வருந்தீங்கினையும் பின்னர்க்கூறி-மக்களெவர்க்கும் பொய்யாதெய்தும்-சாவு- தீர்வை-நரகம்-மோக்ஷமென்னும் இந்நான்கின்றன்மையினையும் நாலுவகையாய்விளங்கக்காட்டி அவ்வருஷத்திற்றானேஞானவுணர்த்தலென்றொருஞானநூலெழுதினார் - அதில் - சாவைப்பேசும்பொழுது அதனியல்பு-நிச்சயம்-உபத்திரவமிவற்றையும் - தீர்வையைப்பேசும்பொழுது-அகோரம் வரும்வழிமுதலியவற்றையும்- நரகத்தைப்பேசும்பொழுது-அதனியல்பு-இருள்-பூதி- நோய்-யாதனைமுதலியவற்றையும் - மோக்ஷத்தைப்பேசும் பொழுதுஅதனீர்மை-சிறப்பு-ஒளிமை - இன்பமுதலியவற்றையுங்கண்முன்வைத்துக்காட்டினாற்போல-அதனதனுரிமைவிளங்க அற்புதப்பிரசங்கமாயலங்கரித்துரைக்கின்றார்.

தரங்கன்பாடியார் முழுதப்பிதமாய்த்தாங்கள்தமிழில் திருப்பினவொருசுவிசேஷத்தை யொருகெட்டிக்காரன்கையிற் கொடுத்துவீரமாமுனிவரிருக்குமூரிற்போயுபதேசம்பண்ணித்தங்கள்மதத்லதப்பிரபலம்பண்ண அவனையனுப்பினார்கள். அவனுமங்கங்கேதிரிந்து வீரமாமுனிவரிருக்கு மூரிலும்வந்துசிலமனிதரைத்திருப்பப்பிரயாசப்படுவதைக்கண்ட சிலகற்றோர் வீரமாமுனிவரிடத்துச்சென்று விண்ணப்பஞ்செய்துகொண்டதின்மேல்- வச்சிரமணியான்மெய்வேதத்துமூன்றோன்றும் வளையர்கல்களாகிய புறச்சமயங்களையின்னவென்றுகாட்டுவோமென்றும்- மெய்வேதக்குணமின்னதெனவிளக்கியபின்பு, தரங்கன்பாடியார்சமயம்வந்த காரணவகையையும், அவர்கள்போதனையையும், அவர்கள்தமிழில் திருப்பிவைத்திருந்த சுவிசேஷத்தின் தப்பிதங்களையு மின்னவையென்று வேதவுதாரணங்களாலும், மெய்யான நியாயங்களாலுந்தெளிவாய்க்காட்டி- ௲௭௱௨௰௮ம் ௵, வேதவிளக்கமென்றொருபுத்தகம் பதினெட்டதிகாரமாகவெழுதித்தரங்கன்பாடியாருக்கனுப்பி, அந்த வேதவிளக்கத்திலுள்ள விஷயங்களைக்குறித்துத் தரங்கன்பாடியார் ஆக்ஷேபிக்கிறதா யிருந்தாலதற்குத்தகுதியான சமாதானங்கொடுப்போமென்று தரங்கன்பாடியையடுத்த திருக்கடையூரில் வந்துவீரமாமுனிவர்- எட்டுநாள்வரைக்குங்காத்திருந்தும், அதைக்குறித்தொருவரும் பேசவராததைக்கண்டு மறுபடியுந்தாமிருக்கிறஸ்தலத்துக்குப்போய்விட்டார்- அவர்களிதைமறுக்கமாட்டாமலநேகநாளைக்குப்பின்பு- கத்தோலிக்குவேதத்தின்மேற்பூருவத்திலொருவன் போர்த்துகீசுபாஷையிலெழுதின திருச்சபைபேதகமென்னும் வேறொருசிறியபுத்தகத்தைத் தமிழிலெழுதி வீரமாமுனிவருக்கனுப்பினார்கள்- அவரதைப்பரிசோதித்து அதிலிருந்தஎழுபத்தெட்டுப்பொய்களையுந்தப்பிதங்களையு மெய்யான நியாயப்பிரமாணங்களைக் கொண்டெடுத்துக் காட்டிப் பேதகமறுத்தலென்றொரு புத்தகமெழுதிமீளவுந் தரங்கன்பாடியாருக் கனுப்பினார்- அக்காலத்தில் அதன்மேலவர்க ளொன்றுஞ் செய்ததைக்காணோம்.

வீரமாமுனிவர்மேற்சொன்னவேதவிவரணப்பிரபந்தங்களெல்லா முக்கியமாயிந் துக்கிறிஸ்தவர்களுக் குபயோகமாகச்செய்ததுமல்லாமல் இந்துக்களுக்கெல்லாம் பொதுப்பிரயோசன மாய்த்தமிழ்ப்பாஷைக்குவேண்டிய மகாதெளிவான இலக்கணமும்,

அகராதியுஞ்செய்தார் - அதெப்படியெனில் - தமிழிலே முன்னோர் செய்த இலக்கணநூலெல்லாஞ் செந்தமிழ்மொழிகளிற் சிறப்பித்தெழுதியிருக்கின்றமையால் தமிழிலக்கணத்தைப் படிப்பவரரிதாயிருக்கிறதென்பதையும் - படிப்பவர்க்குள்ள பிரயாசத்தையும் வீரமாமுனிவர்கண்டு அதையாவரும் விரும்பியெளிதாய்ப் படிக்கும்பொருட்டுமுன்செந்தமிழ் மொழியிலிருந்தவிலக்கணத்தை ௲௭௱௩௰-ம்-௵-இளந்தமிழுனாயாயெழுதி அதற்குத்தொன்னூல்விளக்கமென்றுபெயரிட்டார் - ஆனவிப்படியிளந்தமிழிலெழுதினதுமுன்னோர்தந்த நூற்களுக்கிது அதிகமாய்விரிந்துபோகாமலுஞ்சுருங்கிக்குறைந்துபோகாமலும் - பின்னறியத்தக்கதுகளை நீக்கியும் - முன்னறியத்தக்கதுகளைக்கூட்டியும்முக்கியமாய் வேண்டின விதிகளெல்லாமுழுமையுந்தெளிவாய்விளக்கித்தேர்ந்த நூலாகமுடித்தார். அதுதமிழ்க்கடலை நீந்திப்பெரும்பயனாகிய ஒளிமணிகளையெடுத்தணியும் படிகையிற்றந்தசிறந்த இலக்கணத்தெப்பமாகத்தோன்றிவிளங்குகின்றதாமே.

தமிழ்ப்பாஷைக்கிந்நாட்டிலேமுற்காலத்தில்தெளிவான அகராதியின்றிப்பலவிதபாடலாகவுஞ் சூத்திரங்களாகவு முள்ளநிகண்டுதிவாகரங்கள்மாத்திரமேயிருந்தன - வீரமாமுனிவரதுகளையெல்லாஞ்சேர்த்து இரோப்பியருடைய அகராதிகளைப்பார்க்க அதிகந்தெளிவான அகராதியொன்று ௲௭௱௩௰௨-ம்-௵-செந்தமிழுக்குச்செய்தார் - அதெப்படியெனில் - ஒருபெயருக்குப்பலபொருளிருக்கிறதெல்லாம், முதலாவதுபெயரகராதியென்றும் - ஒருபொருளுக்குப் பலபெயரிருக்கிறதெல்லாம் இரண்டாவதுபொருளகராதியென்றும் - இரண்டுமுதலநேகஞ்சேர்தொருசொல்லாகவழங்குவதெல்லாம் - மூன்றாவதுதொகையகராதியென்றும் - ககரமுதல் - னகரவீறாகவுள்ளபதினெட்டெழுத்தும் - குறிலும் - நெடிலுமாயெதுகைபற்றிவருந்தமிழ்ப் பதங்களெல்லா மடுக்கிநான்காவதுதொடையகராதியென்றும் வகுத்து - இந்நான்கிற்கும்பொதுநாமமாகச் சதுரகராதியென்றுபெயரிட்டுச் செறிந்தகாட்டுக்குச் சமானமாய்த்தமிழ்ப்பாஷையிலிருந்த - திவாகரநிகண்டுகளைச்சிறந்தசிங்காரத்தோட்டம்போலத்திருந்தத்தோன்றும்படிக்குத்தெளிவாகச்செய்தார்.

வாக்கியசித்தாந்தமிவற்றின்வகையைவிளக்கி - திதிக்கணிதமென்றும் - திதிக்கணிதமென்று மிருவகுப்பாகவும் - இவற்றினுட்பிரிவு

ள்ளபலவகுப்பாகவும் வகுத்து - திருச்சபைக்கணிதமென்றொரு சோதிடநூல்செய்தார்-மேலும் வாதம் வைத்தியமிவற்றிற்குவேண்டுஞ்சிலவளமான நூற்களைச்செய்தாரென்று கேள்வியாயினுங் கிடைக்கவில்லை.

இந்துக்களுக்குப்பொதுப்பிரயோசனமாகச்செய்த மேற்சொன்னநூற்களன்றி - இரோப்பியருக்கும் - விசேஷமாயிரோப்பிலிருந்துவருங் குருக்களுக்கும் பொதுநலமாகவும் - செந்தமிழென்றும் கொடுந்தமிழென்றுமிருவகையாய் வழங்குந் தமிழ்ப்பாஷையையவர்களெளிதாய்க்கற்கும்படி இருவகைஇலக்கணங்களும் அகராதிகளும் - லத்தீன்பாஷையில் மொழிபெயர்த்து ஏராளமாயெழுதிப்பரப்பினர் - அஃதெப்படியெனில் - இலக்கணமில்லாதாயினுங்கற்றோர்களாலுங் கல்லாதவர்களாலுஞ் சாதாரணமாய்வழங்கப்படுங்கொடுந்தமிழுக்கு இலக்கணங்கற்பித்து அதை - ௲௭௱௨௰௮-ம்-(வரு), லத்தீன்பாஷாந்தரம்பண்ணி - ௲௭௱௩௰-ம் (வரு) தரங்கன்பாடியில் அச்சிற்பதிப்பித்தார் - மீளவும் - ௲௭௱௩௰ - ம் - (வரு), செந்தமிழுக்கு எழுத்துச்சொல் - யாப்பு - இம்மூன்றையுஞ் சேர்த்து அதற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் - அதற்குப்பின்பு - அவர்தமிழிலுண்டுபண்ணின ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கத்தைலத்தீன்பாஷையில் விவரணம்பண்ணினமொழிபெயர்ப்பும் - கொடுந்தமிழுக்கும் - லத்தீனுக்கும் அகராதியும் போர்த்துகேசுபாஷையையும் - லத்தீன்பாஷையையுஞ்சேர்த்துத்தமிழிலேமொழிபெயர்த்தமற்றோரகராதியும் - கொடுந்தமிழ்வாசிப்பவர்க்குப் பரமார்த்த குருக்கதையும் - அதற்கு லத்தீன்மொழி பெயர்ப்பும் செந்தமிழ்வாசிப்பவர்க்குவாமன்சரித்திரமும் அதற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் - வாக்கியசித்தாந்த கணிதத்திற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் - தெலுங்குபாஷைக்கு லத்தீனிலேவியாகரணமுஞ்செய்தார்.

இவையல்லாமல் திருவள்ளுவர்குறளை - லத்தீன்பாஷையிலேமொழிபெயர்த்துவியாக்கியானம்பண்ணினர். அந்தநூல்சென்னைக்கல்விச்சங்கத்துக்கின்னங்கிடைக்கவில்லை - மேலுமவர்செய்ததாய்க் கேள்விப்பட்டுக்கிடையாமலிருக்கிறநூற்களின்னஞ்சிலவுளவாம்.

இதற்குக்காரணமென்னவெனில - உலகத்திலுள்ளசகலசீவப்பொருட்களுக்கும் பாலாகச்சுரந்துபொழிந்து அவைகளைவளர்க்கின்றமேகமானது ஓரோரிடத்திடித்துச் சிலசேதங்களை வருவித்

தாலுமதைக்குறித்து அம்மழைமேகத்தைப்பகைத்து அதுவுலக
த்துக்கெல்லாமாகாதென்பாரொருவருமில்லையே-அப்படியிருக்க
ஓரிடத்திலாயினுஞ் சேதமுண்டாக்காமலுலகத்திலுள்ள எண்ணிற
ந்தமன்னுயிர்களுக்கிரங்கி ஞானமிர்தம் பொழிந்தூட்டியவைக
ளைக்காப்பாற்றிமேற்கதிபெறத்தக்கநன்னெறியில் வளர்த்துக்கொ
ண்டுவந்தசேசுசபையைப்பகைத்து அதுவுலகத்துக்கெல்லாமாகா
தென்னலாமோ-நோயுள்ளகண்ணோர்தங்களுக்குப்பகையானசூரி
யப்பிரபைமற்றையாவர்க்குமாகாதென்றதைவிலக்கவேணுமென்
றாற்போல- அரசராயினும்அறவழிதப்பினாலஞ்சாமலவரைக்கடிந்
திடித்துப்புத்திசொல்லுமரியமெய்ஞ்ஞானக் குருத்துவநெறியை
மேற்கொண்டசேசுசபையவ்வரசர்க்காகாமையா லதைவிரோதித்
து அதுவுலகத்துக்கெல்லாமாகாதென்றவர்கள் - அர்.பாப்புவினிட
த்தில்முறையிட்டுக்கொண்டு அதையெடுத்துப்போடக்காரணமா
யினார்கள் -ஆனாலச்சபையெந்நாளுமெவ்விடத்து மிருக்கவேண்டு
மென்று - அர்-பாப்புவுக்குச்சித்தமாயிருந்தாலும்- மேற்சொல்லி
யவரசராலிரோப்புதேசங்களிலதிக கலகம்வராமலிருக்கஅவர்கள்
கேட்டமனுவின்படி சேசுசபையையெடுத்துப்போடக் கட்டாய
மாயுடன்பட்டார் - வேதாகமங்களெல்லாம் ஓதியுணர்ந்துமெய்ஞ்
ஞானநூற்களெவையும் விளங்கத்தெளிந்து பாலசந்நியாசம் பண்
ணி பரமகதியின்பாக்கியமே யெண்ணித்தங்களூட்டுக்கான உடை
களைவிடுத்து இத்தரித்திரநாட்டிற்கேற்றதவவேடந்தொடுத்துமே
லானவினியவூண்களைமறுத்து மிருதுவானதங்கள்தேகங்களையொ
றுத்துக்·கானலடர்ந்தஇந்நாடெலாந்திரிந்து கதிதரும்வேதநலங்
களைச்சொரிந்து அந்தகாரமாகிய அஞ்ஞானத்தால் மூடப்பட்ட
இந்நாட்டிலேசூரியப்பிரபையாகிய மெய்வேதநூற்களை யளவில்
லாமலெழுதிப்பரப்பி யிந்நாட்டைவிளக்கிக்கொண்டிருந்த நிகரி
ல்லாத அரியசேசுசபை இரோப்புதேசத்தி லெடுபட்ட அநேக
வருஷகாலமாயிந்நாட்டிற்குஅச்சபைக்குருக்களின்வருகைபற்று
ப்போனதினாலே மேற்சொல்லிய வேதவிவரணப்பிரபந்தங்களா
கியதடாகங்களும்வற்றிக் கல்விசாஸ்திரநூற்களாகியசலச்சூத்திரக்
கால்களுந்தூர்ந்துபோயின -ஆதலாலருமைதெரிந்தவற்றைமுக்கி
யமாய்க்காப்பாற்றுகின்ற சேசுசபைஇந்நாட்டி லில்லாமையால்
தத்துவபோதகசுவாமி முதலானபலகுருக்களா லுண்டுபண்ணப்ப
ட்ட எண்ணிறந்தநூற்களிலங்கங்குசிலநூற்களழிந்துஞ் சிதைந்து

ம் - எங்கெங்குஞ்சில நூற்கள்சிதறியும்பரந்தும் போயினமையா
லிந்நாளிலவையோரிடத்தொருப்பட அகப்படத்கரியவாயின.

வீரமாமுனிவர் - அதற்குமேல் - திருச்சிராப்பள்ளிக்கு நபாபா
யிருந்த சந்தா சாயபைத்தாஞ்சந்தித்துப் பேசவேண்டுமென்று
பார்க்கும் - இந்துஸ்தானியும் மூன்றுமாதத்திற்குள்ளாகப்படித்துப்
பின்பு சந்தாசாயபைக்கண்டுபேசும்பொழுது சந்தாசாயபு - இவ
ரையற்புதமான்புத்திமானென்று நிச்சயித்திவர்மேலதிகபிரியா
கியிவருக்கு - இஸ்மத்சந்நியாசியென்று பெயரிட்டுத் தன்பாட்டன்
ஸாத்துல்கான் ஏறின தந்தப்பல்லக்கைக் கொடுத்தான் - இஸ்மத்
என்பது - அருபிபாஷையில் குற்றங்களைக்கடிந்திருக்கிற - பழுதற்
ற - என்றுபயனும். பின்னுமிவர்செலவுக்குக் கொள்ளடத்துக்கு வட
க்கு திருச்சிராப்பள்ளிச்சீமையைச்சேர்ந்த உக்களூர் - மால்வாய்
அரசூர் - நல்லூர் - வருஷத்திற்கு - ௰௨௲ரூபாயெடுக்குமிந்நான்கு
கிராமங்களையுஞ்சர்வமானியமாகப்பண்ணி - இவரைத்தன்னிடத்தி
ல் திவானாகவிருக்கமிகவும்பிரார்த்தித்து - திவானுத்தியோகங்கொ
டுத்துவைத்துக்கொண்டார். இப்படிக்கவர்திவானாகவிருக்கையில்
வெளியேசாரிபுறப்பட்டால்இத்தேசத்துப்பிரதான இந்துக்குரு
க்களுக்குநடந்துவருகிறசிறப்பைப்போலஇந்துக்கிறிஸ்தவர்களு
டையகுருவாகியவீரமாமுனிவருக்குஇந்நாட்டுவழக்கம்பற்றிமேற்
சொன்ன எப்போதுமுள்ள சிறப்புகளோடுகூட - பீதாம்பரத்தாற்
செய்த பன்னிரண்டு குமாவாணக்கொடியும் - நாலுவெள்ளித்தடி
க்காரரும் - முப்பதுகுதிரைமேற்சேவகரும் - குதிரைமேல் டங்கா
வும் - நாகசுரமும் - இவரேறுகிறவொருவெள்ளைக்குதிரையும் - ஒரு
கறுப்புக்குதிரையும் - சேணமுதலியசிங்காரிப்போடுமுன்னேநட
க்க - அர்க்கார் - டலாயித்துகள்முன்னே பின்னாலே யொட்ட
கத்தின்மேல் நகராவும் - ஓரொட்டகத்தின்மேல் கைத்தாளமுமுழ
க்கிக்கொண்டு - மற்றோரொட்டையின்மேல் பூசைபண்ணுகிறதற்
குவேண்டியவஸ்திரபாத்திரமுதலாகியவஸ்துக்களும் மூன்றொட்
டையின்மேற்கூடாரங்களும் மற்றைச்சாமான்களும் வரும்படி
போவார் - இவரிறங்குகிறவிடங்களிலும் - நபாபுகச்சேரியிலும்புலி
த்தோலாசனத்தின்மேலுட்காந்திருப்பார்.

இப்படியேலௌகிகசம்பந்தமான திவானுத்தியோகத்தைப்
பார்த்துக்கொண்டுவந்தாலும் - தமிழ்க்கலைஞானஆராய்ச்சியிலு
ம் - கவிபாடுந்திறமையிலுங் கனமுயற்சியுள்ளவரா யிருந்தாலும் -

வைதீகச்சம்பந்தமான அவர்சுயத்தொழிலாகியகுருத்துவநெறியில் மேன்மேலுமதிகரித்து அதைநிறைவேற்றிக்கொண்டும் வருவார்- இதுவுமன்றி; அவர்புறச்சமயத்தாருடனேதர்க்கவாதம்பண்ணியவர்களைக்கிறிஸ்துவேதத்திற்சேர்த்துக்கொண்டுவருவார் - சாஸ்திர காவியங்களிலே குறள்-நாலடி-சிந்தாமணி-கம்பராமாயணமிவற்றைப்பரிசோதித்து அவைகளில் மிகுந்த சந்தோஷமடைந்து வருவார்- பின்னுமவரிடத்தி லநேகவித்துவான்கள்தங்களாற் கூடியமட்டுமவரைச்சோதித்து அவர்கள்சோதிப்புக் கவரக்ப்படாமையைக்கண்டுபோய்விடுவார்கள்.

இப்படிநடந்துவருங்காலத்தில் நன்றாகக்கற்றறிந்தஇரண்டு பண்டாரங்கள் வாயினாற்பேசியாவதில்லையென் றியோசித்துக்கையினாற்பேசுஞ்சாடைகாண்பித்திவரைச்செயிக்கவேண்டுமென்றிவரிடத்திற்குவந்து உபசாரமுறைமைகள்செய்துகொண்டபின்னும் மூடன்வாயினாற்பேசவேண்டியதுகளைக் கைச்சாடையாற் பேசிவேண்டுமென்ன-இவருஞ்சம்மதித்தென்னபேசவேண்டுமென்று கைச்சாடையிற்கேட்க-அவ்விருவருமிரண்டுவிரலைக் காண்பித்தால்நாமிருவர்வந்தோமென்று நினைப்பாரதினாலே மோடனஞ்செய்யலாமென்று நினைத்து அவ்விருவரிலொருவனிருவிரலைநீட்டிக்காட்ட அப்பொழுதிவர் அர்த்தம்பண்ணிக்கொண்டதாவது - வானம்-பூமி-சந்திரன்-சூரியன்-ஆண்-பெண்-தாய்-தந்தை-மோக்ஷம்-நரகம்-மெய்க்குரு-பொய்க்குரு-நல்வினை-தீவினை பாவம்-புண்ணியம்-மித்துரு-சத்துரு-அழுதல் சிரித்தல்-சாவு-வாழ்வு-தூங்கல்-விழித்தல்-மூடல்-திறத்தல்-இப்படிக்கிரண்டிரண்டாகுமநேகங்களைநினைத்துத்தமதொருவிரலைநீட்டிக் காட்டிக்கையோடுகையறைந்தார்- அவர்களதைக்கண்டுகலங்கிப் பூலோகபரலோகத்தையும்-சப்தசாகரத்தையும்-தாபரசங்கம-பூதியமுதலானதுகளையும்படைத்தளித்தவனொருவனெனத்தெளிந்துகையோடுகையறைந்துகாட்டியவிவரந்தெரியாமல் மயங்கிநியாயந்தெரியச்செய்யவேண்டுமெனவாயினாலேபேசக்கூடாதென்று வந்தவிரதத்திற்குவிரோதமாயிவரைக் கேட்கச் சகலத்தையுமுண்டு பண்ணினவனொருவர்தவிர மற்றதுகளெல்லாம் பொய்வாழ்வெனச்சொல்லக் கேட்டுமறுமொழிபேசாமற்போய்விட்டார்கள்.

இதன்பின்பு-கல்விப்பெருக்கத்தாலகங்கரித்தஒன்பதுசடை பண்டாரங்கள்வந்து வீரமாமுனிவரோடு தர்க்கம் பண்ணியவரை

வெல்லவேண்டுமென்று கருதித் தோற்றவர்கள்வெற்றிபெற்றவர்க ள்சொற்படிநடப்பதென்று உடன்படிக்கை பண்ணிக்கொண்டுதர் க்கிக்கத்தலைப்பட்டார்கள் - ஒருமாதமட்டும் பண்ணினதர்க்கத்தி லவரைவெல்லமாட்டாமல் தாங்களே தோர்த்தபடியாலவரில்ஆறு பேர்சத்தியவேதத்திற்குட்பட்டார்கள் - மூன்றுபேர்சடைகளறு பட்டுவெட்கத்தினல்மேல்சீமைக்குப்போய்விட்டார்கள் - அந்தச் சடைகள்திருககாவலூர்கோயில்மண்டபத்தில் வைக்கோற்கட்டுப் போல ஐதர்கலாபனைமட்டுந்தொங்கிக்கிடந்தன.

இப்படிக்கிவர்தேச சஞ்சாரம் பண்ணிக்கொண்டு போகிற போது சிவக்ஷேத்திரமாகிய வைத்தீஸ்வரன்கோயிலென்னு மூரில் வந்திறங்கியிருந்து சீஷர்கள்கற்றுச்சொல்லிகளுடனேவெளியேயு லாத்தப்புறப்பட்டுவினைதீர்த்தான்கோயி லருகாமையில் வருகிற போதந்தக்கோயிலில்வெகு ஆடம்பரமாயிருப்பதைக்கண்டு அந் தக்கோயிலுக்குவந்திருந்தவர்களிற் சிலயோக்கியர்களைக்கண்டிஃ தென்னகோயிலென்றார் - அவர்களிது வினைதீர்த்தான்கோயில் - கூ ன் - குருடர் - முடவர் முதலியபிணியாளர்கள் வந்துவணங்கி வழிப ட்டாலந்தவினைகளெல்லாஞ் சூரியனைக்கண்டவிருள்போல நீங்கு மென்றுறுதியாகச்சொன்னார்கள் - அதற்கிவர்சொன்னமறுமொழி யாவது.

(வெண்பா.)

வாதக்காலாந்தமக்குமைத்துனற்குநீரிழிவா - ம்
போதப்பெருவயிறும்புத்திரற்கு - மாதனையி - ல்
வந்தவினைதீர்க்கமருந்தறியான்வேளூரா - ன்
எந்தவினைதீர்த்தானிவ - - - ன்.

(இதன்பொருள்.)

வேளூரானாகியவைத்தியநாதசுவாமியானவற்கொருகால்வாதமா ம் - தனதுமைத்துனனாகியவிஷ்ணுவிற்குநீரிழிவாம் - தனதுபிள்ளை க்குமிகவும்பெருவயிறும் - இப்படித்தங்களுக்குவந்தவியாதியைப் போக்கஅவுஷதந் தெரியாதவன்பூலோகத்திலெந்தவினை தீர்த்தா னென்றவாறு.

வாதக்காலென்றது - காளியுடன்வாதிட்டாடினபோதொருகா லைத்தூக்கியாடினாராகையால்வாதக்காலெனவும் - விஷ்ணுவிற்குப் பாதத்திற்கங்கையுற்பத்தியாதலால்நீரிழிவென்றும் - புத்திரற்கு இயல்பாகவேபெருங்காத்திரமாகையாற்பெருவயிறெனவுஞ்சாது

ரியமாகப்பிரசங்கம்பண்ணுகையிற் கேட்டிருந்தசைவர்களெல்லா ர்திகைத்துநின்றிவனைச்சந்தோஷித்தார்கள். அவருபதேசமகிமை யினாலிந்தத்தேசஸ்தர்களிற்பலபேர்கிறிஸ்தவர்களானார்கள்.

உன்னைககாத்தலும்பிறரையுணர்த்தலுஞ்செய்து வீடுபெற் றுய்வாயென்று அர்-சின்னப்பரருளிச்செய்த வேதவசனத்துக்கு முழுதுமுடன்பட்டுவிளங்கினகாரணக்குருவாகியவீரமாமுனிவர்- தமதான்மாவையும் பிறரான்மாக்களையும்-உலகுடல்பசாசென்னு ம் அலைகடலினின்றுங்கரையேற்றும்பொருட்டு அல்லும்பகலுமரி யபிரயாசைகளையனுபவித்துச் சர்வேஸ்வரனுடையவேதத்தைப் பிரசங்கப்பண்ணிப்போதித்துக்கொண்டிருந்தார்.

முடிவிலிவர்சந்தாசாயபுக்குத் திவானாகத்திருச்சிராப்பள்ளி யிலிருக்கையில்- ௲௭௱௪௰-ம்-வருஷத்தில்- நாதர்சிங்குபாளையம்- திருச்சிராப்பள்ளியில்வந்துமுத்திக்கைப்போட்டுக்கொண்டிருந் துதிருச்சிராப்பள்ளியைப்பிடித்துக்கொள்ள எத்தனமாயிருக்கிற போதிவர் வெளிப்பட்டுஉலாந்தக்காரருடையகாயல்பட்டணத்திற் கடுத்தமணற்பாடென்னுமூருக்குப்போயங்குள்ள சேசுசபைமட த்திலவரந்தியமட்டுமிருந்தவிரண்டுவருஷகாலமுமுதிர்ந்தவயதின ராயினும்உயர்ந்தமனமுயற்சியோடங்கே வேதோபதேசம்பண் ணிக்கொண்டும்- தாம்பாடியபெருங்காப்பியமுதலானவற்றைப்பி ரசங்கித்துக்கொண்டுமிருந்தார்- ஈந்தியாவில்வந்தநேகம்பிரஜை கள்பரலோகஇன்பவெள்ளத்திற்றிளைந்துவிளையாடும்படி ஆற்றற் கரியமுயற்சித்துன்பவெள்ளத்திலுலைந்துவருந்திய சீவகாருண்ணி யராகியவீரமாமுனிவரால்அப்பரலோகத்தையலங்கரிக்க - ௲௭௱ ௪௰௨-ம்- ஆண்டு- ஆண்டவர்க்குத்திருவுளமாயிற்று.

வீரமாமுனிவர்சரித்திரமுற்றிற்று.

# வீரமாமுனிவர்சரிதைப்

## புறநடை.

கடவுள்திருஅவதாரமாயினபின்புகடவுளுடையபிரதான சீஷர்களிலொருவராகிய-அர்- தோமையாரென்னுமாதவரிஷியா னவர்ஆதிகாலத்திலிந்த நமதுஆசியகண்டத்திற்குட்பட்ட இச்சிந் துராசியத்திற்குவந்து சத்தியவேதவிசுவாசவித்தானதை பூன்

திமுளைப்பித்தஆண்டு-௬௰௫ - இரோப்புக்கண்டத்திலும்இரக்ஷகரு டையசிஷர்கள்சென்றுவேதவிசுவாசவித்தானதைவிதைக்க-அது அங்கங்கேமுளைக்கப்பட்டு வளரத்தொடங்குகையில் வளரவொட் டாமலழித்த அஞ்ஞானதுர்மதச் சக்கிரவர்த்திக ளிருந்திராச்சிய பரிபாலனம்பண்ணினஇரோமாபுரிதானேமேற்சொல்லியவேதத் துக்குத்தலையிடமாக மெய்ஞ்ஞானத் திருத்தேசிகரிருந்து வேத பரிபாலனம்பண்ணும்படி கடவுளுக்குத்திருவுளமாயின ஆண்டு-௩௱௰௧-அவ்வேதவிசுவாசவித்தானதங்கேபயிராகியோங்கிவளர்ந் து நிலைபெற்றவிருக்ஷமாகப்படர்ந்தபின்பு மற்றஇரோப்பியருக் குமுந்திப்பொர்த்துகீசுக்காரர் ஆதியிலிந்தஞ்நிக்குவந்தவருஷம் ௲௪௱௯௰௮-மேற்சொல்லிய இரோமைநகரத்திற் சத்தியவேதத் திருச்சபைக்குத்தலைமைபெற்றுவீற்றிருக்குந் திவ்வியபீடாதிபதி யாகிய-அர்-பாப்பானவர்கற்பித்தபிரகாரஞ்சேசுசபைக்குருவாகி ய-அர்-சவேரியாரென்னுந் திருத்தவமுனிவரானவர் இந்நாட்டுக் கெழுந்தருளிவந்தவருஷம் ௲௫௱௪௰௧ - இதன்பின்பு இரோமை ப்பிராமணரென்னும்-தத்துவபோதகசுவாமியிந்தத்தேசங்களுக் கெழுந்தருளிவந்தவருஷம்-௲௬௱௬-அவரிங்கே-௪௰௯ வருஷகா லமிருந்தபடியாலவர்பரகதியடைந்திருந்த ௲௮௱௨௰௨-ம்-வருஷ மட்டாக - ௱௬௰௬-வருஷமாயிற்று- ஆதலாலாதியிலேயிந்நாட் டில்வேதமுபதேசிக்கப்பட்டு - ௲௪௱௩௫ - வருஷமாயினபின்பு இரோப்பியரிந்தத்தேசங்களுக்குவந்தார்கள். இரோப்பியரிங்கே வந்து-௩௱௨௰௪-வருஷமாயிற்று-வீரமாமுனிவர்வந்து - ௱௨௰௨ ஆண்டாயினதெனக்காண்க- இதிலேயறியத்தக்கமுக்கியமான சில விசேஷவிவரணமுண்டாம்-அஃதென்னவெனில்-இந்நாட்டிலுள் ள இந்துக்களிலும்- இரோப்பியரிலுஞ்சிலர் ஆராய்ந்தறியாததினு லிங்குள்ளஇந்துக்கிறிஸ்தவர்களை இரோப்பியரிங்கே வந்தபின்பு இரோப்பியருடையவேதத்தில்நூதனமாகப் பிரவேசித்தவர்களெ ன்றுசாதாரணமாய்நினைக்கிறார்கள்-இதுவுமல்லாமல்-மேலெழுதி யவீரமாமுனிவருடையசரித்திரத்தைவாசிப்பவர்கள் முதலாய்மே ற்படிசரித்திரத்திற்காட்டியபடிஆதியிலேவேதபோதகஞ் செய்த இந்த அசியகண்டத்திற்குட்பட்டயூதநாடராகிய-அர் - தோமை யாரென்பவரும்வேதமுபதேசிக்கப்பட்ட அநேககாலத்திற்குப் பின்புவந்த இரோப்புக்கண்டத்தைச்சேர்ந்த தேசஸ்தர்களாகிய -அர்-சவேரியார்-தத்துவபோதகசுவாமி-வீரமாமுனிவர்முதலா

ஞவர்களைப்போலே இரோப்பியரென்றும்-கிறிஸ்துவேதந்தானே இரோப்பியருடையவேதமென்றுமெண்ணுவார்கள். ஆனால்பூகோளவிவரங்களையும், பூர்வபரம்பரைகளையும், பொய்யாதவேதசரித்திரங்களையும் ஆராய்ந்துபார்க்கிலப்படியெண்ணுவதற்கு எவ்வளவேனுமிடமிராது- அஃதெவ்வாறெனில்- இந்தப்பூகோளமானது அசியகண்டம்-அபரிக்ககண்டம்-அமேரிக்ககண்டம்-இரோப்புக்கண்டமெனநான்கு கண்டங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது- இதுகளில் அசியகண்டத்திலுட்பட்ட. துர்க்கி-சீரியா-அருபி பார்சு-இந்துஸ்தானி-திபேத்-தார்த்தாரி சினமுதலானராச்சியங்களுக்குள்ளே அசியகண்டத்தில் தென்கிழக்குப்புறமா யிருக்கிற இந்துஸ்தானியென்கிறதேசத்திலே- இந்துக்கள்- அல்லது-ஈந்தியரென்னும் யாமிருக்கின்றோம்- இவ்வசிய கண்டத்திலேதானேவடமேற்குப்புறமாயிருக்கிறசீரியவென்னு மிராச்சியத்தில்தேவபூமியென்னும் யூதேயநாட்டில் இரக்ஷகர் திருஅவதாரஞ்செய்தருளினார். அவதரித்தநாதரோடுகூடவிருந்த பன்னிரண்டு பிரதானசிஷர்களிலொருவராகிய-அர்-தோமையாரென்னுமாதவமுனிவர் - கடவுள் திருஅவதாரஞ்செய்த - ௪௰௫ - ம் - வருஷத்திலேதானே இந்துஸ்தானிலயச்சேர்ந்த இந்த ராச்சியங்களில் மலையாளத்தில்வந்து வேதமுபதேசித்துசந்நியாசமடங்களையு மேற்படுத்திக்குருக்களையுந்நியமித்துக்கடைசியில்மயிலாப்பூருக்குவந்திருந்துமரணமாகி முத்திபேறுபெற்றார் -அவருமிரோப்பியரல்லஅவர்போதகஞ்செய்தபாஷையு மிரோப்புபாஷையல்ல-அப்படியிருக்க - இந்தநமது அசியகண்டத்திற்குட்பட்ட தேசபாஷைகளிலொன்றாகியசீரியபாஷையிலே-அர்-தோமையார் வேதோபதேசம்பண்ணினபிரகாரம்மலையாளத்துக்குருக்கள் அந்நாள்முதற்கொண்டிந்நாள்மட்டும் அப்பாஷையிலேவேதமந்திரங்களைச்சொல்லிப்பூசைசெய்கிறார்கள்- இதற்குத்திருஷ்டாந்தமென்னவெனில். தமிழில்வேதமந்திரங்களில்வழங்குகிறசிலுவையென்னு மொழியேமேற்சொல்லிய சீரியபாஷைச்சொல்லென்றறியவும் அந்நாள்முதற்கொண்டிந்நாள் மட்டும்இத்தேசங்களிலுள்ளசமஸ்தசாதியாரிலுமெண்ணிறந்த மனிதர் இத்தேசங்களில்வழங்குகிற மற்ற மதாச்சாரங்கள்நீங்கலாகத்தங்கள்தேசாச்சாரங்களிலும் குலாச்சாரங்களிலு மெவ்வளவேனும் வழுவாமல் சர்வேஸ்வரனுடையசத்தியவேதத்தையனுசரித்துக்கொண்டுவருகிறார்களாதலால் - கிறிஸ்துவேதமிந்தத்தேசங்

ளிலேகடவுளவதரித்த நூறுவருஷத்துக்குள்ளாகப்போதகஞ்செய்யப்பட்டதென்பதுபரம்பரைவர்த்தமானங்களாற்பிரத்தியட்சமாமே. பின்பு, கடவுளவதரித்த, ௲௪௱௯௰௮, ம்(வூ), வைகாசிமீ ௰௮௳ இரோப்பியரில் - பொர்த்துகீசரொன்னுஞ்சாதியாரிந்தஇந்துதேசத்துக்காதியில்வந்தார்கள். ௲௫௱௯௰௧, ம் - (வூ), இங்கிலீசுக்காரர்கள் வந்தார்கள். ௲௫௱௯௰௪ - ம் (வூ), உலாந்தக்காரர்கள்வந்தார்கள் - ௲௬௱௬௰௮, ம். (வூ) பிராஞ்சுக்காரர்கள்வந்தார்கள்இப்படியிரோப்பியரிங்கேவந்துவர்த்தகங்கள்செய்யவும் - இராச்சியங்களையாளவும் - மற்றுமுள்ளதொழிலாளிகள்தங்கள்தங்கள் - லவுகீகத்தொழிலைச்செய்யவும்வந்ததுபோலே. அவர்களிலேகுருக்களாயிருக்கிறவர்களுந்தங்கள்வைதீகத்தொழிலாகியவேதபோதகஞ்செய்யவந்தார்கள் - அஃதெப்படியென்னில் - இந்த இந்தியில்மேற்சமுத்திரக்கரையிலேமேற்சொன்னபொர்த்துகீசுக்காரர்முதல்வந்திறங்கினபொழுது அந்தக்கரை துறையிற் கட்டியிருந்த அனந்தமானகோயில்களையும். அனந்தமாயிரங்கிறிஸ்தவர்களையுங்கண்டு அவர்களாச்சரியப்பட்டுப்பிரமித்து - அர் - தோமையாராலிந்தத்தேசஸ்தர் ஆதியிலுபதேசம்பெற்றார்களென்ற பூர்வோத்திரங்களெல்லாமறிந்து. அர். தோமையார்மரணமாயினவிடமெங்கேயென்று விசாரித்தங்கேயிருந்துகீழ்ச்சமுத்திரக்கரையிலிருக்கிற மயிலாப்பூருக்குவந்து அவர்மரணமாயினவிடத்தைக்கண்டங்கேமுன்னிருந்ததைவிடபிரபலமானகோயில்கட்டுவித்து வேதோபதேசம் பண்ணுகிறதங்கள் சாதிக்குருக்களையும்நியமித்துவைத்தார்கள் - அதுமுதற்கொண்டு இரோப்புதேசப்பாஷைகளி லொன்றாகிய லத்தீன்பாஷையில்வேதமுபதேசிக்கிறஇரோப்புக்குருக்கள்வரத்தொடங்கினார்கள் - இவ்வண்ணமேமற்றஇரோப்பியர்வந்திறங்கினஅந்தந்தவிடங்களிலே வேதோபதேசம் பண்ணுகிற குருக்களும்வந்திருந்துகிறிஸ்துவேதத்தைப்பிரபலம்பண்ணத்தலைப்பட்டார்கள் - ஆதலாலிரோப்பியரும், கிறிஸ்துவேதத்தையுபதேசம் பண்ணுகிற இரோப்புக்குருக்களுமிந்த இந்திக்குவரத்தொடங்கி யிப்பொழுது ௲௱௨௪ - வருஷமாகிறது - கிறிஸ்துவேதமிந்தஇராச்சியங்களிலுபதேசம்பண்ணப்பட்டிப்பொழுது - ௲௭௱௪௰ - வருஷமாகிறது - இப்படியிருக்கையில்கிறிஸ்துவேதமிரோப்பியருடையவேதமென்பதும், அவர்கள்வந்தபின்புதான் இந்தத்தேசஸ்தர் அந்தவேதத்திற் புகுந்தாரென்பதும் - முற்றுமுணராதமுழுப்பேதைமை

யாமே-இரோப்பியர் வேதமென்றுசொல்வோமாகில் சீனதேசத்திலிருந்துசீனருங்கிறிஸ்துவேதக்குருக்களாக வருவதால்சீனருடையவேதமென்றும்- அரமேனியாதேசஸ்தர்கிறிஸ்துவேதக்குருக்களாகவருகின்றமையால் அரமேனியர்வேதமென்றும்- கொங்கணதேசத்திலிருந்துகொங்கணியபிராமணரும்,மலையாளத்திலிருந்துமலையாளிகளுங்கிறிஸ்து வேதக்குருக்களாக வருகின்றமையால் கொங்கணர்வேதம்·மலையாளத்தார் வேதமென்றுஞ் சொல்லவேண்டியிருக்கும் கிறிஸ்துவேதமென்னுஞ்சர்வேஸ்வரனுடையசத்தியவேதம்உலகத்திலுள்ளசகலமனுக்குலங்களுக்கும்பொதுவேதமாதலாலனைவோருக்குஞ்சொந்தமாயிருக்கின்றதொழிய·ஒருதேசத்துக்கும்,ஒருசாதிக்குமாத்திரமுரித்தாயிருக்கமாட்டாது-ஆகிலுங்கடவுள்இரோப்புக்கண்டத்திலவதரியாமல் அசியகண்டத்திலவதரித்ததினாலும்-இரோப்பியருக்குமுந்திஇந்தியர்கிறிஸ்துவேதத்திலேற்பட்டதினாலும்இரோப்பியரைவிட இந்தியர்வேதத்துக்கதிகசொந்தக்காரரென்றற்பசந்தேகமின்றிச்சொல்லலாம்-இவ்வண்ணமேயிதுதெளிவானபின்புஇதன்மேலும்அனுமித்துக்கிறிஸ்துவேதமுண்டாகியிப்பொழுது - ௲௮௱௨௨.வருஷந்தானேயென்றும்.இந்நாட்டில்வழங்கும் சைவ-வைணவமுதலானசமயங்கள்அநேக சதுர்யுகங்களிலுள்ளஅநேக கோடிவருஷகாலந்துவக்கியுண்டாயிருக்கிறதென்றும், இதனாலேகிறிஸ்துவேதம் நூதனவேதமென்றும்-சைவ- வைணவமுதலான சமயங்களேபூர்வ சமயங்களென்றுஞ்சொல்வார்கள்-ஆனால்·கிரேதாயுகத்துக்குவருஷம்-௰௭லக்ஷத்து.௨௰௮௲-மென்றும்-திரேதாயுகத்துக்கு- வருஷம்.௰௨-லக்ஷத்து-௯௰௬௲-மென்றும்-துவாபரயுகத்துக்குவருஷம் , ௮-லக்ஷத்து-௬௰௪௲-மென்றும்-கலியுகத்துக்குவருஷம்·௪-லக்ஷத்து௩௰௨௲.மென்றுஞ் சூரியசித்தாந்தத்திற்சாதாரணமாய்ச் சொல்லப்படுகிறதல்லோ.இஃதிப்படியிருக்க-பவிஷியோத்திரபுராணத்தில்கிரேதாயுகத்துக்குவருஷம்-௨௰௪-லக்ஷமென்றும்- திரேதாயுகத்துக்குவருஷம்·௰௩.லக்ஷமென்றும்.துவாபரயுகத்துக்கு-௰- லக்ஷமென்றும்-கலியுகத்துக்குக்கொஞ்சங்குறைய-௫-லக்ஷமென்றும்·தேவிபாகவதத்தில்·கிரேதாயுகத்துக்கு.௨௰.லக்ஷமென்றும்-திரேதாயுகத்துக்கு-௰.லக்ஷமென்றும்.துவாபரயுகத்துக்கு·௮,லக்ஷமென்றும்.கலியுகத்துக்கு-௩.லக்ஷமென்றுஞ்சொல்லப்பட்டிருக்கின்றது.இதுவுமன்றி·கிரகமஞ்சரியென்னுஞ்சோதிரிஷிசாஸ்திரத்தில்கிரேதாயுகத்துக்குவருஷம்-௲௭௱௩௰ என்றும்- திரேதாயுகத்துக்

குவருஷம்-௭௱௨௰-என்றும் - துவாபரயுகத்துக்குவருஷம் ௪௱௮௰-என்றும்-கலியுகத்துக்குவருஷம்- ௨௱௪௰- என்றுஞ்சொல்லப்பட்டிருக்கின்றது-இஃதிப்படி யொன்றுக்கொன் றுவ்வாமலநேகவிதங்களாகச்சொல்லுகிறதினாலும்,பூர்வந்தொடங்கிநடந்ததுகளை நடந்தவண்ணமாய்ப்பரம்பரைக் கிரமமா யிந்நாட்டில் முன்னோர்தொடங்கி அந்தந்தக்காலங்களி லுள்ளவர்க ளெழுதிக்கொண்டுவருகிறவாடிக்கையில்லாததினாலும்,வித்துவான்கள்தங்கள்மனதின்படியேதங்களுக்குத் தோன்றினபடிக்கு உள்ளகாரியங்களிலில்லாததுகளையதிகமாய்க்கூட்டியுங்குறைத்தும்பாடிவைத்திருக்கிறதினாலும்,மேற்சொன்னயுகங்களுடையகணக்கையுள்ள தென்றொத்துக்கொள்ளவும்-வேறேவகையில் இவ்வளவுதானென்றுநிச்சயிக்கவும்பரிச்சேதம்நியாயங்கிடையாது.இதனால்மேற்சொன்ன-சைவமுதலானசமயங்கள்உலகோற்பத்திமுதலாயுள்ள சத்தியவேதத்துக்குமுந்தினதென்றுபேதையிற்பேதையுஞ்சொல்லான் சர்வேஸ்வரன்வேதமென்றும்.சத்தியவேதமென்றுஞ் சொல்லப்பட்டகிறிஸ்துவேதமோவென்றால்-உலகம்படைப்புண்டநாள்முதற்கொண்டுண்டாயிருக்கிறதென்பதுபிரத்தியக்ஷமாமே.அஃதெப்படியென்னில்.அநாதிசர்வேஸ்வரனானவர்உலகத்தைப்படைத்து ஆதிமனிதனையுண்டாக்கின ஆதியுகத்திலவனுள்ளத்திலேதானேதெள்ளறிவென்னும்ஞானமாகியவேதத்தை யியல்பாகவே யெழுதித்தந்தருளினார்-அதற்கேஇயல்வேதமென்று பெயராம் -அதன்பின்பு-இரண்டாவது-மோயீசனது யுகத்தில்மேற் சொல்லிய இயல்வேதத்தைச்சிலாசாதனமாகஇருகல்லின்மேலெழுதியனுக்கிரகித்தருளினார்இதுவே வரிவேதமெனப்படும்-பின்னும் - மூன்றாவதுசுதனாகியசர்வேஸ்வரன்-நாமாதாரமாயிருந்து ஆசிரயாதாரமாகியகிறிஸ்துவென்னுமிரக்ஷகராக அவதரித்துஇயல்வேதமென்றும்-வரிவேதமென்றும் - மேற்சொல்லியஇருவகையினையுந்தமதுதிருவுடலாகிறஏட்டின்மீதிலே-இயல்-வரி-அருள்-இம்மூன்றின்குறிப்பாகியமூவாணிகளாலெழுதித்தமதுதிருவிரத்தமாகியமைக்காப்பிட்டுத்தந்தருளினார்-இதுவேஅருள்வேதமாகியகிறிஸ்துவேதமெனப்படும்-ஆதலால்- ௲௮௱-ச்சிலவான வருஷமென்பது கிறிஸ்துவினுடையதிருஅவதாரக்கணக்கும் -அருள்வேதமனுக்கிரகம்புரிந்தகாலமுமாமேயொழிய வேதமேயுண்டான காலக்கணக்கல்லவென்றறியக்கடவது.

வீரமாமுனிவர்சரிதைப்புறநடை-முற்றிற்று.

# வாமன்சரித்திரம்.

## குசைமாமுனிவருக்கும்-வாமனுக்கும்நடந்த சல்லாபம்.

குளிர்ந்தநிழலைவீசியுச்சிப்பகலினுமிருண்ட சண்பகச்சோலையினடுவேநின்றமண்டபத்திலொருநாள் மூவாசையற்றுதவத்தின் ரூபமாகத்தோன்றினகுசைமுனியானவர்தம்மைச்சூழ்ந்தடர்ந்தடைந்தசபைக்கெல்லாம்பரமகதியைச்சேருஞ்சுகிர்தநெறியைக்காட்டிக்கொண்டிருந்தார் - இவ்வாறிவர்திருவாய்மலர்ந்தோதினவேதநூலினியதேனென்றவரவர்தஞ் செவியா லுட்கொண்டுமனமலர்ந்திருக்கையிலவர்களுக்குள்பெருஞ்செல்வத்துயர்ந்துபடைமுகத்தஞ்சாதவீரநெஞ்சுடையதளக்கர்த்தனாகியவாமனென்னொருவனித்தமேயந்தஞானவிதிகளைவிரும்பிக்கேட்பான். கேட்பினுநெடுநாள்பூந்தடாகத்திற்கிடந்து வேர்கொள்ளாத பாசிபோலவனுமெல்லாவற்றையு முட்கொண்டொப்ப நடக்கமாட்டாதிருப்பான் -எக்காலமுமிரணப்போரிற் செயங்கொண்டவனாயினும் பாவத்திற்பழகிக்காமப்போரி லெப்போதுந்தோர்வைப் பட்டவனாவான்- ஆகையாற்கேட்டவுணர்வினாலுள்ளசைந்துபுண்ணியத்தின்மேலாசையுட்கொண்டவுடனே தான்விலைமாதனைநினைத்து மயங்கித்தடுமாறிமனக்கவலையாற்றாதுருகிநோவான் -நொந்திச்சிந்தையுட்கொள்ளாதொருநாளந்த முனிவனைநோக்கிச்சொல்லத்தொடங்கியிருவருட்சல்லாபமுண்டாயிற்று-ஆகையால்.

வாமன்—ஐயாவாலிபத்திலருந்தவத்தோடுநீர்பழகினதாகையிற்சொன்னதெல்லாஞ்செய்வதுமக்கெளிதாமே. நானோவென்றால்பாவத்திற்சென்மித்துப்பாவத்தோடுவளர்ந்துபாவத்துள்ளமிழ்ந்திக்கிடக்கவே வாயூமை பாடவுங் கானொண்டியாடவுங் கைமுடவன்சிலம்பம்போடவும் பல கற்பனைகளைக்கேட்டாற் போலேநீரோதினபடி நடப்பதென்னாலாற்றாதையா.

முனிவர்—இதைக்கேட்டந்தமுனிவரவனுள்ளத்தொளித்தநோயைக்கண்டினிதருந்தயையோடுள்ளிரங்கித்திருவுளம் பற்றிச்சொல்வார்-கொலைமுகத்தஞ்சாதரியபலபோர்க்களங்களைக்கலங்காமற்கடந்தவீரனே-புண்ணியத்தின்முகத்தஞ்சி வசைபடக்குழம்பியசைபடத்தளம்பிக்கிடப்பானேன்-மனந்துணிந்தெத்தொழிலாயினுஞ்சிறிதுகாலம்பழகினாலேபோது முடனே யெத்தொழிலு

மெளிதாம் வில்லையேந்தலும் விசைபடவளைத்தலும் அம்புகோத்தலும் நாணிபிடித்தலுங் குறிபடவெய்தலும் நெடுவாள் சுழற்றலு மெதிர்பாய்ந்துவெட்டலு மெதிர்வெட்டு விலக்கிக்காத்தலுங் கேடகத்தெளித்துத்தாக்கலு மற்றப்போர்த்தொழிலெல்லாமாயுத மொன்றும்பிடியாதவர்கள் மலைத்துமயங்கும்படிக் கருமையல்லோவாகிலுமிப்போ திவையெல்லா முனக்குமரிதென்பாயோ.

வா — சொன்னதெல்லா முள்ளது - போர்த்தொழி லொன்றைநீக்கிமற்றதுமிகவுமருந்தொழிலென்றெனக்குத்தோன்றுமே இன்னங்கின்னரர் செய்தொழி லதிசயப்படாமற்காணமாட்டேன் - வீணையைக்கையிலேந்திமுறுக்காணியைச் சுழற்றித்தின்னெ ணநரம்பொலியெழும்பமாத்திரை நிறையும்படிக்கொவ்வொன்று யிழுத்துத்தடவிச்சமனுக்கினபின்னர் முழுவிரல்களைக்கொண்டு லாவினதன்மைக்குக்கடுகவோடிக்கிளம்புமினியசங்கீதம்பலவகை கேட்கும்போதிதுமனிதர்செய்யத்தகுந்தொழிலல்லவென்பேன் அப்படியேமற்ற யாவுமறியாதவர்க் கல்லாமற் பழகினயாவர்க்கு மெளிதே - ஆயினுஞ்சுகிர்தவழியிற்பழக்கமுந்துவக்கமும்வெகு வரிதையா,

மு — அப்படியல்ல சிலதொழிற்களிலே சிலர்நெடுநாட்பழகினுந்திருந்தச்செய்யவுமாட்டார் - அறத்தொழிலப்படியன்று - துணிந்தாலேபோது மவனவனிசைக்களவாகத் திருத்தமாகும் - மீளவு நான்சொல்லும்படிக்குநடக்க நிறையுள்ள வுன்சுகசெல்வங்களைவெறுத்துப்பூம்புகைகாட்டினமதுமலர்மெத்தைநீக்கிவெறு நிலத்திற்கிடக்கவும் பலசுவைக்கினிய விருந்துகளை யொழித்திலைகாய்கிழங்குகளைப் பட்சிக்கவும் ரிஷிகளொப்ப வனவாசயாய்த் தவத்தைச்செய்யவும்வேண்டுமோ அல்லவல்ல - எல்லாராலுமிகழப்படுந்தீவினையொன்றைவிட்டு நல்வினையொழுக்கத்தோடேநிற் கத்துணிந்தாற்போதுமே துணிவதேகாரியம்.

வா — பகல்செய்யுஞ்சுடர்முகத்தெதிர்நின்றமின்மினிப்பூச்சிக்கொத்தநான் சகல நூற்கடலைக்கடந்தவறிவுடையபரம ஞானிநீரறியாதவொன்றுண்டெனக்கூறுவேனோ - என்னுயிர்மயக்கிவருத்தும் பழநோய்காட்டச் சிறிதுவசனங்களைப் பிதற்றவுத்தரம் வேண்டுமையா.

மூ — கூசாமற்சொல்ல - உயிர்நோயெல்லா மொளிக்கவேயசாத்தியம்பிறக்கும் - வெளியாகவே தீர்ந்ததென் றெண்ணலாமாகையாலினியுள்ளெண்ணினதெல்லாம்வெளிவிட,

வா — ஆண்டவருந்தொழிலாளிதானே - பலவென்புகளை
நிரைபடவைத்துமற்றதுகளோடே பலநரம்புகளைப்பின்னிவிசை
படமாட்டித்தோர்பையிலேபோட்டுக்குருதிதோய்ந்ததசையுள்
ளிட்டுப்பரவத்திணித்து நிறையநிரப்பித் தோலின்படத்தின்மே
லழகுறப்பலநிறம்பூசியொன்பதுவாசலைவிட்டுநமக்கிந்தவுடலைச்
சுவாமிமுகித்துத்தந்தார்- தந்தவுடலை நாமும் பேணிப்பூம்புகை
காட்டிக்கந்தப்பொடிகளைப்பூசி பரிமளநீராட்டிப் பாலினுணாக்
கொத்தமென்றுகிலுடுத்துமின்னியவணிகலன்சுமக்கமாட்டி மது
மலர்மாலைகள்சூட்டிக் கம்மென மணக்கத் தரித்தணிந்துபகலிர
வோயாமற்பேணினும்விடாமலூற்றையூறிநாறுமுடலிதுவன்றோ
இவ்வகைப்பட்ட நீசவுடலோடழியாத வுயிரையாண்டவ ரிறுகப்
பிணித்தார் -இத்தன்மையாலுயிர்சிறைபட்டிருக்க வுடல்வழியாக
த்தானுணர்வடைய வேண்டியிருக்கையிலிவ்வுடம் பெந்நேரமுந்
தனக்கின்பந்தேடிப் பலமுறையுண்மைகாட்டாமற் பொய்யையு
ணர்த்தியுயிர்கெடும்படிக்குள்வினைகளைக்கொண்டுவிடுமே இவ்வா
றுயிர்க்குத்துணையாகவந்தசடலஞ் சற்பனையாகக்கொடியவுயிர்ப்
பகையாமே - இதுவுமுட்பகையாகக்கொள்ள நித்தமேபோராடி
யதைவெல்லுவதரிதே.ஆயினும்புறத்துநின்றிதனோடுடன்பட்டுயி
ரைக்கெடுக்கவிதிலேயுங் கொடியவேறொரு பெரும்பகையுண்டை
யா-உயிர்த்துணையாகவுடலைத் தந்ததேயுடற்றுணையாக மாதரின
த்தைச்சுவாமிகற்பித்துத்தந்தார். எங்கள்வினைமிகும்படிக்குநம
துயிர்க்குடலேயுட்பகையானதன்றி ஸ்திரிசாதியும்புறப்பகையாகி
யிரண்டுங்கூடி யொருமையாகப் பொருதுங் காலத்தெவனிற்பா
னையா-நீர்பஞ்சேந்திரியங்களைவென்ற தபோதனராகக் கொள்ள
விதெல்லாமறிவீரின்னங்குருதியொழுகும்பெரும்புண் பலமுறை
பட்டநானேநன்றாயறிவேனந்தோ-மாதரின்சறுவாங்கமுமுயிர்
க்கொலைக்காயுதமாமே - மின்னியிருண்டதலைமயிர் மனிதனைப்
பிணிக்கும்பெரும்வலையாகவு மீனெனவுலாவிப்பாய்ந்துநிலைகொ
ள்ளாதாடு மிருகண்களேநெஞ்சைப்பாய்ந்து பிளக்குங்கொடுவே
லாகவும்-அவர்கள்சொல்லு மினியசொல்லேநஞ்சுகலந்தபாலாக
வும்-பாடுங்குரலே செவிவழியானுண் ணுழைந்துயிரைக் கொல்லு
நஞ்சுதோய்த்தஅம்புகளாகவும்-இவ்வாறுயிரைக்கூந்தலாற்கட்ட
வுங்கண்ணாற்காயப்படுத்தவுங் குரலாற்கொல்லவும்விடாமற்செய்
வார்கள்.இதுகளுமித்தொகைப்பட்டபலவுமொருமுகமாகப்போ
ர்பொரும்தகிர்க்க மனம்வெந்துருகிக்குலைந்துகலங்கியாசை மிக

வேமெய்யைமறந்துதன்னைமறந்துநல்வினைதீவினையொன்றுமறியாதுயிர்படுங்கேடுமெட்டோ-அப்பொழுதொருவன்செய்தபிரதிக்கினையுணர்ந்தஞானம்படித்தகல்விகேட்டவுறுதிகளொன்றுமுதவாதையா.

மூ — ஆசைமிகுந்தபோதுகல்விஞானமுதவாதென்றாயாகிலுமாசையும்பாவங்களு மிகுந்த பின்னிறந்து தீயெரி நரகத்தில் விழுந்தபோதங்கேயுதவுமோ - காமநோய்சுடச்சுடமனம்வெந்துருகுமென்றாயாகிலுமதுவேகும் வேகத்தெழும்பும் புகையிருள்மண்டியதனால்வந்தநோயுங்கேடுமறிகிறதரிதாம்- நீயோவென்றாவிதெல்லாமறிந்திருக்க மயங்கு வானேன்-வாய்க்கினிதென்றாலுமறிந்துநஞ்சுண்பது பேதைமையல்லோ-அமிர்தமென்றுநஞ்சினைநக்கினாலதுகொல்லாதோ.

வா— இதெல்லாமறிந்தாலும் பற்றிய காமத்தீயையவிப்பதெனக்கரிதையா.

மூ—அரிதென்றாலதினுனமருகருகணுகிச் சேருவானேன்-நித்தமேன்மேலுமாசையென்கிறவிறகுகளைக் குவித்துவேகுந்தீயைத்தூண்டித்தூண்டிக்கிளப்புவானேன்.

வா—பெண்ணினத்தாருக்குஆண்டவர்மலர்ந்தமுகத்திலெழுதினவழகுமிகுதியாலதைக் கண்டபோதாசை வெறுப்பதரிதையா.

மூ—காஞ்சிரப்பழமிகச்சிவந்தழகானாலுமுண்பாயோவென்ன.

வா—நெடுநாள்வேர்கொண்டவாசையுடனேபிடுங்கிறதெளிதோ

மூ — எளிதென்றேனு மரிதென்றலையா லாசையதிகமதிகமாய் வேரூன்றிவிளைமாதனைவிழிப்பவுமணுகவுங்கேட்கவும்பேசவும்விடாமலேன்- இப்படிச்செய்திருக்கவேண்டியதல்லோ - பழம்புண் ஒருநாளில் மருந்தினாலாறுதென்றுதானதைத்தினமேலைகயாற்கிழித்துப்புரையோடச்செய்தாலாறுமோ.

வா—நானேபுண்ணாகவு மானபுண்ணிற்புரையோடவுஞ்செய்கிறேன்-முன்விரிவாகச் சொன்னதன்மையால் மாதரதுசறுவாங்கமெல்லாம் நஞ்சுதோய்ந்தவாயுதக்காடாமே-வேண்டாமென்றாலுமித்தப்போரிலிறங்கினவருளுயிர்ச்சேதமில்லாதுதப்புவாரில்லை.

மூ — நீசொன்னதெல்லா முண்மை- மெய்யாகையிலிந்தச்சமரிற்பொருதும்வகையு மதைவெல்லும் வழியும்வேறுமென்றறிவாயாக- இரணச்சமரிடத்துவளைத்தவில்மேலெதிர்த்துப் போய்ச்சரமழையிலஞ்சாதவன் செயங்கொள்ளுவான் - காமப்போரிவ்வாறன்று -இதிலஞ்சிப்பின்வாங்கியோடினவர்க்காகும் வெற்றி

மாதர்சருவாங்கமெல்லாமுயிரைக்கொல்லுமாயுதமென்றாயாகிலு
மவர்களையண்டாமற் காணாமற்கேளாமற் பேசாமல்விலகிநின்றால
வர்களாலுயிர் லயம்வருமோ. விறகிளையில்லாவிட்டால்நெருப்புத்
தானேயவியுமுன்னுட்பகையு மாதர்புறப்பகையுமுயிர்க்கிருபகை
யென்றாய் - ஆயினும்புறப்பகையுள்ளேநுழைய வுட்பகைக் குள்ள
கண்முதலைந் துவாசலைநீதிறப்பானேன்.

வா— இப்படியாகில் வீடூர்நாடுநீக்கிமனிதர் சஞ்சரியாதவன
த்திற்புகுந்தொளிக்கவேண்டியதாக்கும்.

மு— அத்தனைதூரம்போகவுந்தேவையில்லை - ஊரண்டையி
லிருக்குஞ்சுடுகாட்டுக்குப்போயங்கே யுருண்டுருளவெறிந்தகபால
ங்களையுற்றுப்பார்க்க - உன்னைமயக்குவிக்குமுகமதுவே - பவளத்து
றையிற்கோத்தமுத்துவடம்போற்செவ்வுதட்டுள்ளேநிரையாய்த்
தோன்றினபல்லுமதுவே - வான்மீன் போலேவிளங்கி யெறிவேல்
போலேசினந்துன் னெஞ்சுள்ளுருவித்தைத்த விருகண்ணிருந்த
விடமிதோ அருவருப்புள்ள கிடங்குபள்ளமதுவே - நீயபேட்சித்
த வில்லெனவளைந்தபுருவமும்பிறையென வொளிர்ந்த நுதலும்
செந்தாமரையெனமலர்ந்தவாயுமிதெல்லா மெங்கே யிந்தமுகத்
திலே தானிருந்ததன்றோ - நீயபேட்சிக்குமழகியமுகமு மித்தன்
மைத்தாவது நிச்சயமாகிலிதற்கோவுயிர்கெடப்பொருளறமானந்
குறைய மிருகத்தோடொத்தவின்பத்துக்காசைபடுகின்றாய் - இத
ற்கோருபாயம்பாராமற்கல்வியுணராம லுறுதிகொள்ளாமலொரு
துணிவின்றி மயங்கிக்கிடக்கின்றாய்.

வா — உமதுவாய்மொழிதிருவிளக்காகமயக்கத்திருளை நீக்கி
னதாகையிலென்மனந்தெளிந்ததுசரியேயையா - ஆனால் - நெடு
நாள்பழக்கத்தினாலேமனம் பலயீனங்கொண்டதாகையிற்சடுதித்
தேறித்துணிவதரிதையா.

மு — பழம்புண்ணூற்றநெருப்புவேணும் - புண்ணியவானே
வாசமதுமலரரும்பின் றன்மைத்திளமையின் முகைத்த வழகினை
யோனே - பகைப்படைவணங்குமிளையசிங்கமொத்தவீரனே - யுன்
பலவல்லமைபராக்கிரமமெண்ணாதே - பசியவுன்னருமைப்பருவ
முநம்பாதே - சினந்ததிர்ந்தடித்தபெருங்காற்றின் முகத்திளங்கா
ய்களுமுதிரும் - பிறந்தயாவருமிறப்பது நிசமே - இன்றோவன்றோ
வெப்பொழுதோ வென்றொருவனுமறியான் - சென்மித்தவயிற்றி
லும் வளர்த்தகையிலும் வளர்பாலியத்திலும் வீரவயதிலுமெத்
தருணத்திலு மெந்தஸ்தலத்திலும்வியாதியுமொன்றின்றி நித்த

மேபர்பலர்சாவது காணாயோ-ஆயினுஞ் சாவதெல்லாருக்கும் பொதுமைதானே-தீயோர்க்குவிசேஷிகதியாம் நரகமே- மயக்கம்நீங்கித்தெளிந்துதேறக்கடவாய் - இப்பொழு திங்கேதீவினை விடுவதொன்றே - யெப்போதுமங்கே தீயிலேவேவதொன்றே- யிவ்விரண்டிலொன்றுதப்பாது - நாய்க்கும்பொதுவாய்நிற்கும் நீச சுகத்தைநாலுநாள் நக்கிக்கொண்டிருந்தபின்பு - ஆசந்திர காலமு மெரிநரகத்திலோயாமற்பேயோடேவெந்து குறையாமனைந்துசாகாமற்செத்து மூகியாமர்பட்டுக் கதறியலறியென்றென்றைக்குமாறாத வேதனையனுபவிப்பது நன்றென்றோ துணிய மாட்டாதிருக்கிறாய்- எதிர்த்தபகைவனைக்கொல்வதுமாத்திரமோ வீரம் உன்னுயிர்சாகாதபடிக்குரோந்தையானவிச்சைகளைக்கொல்லத் துணிவதேவீரர்தொழிலாமன்றோ.

வா— போதும்போதுமாண்டவனே நீர்தயைசெய்துசொல்லிக்காட்டின ஞானவுறுதிகள் கூர்ந்த அம்புகள்போலென்மனத்துட்பட்டுருவிமயக்கத்தெழுந்தவாசையெல்லாம் வேருடன்பிடுங்கிற்றே-இற்றையவரையுமறியாமற்செய்த வக்கிரமங்களையுமெனக்குவரவிருந்தகேடுகளையுமிப்போதுநன்றாய்க்கண்டுபிடித்து நாணியினிதீவினைவெறுக்கவும் நல்வினையணுகவுந்துணிந்தேனையாவென்றுசரண்மேல்விழுந்தழுதான்-முனியானவருமவனையெடுத்துமார்போடிறுகத்தழுவியாறுதலுமுறுதியுமாகவாசீர்வதித்தனுப்பினார்-வாமன் மனமுகநோக்கங்கருத்தாசை யிவையெல்லாய் வேறாகித் தானும்வேறுமனிதனாய்க்களிகூர்ந்துபோனான்.

வாமன்சரித்திரம்-முற்றிற்று.

---

## தேம்பாவணிப்பாடல்;

பாற்கலந்திட்டதெண்ணீர்பால்குன்றும்பண்புமில்லால் *
மேற்கலந்தொளிர்ந்தவெய்யோன்வெயிலுமுன்னெரித்ததீபம் *
போற்கலந்திசைத்தமற்றைப்புண்ணியந்துறவுவாய்ந்த - *
சாற்கலந்தியல்பையேற்றுந்தகுதியோவென்றான்பாலன் *
தெருட்டகுமுணர்விற்சான்றோன்சேடனைத்தழுவிச்சொல்வா *
னருட்டகுமுணர்வன்பூக்கமரும்பொறையீகைமற்ற - *
மருட்டகுமியல்தீர்மாட்சிமதியைமீன்சூழ்ந்ததேபோற் *
பொருட்டகுநாட்டில்லைகுஞ்பொலந்துறவணியுமன்றோ *

மீயகன்றுயர்ந்தமாண்பாள் விளங்கவேயுலகமூன்று - - *
மாயகன்றொன்றுநீத்தையாயிரத்திருநூறாண்டிற் - *
பாயகன்றொளியிற்சான்றோன்படரிருணீக்குமுன்னர் - *
நாயகன்மருளைநீக்கநரனெனவாயினானே, - *

உரை— வானுலகினுயர்ந்த மாட்சிமையுடைய கன்னித்தாய்கதிரைவீசிக்கொண்டு நிற்பவே- மூவுலகமுண்டாக்கியொன்றுகுறைய வையாயிரத்திருநூறுவருஷமாகிச்சூரியன்பரப்புந் தன்னொளியாலிருளைநீக்குமுன்னராண்டவனுங் கொண்டமயக்கத்தை நீக்க நம்மைப்போலமனிதனானானென்க. - - - *

விண்கிழித்தோங்கிமின்பயில்கொடிஞ்சிவேய்ந்துயர்தேர்த்திரள்
காப்போ - கண்கிழித்தொளிபாய்வாட்டிரள்காப்போகால்தவிர்
பரித்திரள்காப்போ - மண்கிழித்தொழுகும்புனலெனச்சீறிமதம்
பொழிகரித்திரள்காப்போ- புண்கிழித்துடலார்காப்பதோநீயே
புரந்துசெய்காப்பதுகாப்பே. - . - - *

உரை— மேகத்தைக்கிழித்துயரப்பட்டவொளிவிடுஞ்சிகரமுள்ளதேரின்றிரளுயிரைக்காக்குமோ- கண்கூசவொளிர்ந்தவாள்முதலாயுதத்திரள்காக்குமோ-காற்றிற்குமுந்துங்குதிரைத்திரள்காக்குமோ-பூமியைக்கிழித்தோடுமாறுபோலச்சீறிமதம்பொழியும் யானைத்திரள்காக்குமோ-புண்படுத்திவல்லமையுடைய படைவீரர்காக்குமோ-நீயேபுரந்துசெய்யுங்காவலேயினிதாய்க்காக்குமென்க.

வஞ்சினருளம்போலளக்கரிதாழ்ந்தவாருணத்திடைவழிகீண்டி *
யஞ்சினர்நனையாக்கடக்கலேதந்தாயாறுநின்றதர்விடத்தந்தாய்
துஞ்சினர்சுகத்திலினிதுமூவிளையோர் சுசிக்கிடை குளிர்ந்துறத்
தந்தா-யெஞ்சினருன்னைநம்பியதன்மைத்தியற்றவொன்றுனக்கரி
துண்டோ. - - - - - - - *

உரை— வஞ்சினர்மனம்போலவளக்கப்படாதவாழங்கொண்ட கடலிடத்தில்வழியாகியஞ்சினயூதர் நனையாமலதைக்கடக்கத் தந்தாய்-சோர்தானென்னுநதிநின்றன்னார்க்குவழிசெய்யத்தந்தாய்- நபூக்கன்சூளையிற் போட்டமூன்றுபாலருநித்திரை கொள்பவர் போலவினிதாய்நெருப்பிடத்திற் குளிர்ந்திருக்கத்தந்தாய்-குறைகொண்டயாவருமுன்னை நம்பினதன்மைக்கவரைக்காக்கவுனக்கரியதொன்றுண்டோவென்க. - - - - *

# எல்லீசுதுரையவர்கள்பாடிய

தரவு-கொச்சகக்

## கலிப்பாவுக்கு

அ-முத்துச்சாமிபிள்ளையவர்கள்செய்தவிரிவுரை.

நன்றீயுமலையில்லா நன்மணியார்பேர்கடலாய் - - *
என்றுரைப்பார்நம்புவரோ-யிவருக்குந்தஞ்சமுண்டு - - *
தின்னீரமதின்மலர்ந்தநிற்மலரோயெனுட்செழிப்ப - *
முன்றெய்வம்விட்டென்பேன்முறையொன்றுப்நமசிவாய *

(நன்றீயும்) சகலநன்மைச்சுரூபமாயளவுபிரமாண மந்த பரியந்தமட்டுமாத்திரையெண்ணெண்ணிக்கை யெல்லையெல்லையிவ்வளவவ்வள வென்றில்லாமல் நன்றென்னப்பட்ட தெல்லாமொன்றாகக்குவிந்தவோர்ஞானக்குன்றமாக வோங்கிநிற்க, அந்தநன்மைக்குன்றத்திலேநின்று நன்மைப்பிரவாகவருவியாகவும், ஓயாமலூறுகின்ற நன்மையூற்றாகவும், கோடையிலுமுலராத கொழுஞ்சுபசுனையாகவும் பெருகிவெள்ளப்பிரளயமாகவோடிவந்து - பரலோக பூலோக பாதாள லோகமென்னுந்திரிபுவனமாகியசிங்காரவனத்திற்பாய்ந்து சராசரங்களுக்கு நன்மையீய்ந்து சகலமும்விளைய நடப்பித்தருளுகின்றீர் அதெதத்தன்மையென்னில்-தேவரீருடைய திருவுளப்படியேசோதிமண்டலத்தின் சக்கரவாளங்கள்சுழலுகின்றசெல்லுகின்றசுற்றுகின்ற நன்மையுஞ், சோதிமண்டலங்களால் பூமண்டலந் தொந்தப் பட்டுநடக்கின்ற சூக்ஷியானநன்மையும், பூமண்டலத்திற்பற்பல திசைகளிற் சக்கிரவர்த்திகளிருந்து பரிபாலனம்பண்ணுகின்ற நன்மையும், சக்கிரவர்த்திகளாற் றளகர்த்தர் மந்திரிபிரதானிகளந்தந்தஸ்தலங்களிலாளுகின்றநன்மையும், அச்சமஸ்தான பதிகளுடைய சமரச விதரணங்களைக்குடிபடைகள் தாழ்ந்து செலுத்துகின்ற நன்மையும், இப்படிப்பட்ட நன்மைகள் கிரமமாகநடந்துவருகிறதினால் சமஸ்தமானதுகளையும் விளக்குகிறவொளிபகவானானசூரியனுதயாஸ்தமானஞ்செய்கிற நன்மையும், சந்திரன்றோன்றித் தண்ணொளிவீசிச்சுக்கிலகிரிஷ்ணநாள் தவறாதநன்மையும், தாரகை ராசி கிரகங்கள்மாறுகிற பாய்கிறகடிகைலக்கணங்கள்தப்பாதநன்மையும், சாந்தசண்டமாக வாடை கோடைதென்றல் கொண்டல்வந்துவீசுகின்ற நன்மையும், தகுதி தகுதியாக வருஷ வசந்த குளிர்வேனிற்காலங்கள் வருகின்ற நன்மையும், சகலவிதவிலங்குபறவை நடக்கின்றபறக்கின்றசந்ததம்பலுகுகின்றநன்மையும், தாருமரம் பூண்டு

முதலிய விளைகிற தழைக்கிற புஷ்பிக்கிற காய்க்கிற கனிக்கிறநன்
மையும்,இத்தன்மையாய்ச் சமஸ்தமான பொருள்களுக்குஞ்சகல
வித நன்மைகளையுந்தந்து இந்தநன்மைகளை யெல்லாமனிதனனு
பவிக்க மனிதனையுண்டுபண்ணின நன்மையும், மனிதர்க்கு அறி
வுமுதலான அந்தக்கரண சத்திகளென்னு முள்ளுறுப்புகளையும்,
வசன கமன தானமுதலியதொழிற்களைச்செய்யும்புற வுறுப்பு
களையுங் கொடுத்தருளியநன்மையும் , மனிதரிவையெல்லா முண
ர்ந்து நன்றியறிந்து நன்மார்க்கத்தி லொழுக வேதநீதி முதலான
துகளை விதித்தநன்மையும், அவ்விதிப்படியொழுகின நல்லோர்
களுக்கு நித்தியமோக்ஷ வாழ்வைத் தந்தருளசித்தமா யிருக்கிற
நிகராத நன்மையும், இவ்விதநன்மை யெல்லாமீய்ந்து நடப்பித்
தருளப்பட்டநாதனே. (அலையில்லாநன்மணியார்பேர்கடலாய்)
அளவுமட்டுமாழமுமிவ்வளவென் றறியக்கூடாத அலையில்லாதநிலை
யாக நிற்கு மகண்டகருணாசமுத்திரமே-தன்வயத்தனாதல் முதலில
னாதல் உடம்பிலனாதல் எல்லாநலமுள்ளனாதல் எங்கும் வியாபகனா
தல் எவற்றிற்குங்காரணனாதலென ஆறிலக்கணமென்று மெண்கு
ணமென்றுஞ் சொல்லப்பட்ட லக்ஷணங்களன்றி யனந்த தெய்வ
லக்ஷணங்களாகிற திருமணிநிறைந்த தூயவருட்கடலே (என்று
ணைப்பார்நம்புவரோயிவருக்குந்தஞ்சமுண்டு) என்றும்மைநம்பு
கின்றவர்கள் மாத்திரமேசொல்வார்கள் - இப்படியும்மைவிசுவசி
த்து நம்புகின்ற நல்லோர்களாகிய விவர்களுக்கு மிவ்வண்ணமே
யும்மைநாடியிருக்கின்ற மற்றயாவருக்கு மஞ்சாத வடைக்கலமு
மெஞ்சாத தஞ்சமுமுண்டாகும்படியனுக்கிரகம் பண்ணியருளப்
பட்ட ஆதிபரனீர்தாமே. (நின்னீரமதின்மலர்ந்தநிறமலரோயெ
னுட்செழிப்ப) தேவரீருடைய அலங்காரமான அருள்மலரான
து என்னுடைய வாத்துமாவிலே புஷ்பித்தலர்ந்திருக்கின்ற படி
யால். (முன்றெய்வம்விட்டென்பேன்முறையொன்றாய்) நானறி
யாமையால் முன்னொழுகமற்றதெய்வங்களெல்லாவற்றையும்விட்
டேகனாயிருக்கின்றவிறைவா வும்மைமாத்திரமே அத்தியந்தபத்தி
யோடே யனுசரித்தண்டியிறைஞ்சிப் பணிந்து ஆதிபரா அனாதி
பரா அனந்தாதிபரா சுபம்பரபரா வென்று ஒருங்கே முறைப்பா
டுசெய்து ஆசையார்தேடி யன்பினாற்கூடிஆனந்தமாய்ப்பாடிவா
ழ்த்தி வணங்கிப் போற்றிப்புகழ்ந்து தொழுதுதோத்தரித்துஅர்
ச்சித்தாராதிக்கின்றேன்.(நமசிவாய,என்றென்று நிற்குமேக கட
வுளாகிய வுமக்கேநன்றென்றிதோ புரிந்தேனமஸ்காரமே. (௧)

மண்ணாடுவோருடு மனிதர்சுரரெல்லவரும் - - - *
எண்ணாதவண்டமவை யிவற்றுள்ளாம்பலவுயிரும் - - *
கண்ணாட்டிற்காணாத மனமாட்டிற்கண்டபரம் - - *
நண்ணுமனினைவணங்கியென்பவரோநமசிவாய. - - *

(மண்ணாடுவோருடுமனிதர்சுரரெல்லவரும்) இந்தப்பூலோகமும் பூலோகத்துமணிமகுடந் தரித் திராசரிக்கம்பண்ணுகின்ற இராசராசாக்களு மதியூகிசளும் அதிவிவேகிசளும் வரும்பொருள் சொல்லுந் தந்திரோபாயமுள்ள மந்திரிபிரதானிசளும், மறமன்னரைக்கண்டு வரிசைவண்மைகொண்டு நானாவித சாமர்த்தியஞ் செய்யுந் தானாபதிகளும், வந்தபகைவரை முறியவடித்து வலிமைய கோட்டையரண்களை மாறாத வெற்றிதொடுத்து சிங்கம்போன்ற துங்க தளக்கர்த்தரும், மலிந்தபாக்கியவந்தரான யோக்கியபிரபுக்களும், மனநிலைமையுற்றுக் கனகல்விகற்ற மாண்புடையோரும், மாசிலாசற்சனரும், தேசுலாவிற்பனரும், சகலசாஸ்திரசம்பூரணவித்தியாசம்பன்னசாமர்த்தியரும், மாக்ஷிமையுள்ள ஞானசூக்ஷியரும், மாதவமுனிவரும், மகாரிஷிகளு மறைவேதியர் முதலான மகாத்துமாக்களும், மாநிலத்திலே மனுக்குலங்களிலுள்ள சகலவிதமான சனக்கூட்டங்களும், வானமண்டலமுமதிலே அரூபிகளாய் லகு சூக்ஷம் அக்ஷயம் பிரகாசமென்னப்பட்டசதுர்வரப் பிரசாதிகளாய் வாழ்ந்து சுவாமி பாதத்தைச்சூழ்ந்து திருப்பணிபுரியும் பத்திசுவாலகர் ஞானாதிக்கர் பத்திராசனர் நாதகீர்த்தியர் சத்துவகர் பலவத்தர் பிரதமிகர் அதிதூதர் தூதரென்று சொல்லப்பட்டவர்களுமாய்த் தேவ விஷயக பத்திமுதலான சுகுணாதிசயங்களிற் சிறந்து விளங்கப்பட்டவர்களுமாய் இத்தனையத்தனை இவ்வள வவ்வளவென்று தெரியக்கூடாம லெண்ணிக்கையின் மேற்பட்டவர்களுமா யிலங்காநின்ற வானோர்கணங்களும்,

(எண்ணாதவண்டமவையிவற்றுள்ளாம்பலவுயிரும்) எண்ணவொண்ணாமலு மெல்லையில்லாமலுமிருக்கின்ற அனந்தமான அண்டகோளங்களிலுஞ் சஞ்சரிக்கின்ற வூர்வன பறப்பனநடப்பனவாகிய அபாத துவிபாத சதுஷ்பாதங்களையுடைத்தான சகலமான சீவகோடிகளும் அகில சராசரங்களும். (கண்ணாட்டிற்காணாத மனமாட்டிற்கண்டபரம்) முகத்துக்கண்ணாற் காணக்கூடாம லகத்துக்கண்ணாற் காணப்பட்ட வரூப பராபர வாதிதற்பரமே. (நண்ணுமனினைவணங்கியென்பவரோநமசிவாய) தேவரீராயண்டமாட்

டாமல் மிகுந்த பயபத்தியோடு மொடுக்கவணக்கத்தோடு மதிக தாரமாய் நின்று இறைவனுகியவும்மை இறைஞ்சிப் பணிந்து நித்தா நிதானு நிமலா நிரஞ்சனு நிரந்தரா நிரப்பரா நிராமயா நிருமலா நிருநாமா நிரம்பரா நீதிபராவென்று நிகரில்லாதவுமது நிமலபாதத்தைநோக்கி ஆசையாற்றேடி யன்பினுற்கூடி யானந்தமாய்ப்பாடிவாழ்த்திவணங்கிப் போற்றிப்புகழ்ந்து தொழுது தோத்தரித்து அர்ச்சித்தாராதிக்கின்ருர்கள் என்றென்றுநிற்குமேக கடவுளாகிய வுமக்கே நன்றென்றிதோபுரிந்தே னமஸ்காரமே. - - - - - - - (௨)

சிற்றிறைவரிவ்வுலகுட் சிறியோரின்சிறுபொருளில் - *
வற்றிறையைவாங்குவரோ வல்லமையுமகிழ்ச்சியுள்ள - *
பற்றிறைவனீதிறையை வாங்காயேயானதினுற் - - *
சொற்றிறைவிட்டுட்டிறையைச் சொரிவேனே நமசிவாய. *

(சிற்றிறைவர்) தேவரீர் நித்தியமாக நிலைபெற்று நீடூழிகாலமிராச்சிய பரிபாலனம்பண்ணப்பட்டவெற்றியரசுற்ற நித்தனுகையாலுமக்குமுன்னே இந்தப்பூமண்டலத்தைக் கட்டியாளப்பட்ட எப்படிப்பட்ட மாமண்டலேஸ்வர மகுடமன்னராயினும்அநித்தியராகையிற் சிற்றிறைவரென்னப்படுவார். (இவ்வுலகுட்சிறியோரின்சிறுபொருளில்) இந்தவுலகத்துள்ளவிப்படிப்பட்ட இராசாக்கள் தங்களுடைய வெளியப்பிரசைகளின் அற்ப பிரயோசனமாகிய லவுகீகபொருள்களிலே. (வற்றிறையைவாங்குவரோ) வலிமைசெய்து இறையாகவும் பகுதியாகவும் தீர்வையாகவும் திரண்ட கப்பமாகவும் வாங்கித் திரளாகச் செல்வங்களைக் குவித்துச் சேர்ப்பார். (வல்லமையுமகிழ்ச்சியுள்ளபற்றிறைவனீதிறையை வாங்காயேயானதினுற்) நிகரில்லாத சறுவ வல்லமையும் நிலைமைபெற்ற பரமானந்த மகிழ்ச்சியுமுள்ள அன்பார்ந்தஇராசாதிராயனும் இறைவற் கிறைவனுமாகியதேவரீர் மேற்சொன்ன லவுகீகபொருள்களாகிய பகுதிகளைவாங்கிக்கொள்ள மாட்டீராகையால்.

(சொற்றிறைவிட்டுட்டிறையைச்சொரிவேனேநமசிவாய) முத்தொழிற்பகவா மூன்னூற்கேழ்வா மூவுலகாதாரா மூவுலகேந்தி முக்குற்றங்கடிந்தோய்முழுதொருங் குணர்ந்தோயென்றும்.சகநாதா சகலவியாபி சயம்பு சர்வேசா சதானந்தா சச்சிதானந்தா சுவாமியென்றும்- இப்படியு மின்னமநேகவிதமாயுந் தோத்தரிக்கின்ற சொற்களாகிய பகுதிகளையுமக்குக் காணிக்கையாகக்கொ

டாமல் விட்டுவிட்டு என்னுள்ளத்தையும் அதிலிருக்கிற அறிவுமுத
லான அந்தக் கரணங்களையுமே பகுதியாக வுமது பாதாப்புயத
திற்சொரிந்திடுவேன் - இப்படிசொரிந்து ஆசையாற்றேடி யன்பி
னூற்கூடி ஆனந்தமாய்ப்பாடிவாழ்த்தி வணங்கிப்போற்றிப்புகழ்
ந்துதொழுது தோத்தரித்து அர்ச்சித் தாராதிக்கின்றேன் என்
றென்றுநிற்குமேக கடவுளாகியவுமக்கே நன்றென்றிதோ புரிந்
தே னமஸ்காரமே. - - - - (௩)

வாய்மையொன்றுமாயையொன்றும் வாருளத்தில்வேறறியாய் *
நீயெல்லாமெல்லா நீ நின்னுளில்லாப்பொருளுமில்லை - *
நீயெல்லேயிருளேநீ நீயுயர்ச்சிரீயாழும் - - - *
வாயொன்றிட்டுலகெலாம் வணங்குகவேநமசிவாய. - *

(வாய்மையொன்றுமாயையொன்றும்வாருளத்தில்வேறறியாய்)
தெளிந்தவுமதுதேவதிருவுளத்தில் மெய்யைப்பற்றியும் பொய்
யைப்பற்றியும் வேறுவேறாக வித்தியாசங் கொள்ளாம லீரிடத்து
மோரிடமாகவெழுந்தருளியிருக்கின்ற விறைவனே - (நீயெல்லா
மெல்லாநீ நின்னுளில்லாப்பொருளுமில்லை) சூரியன் சந்திரன்
கிரகங்கள் நட்சத்திரங்கள் முதலானவற்றின்விண்மண்டலங்களு
க்கும், பூமி பறுவதம் குன்றம் கல் மணல் முதலானதுகளையுடை
த்தா யிருக்கின்ற பிறிதிவுக்கும், மழை வாருதி பூருணி சேணி
வாரி ஆறுமுதலான வுதகங்களைக்கொண்டிருக்கிற அப்புவுக்கு
ம்,காஷ்டவெரிகரும்பெண்ணை முதலானவற்றைப் பற்றியெரிகிற
வக்கினிச்சுவாலைகளையெல்லாமடக்கிக்கொண்டிருக்கிற தேயுவுக்
கும்,அந்தரம் பாதாள் வந்தராளமெல்லாம் பாய்ந்துலாவிநிறைந்
தளாவி நிற்கின்றவாய்வுக்கும், இப்படியே பிறிதிவு அப்பு தேயு
வாய்வு ஆகாசமென்று சொல்லப்பட்ட பூதியங்களுக்கும்,திரண
பிரண முதலான துளிர்க்கிற தழைக்கிற புஷ்பிக்கிற காய்க்கிற
கனிக்கிற விருக்ஷவினங்களுக்கும்,நடக்கிற பறக்கிற நகருகிற நீந்
துகிற விலங்கு பறவை பூச்சிப்புழு மச்ச முதலாயின்னம் வெகு
விதமான சீவகோடிகளுக்கும் வகைவகையான மனுக்குலங்களுக்
கும் வானோர்கணங்களுக்கும் எல்லாப்பொருளுக்குநீர்தாமேயா
தாரமாகவு மாதியு மவதியுமாகவு மனைத்துமாகவு மிருக்கின்றீர்.
ஆதலாலிவையெல்லாமென்னுகையிலிவையாவுநீர்தாமே - இவை
யெல்லாமும்மாலுற்பவிக்கப்பட்டும்மிலிருந்தும்மிலொடுங்குகிற
படியாலும்மிடத்திலில்லாதபொருளொன்றுமில்லை - (நீயெல்லே

சர்வேஸ்வராய நம.

# திருக்காவலூர்க்கலம்பகம்.

## காப்பு-கட்டளைக்கலித்துறை.

பாற்கடற் கன்னிச்சங் கிங்க ணரிதிற் பயந்தளித்த..... ......*
மேற்கடற் றேவ திருமுத்தம் பூண்டு விரிதமிழ்ப்பா... . ......*
நாற்கடற் றெல்லந் துறைசேர்ந்து காவலூர் நங்கையெனு ..*
நூற்கடற் றேவமு தள்ளி நுகர்வ னுவன்றிடவே...... .. ...*

### மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

(நான்கடித்தரவிரண்டு.)

பார்மேவும்பழிநீப்பப் பகர்ந்தடங்காப்பரிவுள்ளிச்...*
சீர்மேவுந்திருவுளத்தைத் தெளிந்தமரருளம்பணிப்ப..*
வுருவில்லானுருவாகி யுலகிலொருமகனுதிப்பக்......*
கருவில்லாக்கருத்தாங்கிக்கன்னித்தாயாயினையே.... *
விண்ணுலகம்புகழ்ந்தேத்தி வியந்தலர்சேவடிவருட *
மண்ணுலகந்துயர்நீங்க மன்னுயிர்கள்சிறந்துவப்ப...*
வான்றளங்கள் புறங்காப்ப வானரசர்பணிகேட்ப....*
மீன்றளங்களணிமதிபோல்விண்ணரசாளாயினையே....*

(நான்கடித்தாழிசையாறு.)

தண்சுடர்க்கான்மதிக்குழவி தாங்கியபூவடிவிளங்கத்........*
தெண்சுடர்க்கானுடுவணைந்த திருமுடிகொள்சிரமிசைப்பப்·· *
பனியுயிர்த்துமனங்குளிர்க்கப் பரிதியுடுத்துடலிலங்கத்.. . ··*
தனியுயிர்த்துமரசணியாத் தரிப்பதுநின்விருதாமோ...... ··*
கனைபூத்தசோணாட்டுக் காவிரியின் வடகரைமேற்........*
சினைபூத்தநிழற்பொழில்வாய்ச் சிங்கநெடுங்கொடிநிழற்றுந்··*
திருக்காவலூரகத்துத் திகழொளிவாய்மணிக்கோயி.......*
லருட்காவலியற்றிநம்மை யளிப்பதுநின்றயையாமோ.. .. ···*
உள்ளுருவாக்கவசமென வுத்தரிகத்துடன்மருடீர்.........*
தெள்ளுருவாமணிமாலை சிறந்தேந்துங்கைநீட்டி........*
வாய்பொய்யாமறைத்திசையாம் வடதிசையேதனிநோக்கித்··*

MARY'S HIG

தாய்பொய்யாவடைக்கலமே தருவதுநின்புகழாமோ..... ..*
கான்பொதுளும்பூம்புகையுங் கமழ்பூவுமணந்தேங்க.........*
மீன்பொதுளுமொளிமணியார் விமானத்துளெழுந்தருளிப்.. *
பார்பூத்தவினையறநீ பயந்தநலத்திவ்வுலகுஞ்.......... ...*
சீர்பூத்தவானுளப்பச் செய்வதுநின்சிறப்பாமோ.......... *
தாண்மலரோதலையரும்பத் தரும்பணிகேட்டுளம்பனிப்பச்.. ..*
சேண்மலரோயுன்வரத்தாற் றிருக்கடலூடினிதாழ்ந்து...........*
வானவருங்களைகாணு மனந்தேற்றுப்புன்பாவா........ ... ..*
லினவருள்யானீந்தற் கியைந்ததுநின்றிறமாமோ...........*
யாழ்குரலேயினிதென்னவீன்றுட்கேதன்மகன்சொற்.. .. .. *
றாழ்குரலேயினிதென்ற தகைமைத்தோமனதிரங்கித் .. ... ..*
துவர்வாய்ப்பொங்கலைமணிபோற்றொடர்புளதாய்நீயென்ற ..*
னுவர்வாய்ப்புன்புகழுரைகொண் டுவப்பதுநின்பரிவாமோ.... *

(ஈரடி அராகம் நான்கு.)

உயருலகடிதொழ வுயிரினுமுவகையே...........*
துயருலகுளியுள துகளொழியுறுதியே. .......... *
யுலகினையருளிய வொருவனையருளலி.......... *
னலகினையறவர மமைதனியரசினை........ ....*
வினையிடுமிருளற வெயிலிடுமறையினை............*
முனையிடுபகையற முயலிடுமுடலினை.......... *
மறையருளிறைவனை மறைவிலவருளினை ..........*
யிறையருள்கதியினை யினிதருடுணையினை... .......*

(ஈரடித்தாழிசையாறு.)

ஆதியிலாவந்தமிலா வனைத்துயிர்க்குங்காரணர்க்கே............*
யோதிலெல்லாநிகர்கடந்த வுற்பத்தியாயினைநீ..................*
பூவாதிமூவுலகின் புலத்தடங்காவளையொழிக்குந்......... *
தேவாதிதேவனைநின் றிருவயிற்றிலடக்கினைநீ. ..............*
வானவர்க்குந்தெளியாத வடிவொளியான்வினையிருணீத் .. ..*
தீனவர்க்குந்தெளிவதற்கே யென்னுருவொன்றாக்கினைநீ.. .....*
மூவுலகுமூவிரலான் முகந்தேந்துமுதலோனைத்....... ....*
தேவுலகும்வியந்திறைஞ்சச் செங்கரமேலேந்தினைநீ...........*
பொருள்சுரந்தீனுயிர்க்கெல்லாம் பொழிந்தூட்டிவளர்த் தோனை
யருள்சுரந்ததிருக்கொங்கை யமுதூட்டிவளர்த்தனைநீ... ... ...*
யனைத்துலகுமேவலைக்கொண் டசைத்ததனியாணையினு.......*
னினைத்துலகும்வியப்புறவிந் நிலத்தேவல்கொண்டனைநீ.... *

(பல்வகைஅம்போதரங்கம்.)

உந்தையையீன் றுநீ யொருவர்கிங்கரும்.... *
வந்தையோடன்னையு மசளுமாயினை. ..... *
கனியரும்பயனொடு கலந்தபூவினைத்...... *
தனியருள்கன்னியுந் தாயுமாயினை...... .. *

வேறு. தொற்பழியுரசமிதித்தனை திகட்பழியுலகிறுடைத்தனை. *
கற்பழியலகையடக்கினை கதிக்கதவகலவியக்கினை.. .....*

வேறு. விண்டிறந்தனை யெண்டிறந்தனை. . *
பானணிந்தனை மீனணிந்தனை.. .....*
மதிபதத்தினை கதிபதத்தினை ...... ...*
யருள்வலத்தினை பொருளிடத்தினை.. *

எனவாங்கு தனிச்சொல். (இனி-அகவற்சுரிதகம்.)

தண்டிருக்காவலூர்த் தடம்வளர்ந்தொளிபெற.....*
மண்டிருமலரடி வைத்தபின்னெங்சனும்........ *
வினையிராப்பரந்து விளைந்த வவாவிரு.. ........ *
டனையிறமறையொளி தருந்திருப்பகலோன்.... ..*
வந்துயிர்விளக்கவருநாளிதுவென.......... ... ..*
நந்துயிருய்ய நகைக்கதிர்பரப்பிக்....... ......*
கொதித்தனைத்திருளினைக் கொய்தீங்............ *
குதித்தனைநீயோருதயமீனே................(௧)

(நேரிசைவெண்பா.)

மீனேதலையரும்ப வெண்மதியேதாளரும்பப் ... *
பானே யுடலரும்பப் பாங்குருவைத்—தானே .. *
ருடைத்தா டிருக்காவ லூரகத்து வைத்தா... ... *
முடைத்தாள் வினைத்துயனாத் தொக்கு.........(௨)

(கட்டளைக்கலித்துறை.)

தொக்க நலமெலாம் பெய்திடி யாதரு டோய்முகிலாய்ப் *
புக்க நிழல்கொண் டிருள்புக விற்பொழித் பொங்கலைநீ *
னொக்க வளையா வரங்கொண் டுவரில வோர்நிலையா.. ..*
யுக்க மகிழக்கண் டேன்றிருக் காவலூ ரங்கனையே.. (௫)

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

அங்கனைவருமருமறையறையயிர்வனவிளியுளமுயிருண வையயி
யக்கினைபொய்யைவிலக்கினைமெய்யைவிளக்கினை.யொளிவேந்தே.
இங்கனைவருமருமிடிமடிவிழிவெழு துயரயொழிகுப வின்பமு

யிர்த்தனை துன்பமொழித்தனையிம்பர்களித்தனை—யுயிரீடாய்ச் *
சங்கனையனநின கரமிகுவனவின மணியணிகுவரவர்தாவருநோ
யறமேவருமானுற யாவருநேரிற—வாழ்வாரால்...... ....*
பங்கனையனநின திருதிரு வடிசிர மடியனமணிகுப பாவிகளண்
டினை காவலிலொன்றினை மேவியுமுன்றனைக்—காட்டாயோ. (௪)

(ஆசிரியவிருத்தம்.)

தனைக்காட்டத்தன்றிறஞ்சீர் தயைஞானமற்றருந்தன்றகுதிகாட்
டத்-தரும்வழியாற் றகாச்செல்வோனுனைப்படைப்பக் கருதிப்பி
ன்றாணியெங்கு—முனைக்காட்டவிரவிமதியுடுவினங்கணவமணிமற்
றொளியின்சால்பு-முரிமணமூ வகைமலர்ப்பூவொண்கனிதேனமு
தினிமையுகுத்தயாவு — மினைக்காட்டப் பெய்தமுகில் வியன்கட
னீர்தழகுவேய்ந்தவெல்லாம்-விண்ணிடத்து மண்ணிடத்தும் வி
ருப்பங்கொண்டுனையுள்ளிவிதித்தானன்றோ—நினைக்காட்ட வெழி
ல்காட்டுமிவைகண்டுன்னடிதொழுநானிறையவாழ-நினைக்காட்டா
யோமரியே திருக்காவலூர்நிலையே நிமலத்தாயே...... ..(௫)

(கட்டளைக்கலித்துறை)

தாயுனைக்கொண்டானனைத்தும்படைத்தவொர்தந்தையனுன் *
காயெனப் பூவெனத் தன்றிரு மாட்சியைக் காட்டுவபோற்...*
சேயுனைக் காட்டலி னிவ்வள வுன்புகழ் செப்புவரா .....*
ரோயில காவ லிறைவிபொரு வென் னுனாவெளிறே......(௬)

(புயவகுப்பு- ஆசிரியவண்ணவிருத்தம்)

வெளிமதிகதிருடுக்குல-மணிநிதியொளிமுகத்தவை-மலர்கனியரி
துமற்றைய -பலவுலகுளவனைத்தையு — மீறிலாதெங்கணுமருளிப்
பயந்தன, வெளியமைசுரர்முதற்பல·வினையமைநரரினத்தொடு-
விரிபலவுலகனைத்தினு-முளபல வுயிரனைத்தையு— நாளுமாறின்றி
யரிதுயிர்த்தமைந்தன, வினைவிளைபுவிடகைத்தன-முழுதுளதுகடு
டைத்திட- விரிமுகிலிடியிடித்தரி-துயர்மலைமுடியொளித்திட—
மாரிமாறுந்திவ்வுலகிற்பொழிந்தன, விரவிய விரகமுற்றிய -
வினையொடுவெகுளிபற்றிய-வழலெழுமுகிலியற்றிய- சுடுமெரியுல
சழற்றிய—மாரியாலைம்புரமெரியச்சினந்தன.......... ..*
தெளிமறையவர்செலப்பிரி·கடலிருமதிலெனக்கடி -திருபுடை
யெழநிறுத்தின·நிலையெழுதிரைகவிழ்த்தெதிர்-நேரலார்நைந்துயி
ரொழியக்கடிந்தன,திகிரியதுயர்குவட்டிழி-திரைநிலையுற நிறுத்து
பு-மலைமிசைமலையடுக்கென-வலைமிசையலையடுக்குபு - யோருதா
னுநதி

நடைதடுத்துயர்ந்தன, செருமிகுசெறுநர்மொய்த்துறை-முகிறவழர ண்மதித்துயர்- பொடியெழவடிபெயர்த்தொரு- படையிலநகர்தகர்த் திரு — ஞாலமேயஞ்சமிகுகத்ததிர்ந்தன, சிதைவழிசிதைகினக்கர-னரசுடனுயிரறப்பல-கரிபரியலதுமுப்படி-யுறழவுமபயர்முற்றுறு— நூறுநூறன்றொழியவதைத்தெறிந்தன..............................*

ஒளியெழுமுருணடத்தின- நிலையுறவுருணிறுத்தின -பிறகுறவுருளி ழுத்தன-பகலிடையுருளொளித்தன —மாயிராவென்றால கிருளக்கர ந்தன, உயரியவனாமுகட்டிடை-யழலெழவிடிமுழக்குட-னதிர்வனவுல குவப்புற-விருசிலைமிசைதிருத்திய—வேதநூலன்புடனெழுதிப்பரந் தன, உலகுயிர்கனியவொத்துரு - வுடலுறியடைசயக்கொடி - யென வொருசிலுவைநட்டிட-வுயர்மலைமுகடுபற்றுளி—வானுளோரஞ்சிவெ ருவுறச்சிவந்தன, வொருவிலபடையெனப்பொறை - யொருபொழு தெமதுயிர்ப்பகை-யெனமுகிவிலவுடற்றிய - வெறியினமுழுதடக்கிய — வாகையேகொண்டிட ருலகிற்பரிந்தன .........................*

களியறவுடலுணக்கிய-பிணியறமிடிபெருக்கிய- துயரறவினையியற் றிய - குறையறவரிதியக்கிய — வீரவாயுண்ட புதுமையிற்சிறந்தன, கடிதெழுவளியடக்கின-பகமலைபுவிநடுக்கின- பகலிடை வெளியிருட் டின-கனல்குளிரிடநிலைத்தன — நீருமாயைந்தையு மரிதிற்புரந்தன, கதிபெறுமறையுரத்தொடு - கொடையருடவநலத்தொடு - பொறை துணிவறவயத்தொடு-பொருணயநலமனைத்தையு—ஞாலமீதெங்கணு மலியப்பயந்தன, கசடிடர்முழுதொழிப்பன-வொழிவிலகனியுயிர்ப் பன-நரககல்கதவடைப்பன-கடையிலகதியிலுய்ப்பன— காவலூரங் கனைமகன்றன் புயங்களே ........................................ (எ)

(தவம்- கட்டளைக்கலித்துறை.)

புயங்க வுருவால் வினைநஞ் சுமிழ்ந்து புழுங்கியபே....*
யுயங்க மிதித்துத் தவத்தால்வென்றாயென வொண்மதிய*
மயங்கார் பகையினுக் கஞ்சிவந் தன்றவவாகையிற்றான்*
முயங்க வடைக்கலங் கொண்டதொர்காவலூர் மூதுயிரோ* (அ)

(நேரிசைவெண்பா.)

உயிராந் தயையாளை யோம்பனந்தத் தாளை..................*
யயிரா மறைமொழி யாளைப் — பயிராருஞ்..................*
சிந்துசேர் காவலூர்ச் சேர்ந்தாளைப் பாடினே..................*
னிந்துசேர் தாடசேர யான்..............................(௯)

(கலிநிலைத்துறை.)

யானரும்பும்பதத்தழகி மதியரும்பும்பதத்தழகி யினியவில்வாய்ப்.*
பானரும்பும்படத்தழகி தேனரும்பும்பதத்தழகி பகலிற்றெல்கா.*
மீனரும்புஞ்சிரத்தழகிவிண்ணரும்புஞ்சிரத்தழகிவிரிவான்வீட்டைத்
தானரும்புமுகத்தழகி தயையரும்பக்காவனலூர் தங்கினளே....(௰)

(தாழிசை.)

தங்கடேக மதங்கடீர மறங்கடேயுக தாழ்வெலா........*
மங்கவேத வறங்கடேற மனங்கடேர வழங்கிவா........*
னங்கிலாப மடைந்துவாழவடங்கலேதிருக் காவலூர்....*
நங்கைசேவடி நம்பிநாளு நயந்துசூடுக நாடியே.(௰௧)

(வஞ்சிவிருத்தம்.)

நாடிய மேற்கதி நலங்காண....*
வாடிய தென்னுள மலிநெஞ்சே*
தேடி யணங்கறு திருக்காவற்...*
பாடிய ணங்கடி பணியாயோ...*(௰௨)

(காலம்-ஆசிரியவிருத்தம்.)

பணியாதகாமமுதிர்வேனிற்காலம்பட்டாற்றுதழுங்கட்கார்காலமாகிக்
கணியாதநரகச்சமுகுக்குங்கூதிர்க் காலத்துண்ணடுங்கியபின் வினையு
நோயுந் - தணியாதபனிமுன்பின்காலமும்போய்த் தவஞானம்பூப்ப
விளவேனிற்கால - மணியாததிருக்காவலூராளன்னை யடிக்கடிமைப்
பட்டுற்றகாலமாலோ.............................................(௰௩)

(இடைச்சி-ஆசிரியவிருத்தம்.)

மாலூகுத்தசெஞ்சொல்லிடைச்சியேவாயமிர்தமோடெய்தவுள்ளியே
பாலுநீருநூல்வாயமிர்தெனப் பால்கலந்தநீர்விற்பவெய்தினாய்....*
நீலமுண்டநின்கண்ணிலொன்றுமெய்ந் நீர்மையன்றியிங்குன்பொய்
செல்லுமோ - சீலவன்னம்மாள்காவலூரிலேசேர்ந்தபாலினீர்தோன்
றிநாணுவாய்.................................................(௰௪)

(மறம்-தாழிசை.)

நாணிபூட்டிய சாபமேந்திய வீரவெங்கர வேடனர்..............*
நாணவுட்சுடு தீயசொற்கொடு நம்மையெள்ளின ராரடா.....*
சேணிபூட்டிய கொம்பரேந்திய தேறலூட்டிய காவலூர்ச்.........*
சீரினளொரு தேவமானெரு சீயமேகரு வுற்றகாற்.........*
பாணிபூட்டிய வெங்கடார்மலை பற்றியெங்குடி லெய்தினள்......*

பாதமூன்றிய வாயிருமணை பூத்தகாடென வாயடா ........*
தூணிபூட்டிய வம்புபோலவள் புக்கசிற்றி லலர்ந்தபூ ...............*
தூயதேனுக வின்னும்வாடில சூழ்ந்துவாழ்த்திட வண்டரோ*
(வஞ்சித்துறை.) (௧௫)

வண்டிமிரும் வாய்மலர்க்காக்..........*
கண்டிமிருங் காவனலூர்ப்............*
பண்டினிதாள் பாவைபணிந்.........*
தண்டினரோ யண்டரரோ. ......(௧௬)

(கட்டளைக்கலித்துறை.)

அண்டவெள் ளம்புலி யேந்த வரக்கவி ழம்புயத்தாள். ..............*
கண்டகண் விம்மிதங் கொண்டிமைப் பாமொர் கதிர்க்கலையாள். ...*
விண்டவழ் மீன்முடி யாடிருக் காவலூர் மேவரசான்...............*
மண்டமு குண்டக னும்பர்க ளென்று மகிழ்வனவே............(௧௭)

( ஆசிரியவிருத்தம். )

மகிழாருலகி னனுகார்கதியின் மடிவார்துயரி லருளாருன்றாட். ....*
புகழாதவரோ பணியாதவரோ புடைநீகாவா துய்யாவுயிரோ .........*
திகழார்மணிபோ லணிபூஞ்சினைக்காத்திருக்காவன நல்லூரூர்ந்தவரோ
நிகழாவருளு மிகழாமருளு நிசியற்றுயிரோ விளங்கும்பானே. (௧௮)

(தாழிசை.)

பானெழிபூம்பொழினீழலே பாவொளிபுட்குரலோதையே........*
தேனிழிமும்மலர்வாசமே சேர்ந்தணிசெய்திருக்காவலூர். .........*
வானிழிந்திங்குறவும்பரும் வானுறவிம்பரும்வீதியாய் ... .........*
மீனெழிலூர்சிரநாயகி வீற்றிவணெய்தியகாலையே ............(௧௯)

(ஆசிரியவிருத்தம்.)

காலையொடு மாலைவிது வொத்திருள் கெடுத்தருள் கொடுத்துயிர் களி
த்தனன்றே- சோலையணி காவலினள் கோவிலினள் சோதிமடிசோம
னடி தாளைமுடியாள்- வேலையலை வற்றினு மிடற்கனல் குளிர்ப்பினும்
விரிச்சிக னிருட்டிடினுநான்-மாலையிரு டிங்களொரு பாதியிரு பாத
மொரு வாதவிரு மாலையொருவேன்..........................(௨௰)

(கைக்கிளை - கட்டளைக்கலித்துறை.)

ஒருவாதிங் காள்குளிர்ம் பூந்தா ளணிந்தா ளொருகலையாய்த். ... *
திருவாய் முகமொத்தா யார்ந்த கலையாய்ச் செகங்குளிர்க்குந்......*
தருவாய் நிழற்கா வலூர்வதிந் தாயினித் தான்சுடவோ..............*
மருவாதெக் காலமு மிங்கிலைக் கைக்கிளை மாலையதே ... ... ... (௨௧)

(மடக்குத்தாழிசை.)

மாலைவாங்கவந்தனன் மாலைதந்துபோயினான். ................*
மாயமாறவந்துதான் மாயமேறியேகினான். ............*
வேலையுண்டுமாண்டருள் வேலைநல்கினான்கையில் ............*
விண்டுபிர்த்துமீண்டடி விண்டிலூன்றியேறினான் ......*
பாலைபுக்குநோற்பகை பாலைநீக்கிநோற்றனன்...............*
பாசம்வீக்குபாசமாய்ப் பாசமாய்ந்துமாய்ந்தனன்....*
காலைவேந்தனொத்தநின் காலையாரறிந்துளார்.. ...............*
காவலார்ந்தகாவலூர்க் காவலாயகாந்தையே........(உஉ)

(வண்டு-நேரிசைவெண்பா.)

காந்தட்கை கஞ்சத்தாள் காவிக்கண் ணாம்பல்வாய்.......*
வேய்ந்தலர்ந்த காவனலூர் மென்கொடியே— யீந்தமது*
வுண்ணளிகாள் சொன்மினீ ரொத்துளதோ பூவுலகிற்....*
பண்ணளிபூந் தீந்தேன் பணித்து ...................(உ௩)

(நேரிசையகவல்.)

பனிமதுப்பதுமந் தன்னிகன்மறந்து .............*
குனிமதிப்பிறைமேற் கொங்குமிழ்ந்தலரவுந் ....*
தொல்லையந்தற்பகையொழிந்துரூடொழிந்......*
தெல்லையுமென்னுளத்திளம்பனிவீசவுந் ..........*
தொற்பகைப்பரிதி சுடரமுன்றோலா............*
நற்பகனன்னணிய வுடுவொளிநல்கவு ...............*
மவ்வையொருங்கணிதே வருங்கொடியலரிருச்......*
சுவையொருங்கமைகனி சுமந்துயர்நிமிரவும்......*
பெருந்திருக்கலாபப்பீலிகளாடவு ................*
மருந்திருக்காவலூரகத்துக்கண்டேன் ............*
கண்டுளம்பிணித்துருகுங்கனிதே. ...................*
னுண்டுளெம்பிரிவினி யூழியுமரிதே.............(உ௪)

(குறம் - ஆசிரியச்சந்தவிருத்தம்.)

அரித்தையறிந்த திடத்தையறைந்த குடத்தியருங்குற மம்மேகேள்*
வரித்தனவண்டணி பற்றியவங்கை வரிக்குறிகண்டுழி காவல்லூர்....*
தரித்தவணங்குமிதித்தெழுதிங்கடரித்தபதந்தொழுகையேனைப்.....*
பரித்தவணங்கியபற்றளவொண்பொருள்பற்றியொருங்குயிர்வாழ்வா
[யே (உ௫)

(கட்டளைக்கலித்துறை.)

வாழா வழங்கா வினைக்கட னீந்தா வருந்துவிர்கா .........*
டாழா திருக்கா வலூர்சென் றணுகத் தழுங்கியநீ..........*

ராழார் கலிக்கள வுண்டெனு மில்லை யமரர்தொழூங். ......*
கேழா ரடியணங் கின்புறுங் கேண்மை கிளர்கடற்கே. (௨௬)

(நேரிசைவெண்பா.)

கடற்கரைசூழ் காணுக் கருத்தழிக்கும் பாவ............*
வுடற்கரைசூழாவி யுளைவீர்—மிடற்கரைகொண்........*
டாவலூர் வான்கதிசேர்ந் தாங்குவப்பீர் நாயகிசேர்....*
காவலூர்ச் சேர்ந்த கடை..........................(௨௭)

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

கடைந்தமண்ணியணிகடந்தவடிவொளி கலந்தவுருவொடுநீபயந் ......*
தடைந்ததிருமகனகன்றபொழுதுயி ரகன்றவுடலெனநோவவுள்...*
ளுடைந்தவுனதிடருணர்ந்துநமதிட ருழங்கலொழிகுபகாவலூர்...*
மிடைந்தவருணலம்விளைந்ததிருமகன் மிளிர்ந்தவடிவடிகாட்டவே..*

(கட்டளைக்கலிப்பா.) (௨௮)

காட்டினிற்பிறுமுவுலகேந்தியகையிலேயடைந்நின்மகனேந்தியன். .*
பூட்டியின்சுவையாகவையாயிர ருண்டுவாழவிருந்துவழங்கினு......*
ளூட்டிலாண்டுநின்காவலிதாகவே நாகுதிங்களணிபணிதாளியுன்....*
வீட்டிலென்னை விளித்தொருநாளையோர் விருந்தளிப்ப வெனக்கிரங்
காய்கொலோ.............................................(௨௯)

(இரங்கல்-ஆசிரியவிருத்தம்.)

இரங்கொழியா வினைக்கடலை நீந்தவுன்னன் பெனுமிதவையேறிமறை விளக்கேநோக்கி, நெருங்கொழியா வவாவிரவினீந்தியப்பா னீயாளு ந்திருக்காவலூர்சென்றின்ப, மொருங்கொழியா மனத்திருளே யொழிந்துமேல்வா ழும்பர்நாட்டெழுங் கரையைக்கண்டே னென்றேன், மருங்கொழியாவாதவனுமதியுமீனும் வணந்தணிந்தவுன்வடிவங் கண்டபோதே.. ..........................................(௩௰)

(தழை - கட்டளைக்கலித்துறை.)

போதவிழ் பூங்கொடி யாய்செங் கதிர்பூண்டாள் பொற்றழையா...*
மீதவிழ் மீன்றழை யாக்கொண்டாண் மஞ்ஞையாய் வெண்மதியைத்
தாதவிழ் தாமரைத் தாட்டழை யாவுற்று டாயரசாள்..............*
சீதவிழ் முத்தழை நீழலிற் காவலூர் சீர்த்ததுவே. .............(௩௧)

(அம்மானை.)

சீர்த்ததிருக் காவனலூர்த் தேவணங்கு தாட்கமல......*
நீர்த்ததிருத் திங்கண்மே னின்றனகா ணம்மானை.......*
நீர்த்ததிருத் திங்கண்மே னின்றனவென் றுமாகில்......*

ஆர்த்ததிரு வண்டுவெப்ப வாங்கலரா வம்மானை..........*
போர்த்ததிருச் சோதியின்பப் போதலரு மம்மானை...*

போதலருந் தன்னசினைக்காப் பூங்காவ லூரரசி.........*
யாதவனைத் தூசா யணிந்தனள்கா ணம்மானை..........*
யாதவனைத் தூசா யணிந்தனளென் றுமாகின்.........*
மாதலர்பூ மேனிநலம் வாடாதோ வம்மானை...........*
மாதருணீர் மூழ்கிரவி வாய்குளிரு மம்மானை..........*

வாய்குளிர்பூங் காவனலூர் வாழவரம் பெய்யிறைவி....*
மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தா ளம்மானை.*
மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தா ளாமாகிற்..*
றாய்குளிர்வாய் மீன்கதிர்முன் றேன்றுமோ வம்மானை*
தாய்குளிர்வாய்ச் சார்ந்தார்க்குத் தாழ்வில்லை யம்மானை. (௩௨)

(நேரிசைவெண்பா.)

மானெய்தான் வான்பெற்றான் வான்பெற்றான் காவலூர்............*
மானெய்தான் மானுப் வரம்பெற்றுத்—தானரியை..............*
யானைமுனர் வைத்தீன்று ளாயிரம்வாள் வேந்தனையோர் ..........*
தானையாக் கொண்டெழுந்தா டான்..........................(௩௩)

(ஆசிரியவிருத்தம்.)

தானுகத்தடங்காதாய் மேனுகத்தடங்காவார் தனையன்றோ......*
தேனுகத்தானுகத் திழிந்துதவவெழுந்துதவ வுரிமைகாட்டி...........*
வானுகத்தேனுகத் திருவரங்கடருவரங்கே வந்தாரன்றோ............*
கானுகப்பூநாகத் தரும்புதிருவிரும்புதிருக் காவலூரோ.........(௩௪)

(ஆசிரியவிருத்தம்.)

காவலகத்தானுந் தேவமுகத்தானுங் கடவுளுயிர்த்தானு மடவுளுயிர்த்தானு, மோவலறுத்தானு மாவல்வெறுத்தானு முலகுபுரிந்தானு மலகுபரிந்தானுந், தேவவரத்தானுங் காவகரத்தானுந் திசையையளித்தானு நசையையொளித்தானும், பாவிகணித்தானு மாவிபிணித்தானும் பண்டினையற்றானுந் தொண்டனையுற்றாளே. .........(௩௫)

(ஆசிரியவிருத்தம்.)

தாளணிந்தமதிமுதலாத்தமியனுமக்கமலத்தாடாங்கிலேன்றே, கோளணிந்தகுழலணிதார் குடைவண்டாப் புகழ்பாடி மதுவுண்ணேன்றே, வாளணிந்தவினைப்படைவெல்வலிச்சிங்கமீன் றவொருமானுய்வந்தாள் கேளணிந்தகாவனலூர்க்கிளர்புனத்துப்பசும்புல்லாக்கிடவேனன்றே*

(கட்டளைக்கலித்துறை.)

கிடந்தேன் வினைக்கடன் மூழ்கிநீ தாக்கக் கிளைத்ததுயர்..........✻
கடந்தே னியாடிருக் காவலூர் சேர்ந்தேன் கடிமலர்க்கா...........✻
நடந்தே னறம்பொரு ளின்ப மெதிர்கொண்டெ னண்ணியுன்று...✻
ளடைந்தே னினிவீ டடையேனோ வென்னுயி ராமொளியே...(௩௭)

(சமுகவுல்லாசம்-ஆசிரியவிருத்தம்.)

ஒளியுளியெனவின மணியணிகொடிகொணர் வானவர்நூறுஞ் சிறந்த தொருபா, லுயிர்தருநிழலமரொளிதருகுடைகொணர் வேறொருநூற்றிரண்டதொருபா, லருமணியணியுருவினரிடு வளிவழி சாமரைநூறுஞ்செறிந்ததொருபால்...........✻
துளியுளிமுகிலென முரசொடுபறையொடு பாடினர்நாமம் புகழ்ந்த தொருபால், துளையுளகுழலொடுகுரலுகள்கலமொடு வீணைகள்யாவுந்தெளிந்ததொருபால், தொனியுளவலையலைவன வெனமணியணிவானவர்சூழப்பணிந்ததொருபால்...........✻
வெளியுளியிருளற வெயிலரசெழுமென வாதவனுருங்கலிங்கவடிவாள் வினையறமனையுறமருளடவருளிடவாகனமாமிந்தெழுந்துவரா வே, விரைவடிவடியடியுறையுறுமறுவறுகாவனலூரின்வதிந்தனுகினாள்...........................................✻
களியுளியருள்பொருணிகழ்புகழ்கலைநிலைநாடுவிர்யாருந்துதைந்ததுயராய்க், கழலிலகரமில மகரில நிகரிலநோகுவிர்யாருந்திரண்டு மருவீர், கருணையள்கதியினள் கனிவினள்கடையிலள் பூவடிநாளும்பணிந்துதொழுவீர்...............................(௩௮)

(நேரிசைவெண்பா.)

தொழுவாய்த் தொழுவாரித் றொத்பகைநோய் தீரா...✻
தழுவா ரழுவாரிங் கில்லைச்—செழுமாதின்..............✻
காவலினை யுற்றூர் கழிகுலத்தா ரோனும்வான்...........✻
காவலனா யொப்பார் களித்து.........................(௩௯)

(விருத்தம்.)

களிவிளைத்தனள் கலிவதைத்தனள் கதியமைத்தன ளாயினாள்......✻
வெளிவிளக்கின வெயிலுதித்தன விரைமுகத்தன காவலூ.........✻
ருளியுதித்துளி யுடலிடுக்கணு முயிரிலக்கணு நீத்தவா ............✻
விளிவிளைத்தன விகல்வடுப்பகை யிடரொருப்பட வொழியுமே(௪௰)

(கட்டளைக்கலித்துறை.)

ஒழியா முதலாய்த்தே வாதிக்க நீதிதா னுற்பவமா..........✻
யழியா தொருவற்கே தாயு மகளுமா யாரமுதாய்ப்..........✻

பழிநாக வெவ்விட மாற்று மருந்தாய்ப் பரகதிக்கோர்......*
வழியாய்த் துணையாய்நமைக்காப்பக்காவலூர்வைகினளே (சக)

(மருட்பா.)

வைகலெனவந் துமன்னுயிராற்கங்குலறும். ....................*
வைகலைச்செய்தேயொளியைவாய்த்துயிர்த்தே—வைகினுள்...*

காவலூருறை காதலார்துறை.........*
யோவலீர்களி யோதியாரொளி........*
தெளித்தநூலி திறத்தசீலி............*
களித்தமாலை கயத்தவேலை............*
மந்திரமறைமொழி மண்டலகுறையொழி..*
சந்திரவடியினள் சந்துடமுடியினள்........*
காதனுயகி கதிதரும்..........................*
வேதநாயகி மெல்லடியணிவமே........(சஉ)

(ஆசிரியவிருத்தம்.)

அணிவளங்கனுள்மணிவளங்கனுளருடைதைத்தனண்மருள்வதைத்தனள்
பணிவணங்கனுள் கணியணங்னுள் பழிவிலக்கவும் வழிதுலக்கவுந்...*
துணியவீரமா யணியவாரமாய்ச் சுருதிவாயினுள் பரிதிவேயினுள்.*
கணியலங்கலாள் மணிவிலங்கலாள் காவலூரினு டேவநாரியே...(சௗ)

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

நாரியிவணயவாரியிவடயைநாரியிவடிருமாரியிவளுறைகாவலூர்ச்..*
சாரிவரவரி தேரினிருபுடை தாரினமரர்கள் வேரிமதுமலர்தாழ்விலா
வாரியிமிர்குழறேரியெழுபுகழ்மாரிகொடிகுடைமாரிசவரிகள் வாயெ
லா, நேரிலெழிலெழு காரினொலியலை நீரினொலிமிகுதேரினிவள்வரு
மரவமே..............................................................(சச)

(நேரிசைவெண்பா.)

அரவம் படவெழுந்தா ளாகம் படுத்து..........*
மரவம் படச்சீ றடியா—ளரவத்தாற்............*
பாருலகும் பேருலகும் பாவனையாத் தானனாகி.*
நேரொளியுங் காவனலூர் நீர் ...............(சடு)

(இரங்கல்-ஆசிரியவிருத்தம்.)

நீராருந்தடமே தடஞ்சூழுநியமேநியமாளுந்திருவேதிருச்சேருங்கா
வ, லூராரும்பொழிலே பொழிலாருமுழையேயுழைபாயுங்களியாற்
களியேனே நானே, யாராருந்துயராற் றுயரோறவழியுந் றழியாத
கதியிற் கதிப்பாளமதியோர், தாராருமடியே கதிராருமடியே தாராரு
முடியே யுயிர்மாசில்சுடரோ.................................(சசா)

(நேரிசைவெண்பா.)

சுடர்முடியா யோர்குகையு ணீயீன்ற தோன்றற் *
படர்முடியார்வந்து பணிந்தா—ரிடர்முடியா ..*
தின்றுணர்வார் காவனலூ ரெய்திப் பணியாரோ*
குன்று மெனக் கொண்ட கோது............(௪௭)

(கட்டளைக்கலித்துறை.)

கோதென்னயாவுமுளதீதறக்கொய்மினிர் கோண்முடியாள்................*
போதென்பூத்தசெந்தாளணிந்தேதத்தவே பொய்ப்பொருள்சேர். *
காதலுங்காமமுங்கோபமுங்காவற் களிச்செருக்குந்..................*
தீதெனச்சேராதிருக்காவலூ ரம்மன்சீரடியே...................(௪௮)

(வஞ்சிப்பா.)

சீர்விளக்கியசெல்வியாய்ப்-பார்விளக்கியபாவையே ..........*
தென்காவிரிதிரண்டொலிப்ப-மன்காவிரிமலர்கமழப் ........*
பூந்தாதகில்புடைநிழற்றத்-தீந்தாதகில்சினைகுளிர்ப்ப........*
வருட்காவலூரமைந்தளிப்பத்- திருக்காவலூர்ச்சேர்ந்தனளே*
சேர்ந்தபின்னுனேபுண்பழிநையவெண்....*
மதிதானேபூண்பதந்தான்றாராளோ.......*
திருவடியொளிவுளந்தெளிவுறக்கண்டாற் ...*
கருவடியிருளறக்கண்டு ......................*
மருவடிமலரடிவான்கதியந்தமே ......(௪௯)

(சித்து-ஆசிரியவிருத்தம்.)

அந்தமிலா வன்னமிலா வாடையிலாநல்குரவுற் றமைமைநந்தீர்காள் *
சுந்தரநானிழற்காவலூரிருக்குமருஞ்சித்தன்றெழிலைக்கேண்மி. ...*
னிந்தநின்வெண் கலமூன்றுஞ் செம்பொன்றுங்கஞ்சத்தாளிரண்டுஞ்
சேர்த்திச், சந்ததம்வெண்பித்தளையுமிரும்புஞ்செம்பொன்னாக்கித்த
ருவான்கண்டீர் ..............................................(௫௰)

(சம்பிரதம்-கட்டளைக்கலித்துறை.)

ஈரிடத் தீயத்தை வெட்டிட வெள்ளியா யீவன்றரா............*
நேரிடப் பித்தளை மாசறப் பொன்னென நேர்நிறையாய்....*
நீரிடும் வித்தைக் கிவையாக்கிக் காவலூர் நீர்த்தினிதாள் ......*
நாரியின் கண்ணிரந் தண்பெனிச் சம்ப்ரத நான்செயவே (௫௧)

(நேரிசைவெண்பா.)

நானுத் தயைதளிர்ப்ப ஞான நிழற் குளிர்ப்பத்...*
தேனூர் வரமரும்பச் சீர்கனிய—வானூரு..........*

மஞ்சலிசெய் யுன்றா ளருட்காவ னாயகியே........*
யெஞ்சிலதோர் சோலை யெனக்கு.......... (௫௨)

(ஆசிரியவிருத்தம்.)

நக்கனமுத்தேயொப்பமுகைத்தேநக்குநிழற்காகாவனலூர்ப்......*
புக்ககொடிக்கேதக்கவெழிற்கோர்பொற்புவமித்தெபுகழ்வாரா.....*
ரக்கமலர்க்கேமுத்துநகைக்கேயத்தமுதற்கேயரிதாகத்..............*
தொக்களவிற்கேமிக்ககவிற்கேதொக்கவனைத்தேதோற்பனவே (௫௩)

(விருத்தம்)

அனமாடுந்தடவாயினலமாடுமடக்கோயில்மேலார்ந்த ............*
கனமாடுங்கொடியாடக்கனமாடுமுடியாளைக்காண்பேனே.........*
மனமாடுமறவாழிவடிவாகவறவாழிசேர்ந்தாடப்.....................*
புனமாடுந்திருக்காவற்புனமாடிப்பெருக்காவலாற்றேனே. ....(௫௪)

(வெளிவிருத்தம்.)

ஆற்றூர்களிப்பவினைத்தியாற்றுமேநாயகியே.. .........*
தேற்றூர்தெளிப்பமறைநூல்தேற்றுமாநாயகியே ......*
மாற்றூர்வினைநீத்துயிர்நோய்மாற்றும்வானாயகியே.....*
பூற்றூர்காவனல்லூர்க்கின்பூற்றுமானாயகியே...... (௫௫)

(காப்பியக்கலித்துறை.)

மானாரஞ்சவஞ்சணிமண்பேய்மயலஞ்சக்.........*
கானார்காவலூரிடைகண்டேனொருமானை.........*
மானோதோவித்திறமென்றேன்மடமானாய்.. ...*
வானோத்துங்கோளரியீன்றாள்வரத்தென்றூர் (௫௬)

(நேரிசைவெண்பா.)

தாராகத் தண்மதிப்பூந் தாளணிய வென்னெஞ்சே....*
யாராய்ந்து வுன்குறைகண் டஞ்சற்க—பாராயோ.....*
வானாள்வாள் காவலூர் வந்தெழுந்தா டாளணியாக்.....*
கூனாங் குறைமதியைக் கொண்டு....................(௫௭)

(தாழிசை.)

கொண்டலாடி விலங்கல்கொண்ட குளிர்ந்தகொண்டல் பரந்தெழாக்
கொடிபடர்ந்துவளர்ந்தமுல்லைநகைத்துவாசமுகைத்துரா.*
யுண்டதேறலுமிழ்ந்தகொம்பரொசிந்துவண்டுமுழங்கலோ-டுளியொ
ருங்குமகிழ்ந்துகான முகைத்துதீரியகாவலூர் ..........*
விண்டளங்கள்விரும்பியண்டி விளங்கிமண்டிவிசும்புலாம்-விதுவணிந்
தபதங்கடாழ விழைந்துபாடவணங்கிரா...................*

மண்டநூலி வியந்தசூலி விரிந்தசிலி வழங்குதே - வரியமாரி பரந்த
வாரி புரந்தநாரிதொழேங்கொலோ. .................. (௫அ)

(தென்றல்-கழிநெடில்விருத்தம்.)

கொல்லாவலர்ந்தபடர்நிழனுடிக் கொண்டொலிவந்துபுக்கொடுங்கக்-
கொழுந்தழல்புழுங்கிப் பேயின்றேருந்தீக் கொதித்துலாஞ்சுடுவனசு
ரத்துத்—தொல்லாவிஞ்சுந்திருவடியாளே துன்னியவேல்வையவ்வன
மே-தொடையணிபூண்டமணமகளாகத் தொகைநகைமுகநகைத்து
வப்ப — வொல்லாவருவித்தீம்புனலோட வொசித்துவண் டினங்கள்
யாழொலிப்ப-வுயர்குயில்பாடத் துணைமயிலாட வுலாவியநறுஞ்சிறு
காலே — செல்லாவொளிப்பத் திருப்புகழ்தொழுமத் தெரிவையாள்
காவலூரெய்தித்-தீவினையழற்றுமென்மனங்குளிர்ப்பத் தென்றலேபூ
ர்தியோய்விலவெ ............................................ (௫௯)

(ஆசிரியவிருத்தம்)

ஓயவணங்கிடரோயநெடும்பிணியோயவுடன்றிடுபேய்...*
காயவருந்தியகாமவருந்துயர்காதலமுங்கியநோய்......*
தேயவழங்கியதேகமலங்கொடுதீயவொருங்கறவே......*
நேயவணங்குறைகாவனலூர்நிழனேடிவதிந்துறைவீர் (௬0)

(ஊசல்.)

உறைவழங்குங்காவனலூரரசாளீன்ற...................*
வொப்பிலநூலோனடிதாழ்ந்தரும்பாவல்லீர்.....*
துறைவழங்குஞ்சீரொழுத்தேயசையிற்றீட்டித் .........*
தொடைவிருத்தங்கட்டிலடிபந்தம்பூட்டி..........*
நறைவழங்குங்கலிவெள்ளைசவரம்வீச ....................*
நாளுமருட்பாவைமகற் காட்டிரூசல் ...............*
முறைவழங்குந்தாழிசையால்வஞ்சிபாட ................*
மொய்த்தமயிலகவலினேடாடிரூசல.. ....... (௬௧)
ஆட்டியருட்செல்வியெனுந் தேவதாயா ...............*
மருங்கன்னிநலம்பாடி யாடிரூசல் ................*
காட்டியநற்றவவீட்டிற்பொறிகளென்னுங் ..............*
கதவடைத்தேயொழுக்கத்தாட்குகிப்பூட்டி.......*
யீட்டியதேவருள்விரித்தவுளத்தின்மஞ்ச .................*
மேந்தியவன் பெனுங்கயிறிட் டாட்டிரூசல் ......*
நாட்டியசெல்வத்திணையாக்காவலூரா ......................*
ணங்கைதிருப்புகழறைந்தேயாடிரூசல்.......(௬௨)

(நேரிசைவெண்பா.)

ஊசல்கொண் டாடி யுயிர்வருந்த யாவருமே. .........*
பாசங்கொண் டாடுமவர் பட்டலைவார்—பூசல்கொண் ..*
டார்த்திடமே லோர்புகழு மன்னையாள் காவனலூர்....*
நீர்த்தடமே யாடா நிலைக்கு. ........................(௬௩)

(தாழிசை.)

நிலையானதில்லையென்று நிலையாகநின்ரு ணிகராதவருள்கொண்டு துணை யாயதிலதேறற், சிலையானமலைநைந்துசிதராடிநலியத்திளையானகடனி ன்றுதிடனுகநிலையா, யலையாதநிலமென்றுநடவாயதறிவே லலராருநி ழல்கொண்டுவளர்காவலமருேர்தீ, தலையானவனையென்று தமியோருமலையாத் தயவாகநிலைதந்துதிதியாகவெளிதே ...................(௬௪)

(கட்டளைக்கலித்துறை.)

எளியர்க் கிரங்கிக் கதியேற வாளு ரிடும்வடமோ......*
தெளிவற்ற தீவினைக் கொய்தெறும் பாசமோதேவருளாற்
களியன் புயிரைப் பிணிக்குந் தளைகொலோ காவனலூ .*
ருளிநங்கை யங்கையி லேந்து மணிமாலை யொப்பிலதே. (௬௫)

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

ஒப்பநிகரிலநாலியுற்றவரமொருவேவி யொத்தவளைவிலசீவி-கதிசேர ச், செப்பமருளியவேதிசித்தமருளறுசோதிசித்திவிளைவனநீதி- திரை சூழ, வெப்பகைபுமொழிவாகை யுத்தரணிநனியோகை யித்தரணிவி ளையீகை-யரசாள, வப்பதியர்தொடராவ விப்பதியர்தொடர்காவலப் பதியிலமர்தேவ-மகளே ..................................(௬௬)

(கலிவிருத்தம்.)

மகளொனவாதித்தாயினள்வனைமுடிதாரகைசூடினள்.......*
பகலவனுருமாடையள்பனிமதிநீவுதாளினள்...............*
அகமலருருதேரினளருடருகாவலூரின....................*
ளுகமெனயாவுநானிவளொழிகிலெனூழியூழியே.. ...(௬௭)

(நேரிசைவெண்பா.)

ஊழி யொழியினுநா னுன்ரு ளொழிவேனே.........*
சூழிவணி காவனலூர்ச் சுந்தரியே—கேழிழையாண் ...*
மண்டவிர்ந்தவிண்டளங்கள்வந்தணிந்துகொண்டிறைஞ்சி
யெண்டவிர்ந்தவின்புமிழ்ந்தவென்று ............. (௬௮)

(கட்டளைக்கலித்துறை.)

என்றுயர்க் கின்ப மரிதைம் பொறிக்கிளை தேடுவைபின்............*
கொன்றுய ராற்றில வாடுவை யென்னெஞ்சே கூட்பியலை.........*

சென்றுயர் காவலூர் நாயகி போற்றிலை தேடிலைநொந் ...............*
துன்றுயர் கூறிலை தன்புகழ் பாடிலை யோதிலையே .............. (௬௯)

(வஞ்சிவிருத்தம்.)

ஓதிமிருந்தாளோகைமிகுந்தாளுருவாக...........*
வாதிபயந்தாளாவிவியந்தாளகிலாளுங்...........*
கோதிலளென்பாள்கோதிலரன்பாள்கொழுங்காவற்
சேதியமைந்தாள்சேமமடைந்தைதேரேனே... (எய)

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

தேர்ந்தனையோவதீர்ந்தனைகாவதிருந்தினைமருந்தினைநிகரன் -பார்ந்த
னைமருளினீர்ந்தனையருளும்பரங்கினையிரங்கினையினிதிற்-சார்ந்தனைபு
கரோபேர்ந்தனைநிகரோதவிர்ந்தனையவிர்ந்தனையெனையு - மோர்ந்தனை
யிலையோதேர்ந்தனையிலையோவுறுப்பினைவெறுப்பினை யினிதே. (எக)

(தாழிசை.)

இனிதணங்கறுதானவனந்தமே யிருபதந்தொழுதானவனந்தமே. ..*
முனிவர்தாழ்ந்தணிபாதவரத்தமேமுத்திகாட்டுமென் பாதவரத்தமே
தனிநலோர்பெறுவாவியதஞ்சமேதயவினென்னுளவாவியதஞ்சமே*
கனிபிரான்மருவாரணவாழியேகாவலூர்தயைவாரணவாழியே. (எஉ)

(இணைக்குறளாசிரியப்பா.)

வாழியவும்பர்வணங்கியவணங்கே...........*
வாழிவானொளியே-வாழிபாருயிரோ..........*
யாதியையீன்றனை-நீதியையூன்றினை. ........*
பானொளியணிந்தனை-மீனொளிபுனைந்தனை..*
குறைமதிமிதித்தனை- மறைமொழிவிதித்தனை
மேதினிகாத்தனை-தீதினைநீத்தனை. ..........*
கதிக்கதவாயினை- திதிக்கதிவாயினை .........*
வானோர்களித்தனை-மீனோர்களித்தனை ......*
தொழுமுளத்துள்ளுறைசோதியை.........*
யழுமுளத்தாதரவோதியை.. ................*
நீரகத்தம்புயநேரினை-யாரகத்தம்பரநீரினை*
வானவர்வாழ்த்தலாயினை......................*
மீனவர்போற்றவிங்கெய்தினை..............*
யாவலூர்வழியார்திருக்-காவலூரருங்காதலே.
யன்புணர்நீயிவணமைந்தபின். ..............*
பொன்புணருலகொடுபூவுலகொத்ததே (எ௩)

(கட்டளைக்கலித்துறை.)

ஒத்த வடிவந்த மண்டலத் துண்டரோ யோரிரதம்........................*
வைத்த மதிபின் சுடரோன் றெளிவிடு மாமரியே...........................*
மொய்த்த வன்புற்றென் கண்வாழ நான்கண்டனன் மூவணிநீ......*
மெய்த்திறத் தேந்தித்தேர்மேல்வருங் காவலூர் வீதியிலே......(௭௪)

(தாழிசை.)

வீதிமந்திர நூலியே யாதிதந்திரவேலியே-வென்றிதந்தமடங்கலே நன்றிதந்தவடங்கலே—நீதிசுந்தரகோலியே கோதிலந்தரசீலியே-நிந்தைநீங்குமனந்தமே யெந்தையீங்கருளந்தமே—பாதியிந்தணிபாதியே சோதிவந்தணிசோதியே - பங்கநீத்தலர்கஞ்சமே பங்கநீத்தமர்தஞ்சமே—யோதிலம்பரஞானமே யேதிலும்பர்மானமே - யோவலீனதன்பளே காவலூரரசென்பளே ........................... (௭௫)

(நேரிசைவெண்பா.)

என்பதுகான்யாறு நீந்தி பெரியாசைத்.....................*
துன்பச் சுரங்கடந்து வாழேமோ—வன்பிலதா. ........*
யென்றுணர்ந்தாய் நெஞ்சே யிணைகாவ லூரன்னை.....*
முன்றுணரா வாழ்நான் முகந்து.........................(௭௬)

(தாழிசை.)

நாண்முகத்துநறவுலாவி நளினமீதிலனமுலாவி நடனமாடநயனநாகர்நயநயத்தகாவலூர்ப்—பாண்முகத்துமுரலவீணைபாமுகத்துவளரவோதை பாய்முகத்துவிளையுமோதை பார்முகத்துநிகரிலா — தூண்முகத்துநிமிருமாடை சுடர்முகட்டிறுவசமாட வடிதுதித்தசுடர்கள் பாட நரர்களித்துநாடமீன்— பூண்முகத்துமுடிவணங்கு பூமுகைத்தவடியணங்கு பூதலத்திலணுகியாளும் பொன்னகைத்தகோயிலே.*

(விருத்தம்.) (௭௭)

கோயிலன்புடையா டாயிலின்புடையாள்கூன்மதியடியாள் கோண்மவிமுடியாள்—வாயினைத்துடைப்பா ளேயினைத்துடைப்பாள்வருந்தினர்களிப்பாள் மருந்துநேரளிப்பாள்— பேயடக்கடலாள் மீயடக்கடலாள் பெரும்புவனத்தே யரும்புவனத்தாள்—தீயுளத்தகல்வாடேயுளத்தகலா டேவரூர்வணங்குங் காவலூரணங்கே..................(௭௮)

(கட்டளைக்கலித்துறை.)

அணங்காலத் தூயமு தாகு மணங்கே யனைத்துயிர்க்கு.................*
மணங்காலத் தேன்காலுங் காவளை காவலூர் வந்தெழுந்தா..........*
விணங்காத வெவ்வினை யாற்றவித் தேவ விருட்பொழில்செய்......*
யுணங்கா நிழல்வனத் தூழியே காய்வ ருளங்கெடவே.......... (௭௯)

(ஆசிரியவிருத்தம்.)

கெடவோவெஞ்சா தழவோதஞ்சங் கிளர்தாட்கஞ்சம்புனைவாய்நெஞ்
சுடவிஞ்சியவஞ்சகவெஞ்சுரமார் துயரற்றினிநீகதிபெற்றெழநாம்[சே
படமாங்கதிருங்குழலூடுவும்பதமார்மதியும்பதமேற்றவரு ......*
தடமிட்டுவிளக்குபகாவனலூர்த்தலமேவினர்மேவினமேவரசாள்..*

(கட்டளைக்கலித்துறை.) (௮௰)

மேவித் தயையன்பெ னேர்பூட்டி வேதநூல் வித்துவிளைத்........*
தாவியை வாட்டு மவாக்களை கட்டு வடைக்கலஞ்சூழ்................*
தாவிய வேலியாய் நல்வினை பூத்துமீன் றூர்முடியாள். ...............*
காவன லூரிற்செய் பைங்கூழ்கள் பேரின்பங் காய்த்திடுமே...(௮௧)

(பா.ன்ன-கழிநெடில்விருத்தம்.)

இடும்புகழே படப்பாடத் கரும்பொருளே தேடியபாலா படுகளே
கேளா - யெல்லாமுறைகொண் டாக்கினனே மழைத்திரள்
கொண்டழித்தனனே கடனீர்மூழ்கிப்............................*
படும்பகற்றேர் நிறுத்தினனே யேழடிபின் னிழுத்தனனே யடியே
காணப் - படர்புணரி பிரித்தனனே யலைநிலமேனடந்த[ன்]
னே பூங்காவொப்பச்.......................................*
சுடும்படர்தீக் குளிர்த்தனனே பகலுமிர வாக்கினனே தொன்னேய்
நீக்கித் - துகைத்திறந்தாரெழுப்பினனே மலைநடுங்கப்பிளந்
தனனே யினையபாடி.........................................*
நெடும்புகழார் நாயகிதேன் றருங்காவ லூர்வதிந்த நயமாதீன்ற-நிம
லனிவன்விளையாடும் படியிதுதானெவ்வுலகுங்கனியமாதோ.

(ஆசிரியவிருத்தம்.) (௮௨)

கனிமாலைச் சினையேந்தத் தீந்தேனேந்துங் காவலூராவலூர்ந் தனு
கிப்போற்றும்—பனிமாலை யேந்திரவி கதிர்செய்மாலை பற்றிரண்டா
ள்பற்றினர்வாழ் நாளிற்றுகத்— துனிமாலைதோன்றியுயிர்க்கந்திமாலை
தோன்றுமுன்றுதிமாலை கொண்டுபைம்பொ—னனிமாலைதிருக்கோ
யி லிடத்தாடேவ நங்கைதிரு வங்கைதரு மாலைசூடீர்..........(௮௩)

(மடக்குஆசிரியவிருத்தம்.)

சூடிமலர்வீழ்நீர்க்கயலே துள்ளுங்காவலூர்க்கயலே..............*
நேடிபுறைசீர்க்கலிப்புணரி நேராவுறைநீர்க்கலிப்புணரி............*
யாடியவிர்மீன் பூண்டாளை யண்டிமதியைப்பூண்டாளை..........*
நாடிக்காண்கின்முகந்திருப்பீர் நையாநாளுமுகந்திருப்பீர்...(௮௪)

ST. MARY'S

(நேரிசைவெண்பா.)

இருந்தென்செய்கேனோ மூழைகுழேங்கி.........*
வருந்தேன்போல்வந்து வருந்தேனோ—வருந்தேவ
காவலூர்கோதைகட்காணேகைப்பற்றவென்......*
றுவிக்கோர் தேன்றுளியே யாங்கு ......... (௮௫)

(வஞ்சிவிருத்தம்.)

ஆங்கமலத்தேங்கமலமாய்நிலாத்......*
தாங்கவிருபாங்கவிருதாளெழீ.........*
நீங்கவலையாங்கவலைநீசவென்..........*
நீங்குவகைநீங்குவகைசேர்ந்ததே(௮௬)

(ஆசிரியவிருத்தம்.)

சேர்ந்தார்மதிபூண்சேர்ந்தாளவளேசேர்ந்தாளெனவேசேர்காவனலூ
ரார்ந்தார்சுரரு மார்ந்தார்நரரு மந்தாதியுவென் றந்தாடொழவே..*
தேர்ந்தாரெவருந் தீர்ந்தார்துயருந் தேந்தாரொழுகுந் தேன்றாரணி
யை-நேர்ந்தார்மகிழாநின்றானிதேநேர்ந்தார்மூழ்கிநீந்தார்நெடிதே

(ஆசிரியச்சந்தவிருத்தம்.) (௮௭)

நெடிதுலைப்பன துயரயர்வறவற நிலைபயப்பனவ்ருடகவருடரு நிசிம
றுப்பனபழியழிவொழிதர-வாயெலாங்.........................*
கடியுதைப்பனவிவறிய நசையசை கடலடைப்பனவமரரும் விழைவ
ன கதிதிறப்பன நிகரிலநலமுல-காரவே.........................*
துடிதுவைப்பவு மிசைபெறுபுகழெழு தொனிதொனிப்பவு முடிவில
தொழுபவர் துதியொலிப்பவு முகிலினுமொலியெழு-காவலூர்
படியனைத்திலு மெழநனியருளியை பரிவடைக்கல மெனவிவணெ
ழுவன பனிமுகத்தமு தொளிவிரிமதியெழு-பாதமே...(௮௮)

(தாழிசை.)

மதியெழுந்தபாதமேமதிகடந்தவேதமே.........*
மருண்மறந்தநீதமேயருள்சிறந்தசீதமே......*
துதியெழுந்தசீலியேவிதிவிரிந்தமாலியே.........*
துணையெழுந்தசூலியே திணையமைந்தவேலியே*
கதியரும்புகமலமே நிதியரும்புமமலமே.........*
கடவுடந்தபதவியீங் கிடவுயர்ந்தவுதவியாய் ...*
நதிவழங்குகாவலூர்ப் பதிவழங்குகாவலே........*
நன்னையாகமுன்னையாளென்னையாளுமன்னையே (௮௯)

(நேரிசைவெண்பா.)

அன்னையே நீயல்லா லன்புற்றென் னோயறிந்தீங் .......*
கென்னையே யார்யா ரினிக்காப்பார்—தொன்னோய்...*
பெருக்காவ தீரப் பெருமருந்தா நீயா.................*
டிருக்காவ லூர்விளையுந் தேன்.....................(௰)

(கழிநெடில்விருத்தம்.)

தேன்வீற்றிருக்கும்பனிநறும்பூஞ் சினைக்கா நிழற்றுங்காவனலூர் திரு
வீற்றிருக்கும்பொற்கோயிற்றீம்பாற்கதிர்க்கூன்மதிக்குறடே.*
மீன்வீற்றிருக்கு மணங்கநலாள் விரிவாய்த்தொளிவாய்விதானத்துள்
விண்வீற்றிருக்குந்தளந்தொழுதுவிரும்பிச்செய்யும்பணிகேட்ப*
வான்வீற்றிருச்குஞாயிறுபோல் வையமெங்குமருணீங்கி..........*
வாழ்வீற்றிருக்குமுகிற்கையால் வரையாநயன்பெய்வானரசா...*
டாள் வீற்றிருக்குமென்மனமே தழைப்பநோக்கவேண்டியவ.....*
டயைவீற்றிருக்குந்திருவடியென் றலையலேயென்றலையலே..(௰௧)

(குறம்-விருத்தம்.)

என்றலையென்னையொ டம்மைபழங்கலையீந் தென்குறமன்பொடு
கேளீர் காவனலூர் — மின்றலையாடரு மாலையோடுத்தரிகம் வேட்ட
னர்வேட்டலர் வீட்டறவிட்டுயர்தாய்—தன்றலைமீனொடு பூணிருவான்
சுடருந் தாமணிவாரிரு ளுள்ளணியாத் தெளிவார்— தன்றலையம்புலி
யாண்டபி னம்புலிபோற் றோன்றினர்வானர சாள்பவர்வேதமிதே.*

(தாழிசை.) (௰௨)

வேதவிளக்கெனவந்தாள் விரதவிளக்கெனநின்றாள்.....*
சீதமுகிற்கிணையீந்தா டருவினிகர்க்கிணைதந்தா.........*
ளோதமெனக்கரையில்லா வுயிரினெனக்கருணல்லாள்.*
காதலூரக்கதியானாள் காவலூரப்பதியாளே....... (௰௩)

(மதங்கி-விருத்தம்.)

பதியுகிர்வெம்பருந்தெடுப்பப் பசுங்கிள்ளைபதைத்தெழுப்ப.......*
வதியருள்கொண்டுதவியதே வனமானூந்திருக்காவற்...............*
றுதியருளொண்குயில்பாடத் துணையாடுமயிலல்லான்.............*
மதிமருண்மற்றொருமதங்கி மருவாதிங்கெழுந்தகையே. ......(௰௪)

(ஆசிரியவிருத்தம்.)

எழுந்தடிகீழ்க்குழவிமதியமுதிறைப்பக் குழலணிமீனிழைத்துப் பூப்
பச்-செழுந்திருவின்மார்பிலணிசெங்கதிரினொளிதியங்கச்செங்கைநீட்
டிக்-கழுந்தகைவான் வீட்டழகுகாட்டுதற்கேகாவனலூர்க் கனிசென்
றாளோ - வழுந்தொளிவாய்க் கெழுந்துளிவார்கமலத்தா ளமலத்தாள
[ரும்பாநல்லாள்.

(தூது-கட்டளைக்கலித்துறை.)

அரும்பா முகைத்தேவ கன்னி தவமறி யாதனவோ.................*
விரும்பா மனத்தா துணைகூற வுற்றாய் வியப்பனகே................*
டிரும்பா முகைசேர் கனியொப்பக் கன்னியாய்த் தேவமைந்தற்...*
றரும்பான்மை கூறுந்தா தாயினென் காவலூர் தாயிழைக்கே (௯௬)

(ஆசிரியவிருத்தம்.)

இழைவளர்கோயி லுழைவளர்தாயி லின்புடைக்கிழத்தி வென்புடை-
நிழற்றி—புழைதிரிகாவின் மழைதிரிகாவ லூருழிசேர்ந்தாள் சூருழி
தீர்ந்தாள்—வழைநிழலகத்தென் பிழையழலகற்ற வான்வரம்பொழி
யுந் தான்வரம்பொழிவாள்—கழைபொழிவாயாள் மழைபொழிகை
யாள் காவியுண்விழியென் னாவியுண்விழியே..................(௯௭)

(வலைச்சி-ஆசிரியச்சந்தவிருத்தம்.)

விழிக்கயலோகுழிக்கயலோவிலைச்சிலைவான்வலைச்சியரோ விற்பவுற்றீர்
பிழிக்கயலாம்பொழிக்கயலாஞ்செருக்காவற் றிருக்காவற் பெயர்கொ
ண்மூதூர்-வழிக்கயலுள்ளூழிக்கயலுண்குருகியலையருகியலை மதியாது
ற்றீர்-பழிக்கயலாம்விழிக்கயலாஞ்சோர்வற்று ரவர்சேர்வர் பணித்தட
[த்தே.

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

தடமலிதருவுயர்தருமலர்தருமதுநறவுமிழ்நிழலுமிழ்காவலூ-ரிடமலி
வருநயமருள்பொருளிறையறைமறைபொறைதயையியையீகையாய்
விடமலிவினைமலிமிகையறமிகைமலிநசையறவசையிறநோயெலாம்-
படமலிதயையினள்பரவிபரிவினள்பரமனையருளினள்பாடினேன். (௯௯)

(நேரிசைவெண்பா.)

பாடிப் புகழ்ந்து படர்காவ லூர்நங்கை.................*
நாடி வணங்கு நரரொல்லாங்—கேடிலரோ ...............*
மண்ணவருண் மாசிலராய் வாழ்ந்திவண்மற்றொப்பிலராய்
விண்ணவருள் வீற்றிருந்தொப் பார்................ (௱)

(மாணுக்கன்-விருத்தம்.)

இருள்வீற்றிருக்குநிழற்பூங்காவிடைபூண்காவலூரகத்தே ...... [ரு
பொருள்வீற்றிருக்குந்திருக்கோயிற் பொன்னாசனத்திற் பொலிந்தா
மருள்வீற்றிருக்குமணிமார்பினணங்கைப்பாடியடிபணிந்தான்.....*
றெருள்வீற்றிருக்குமெய்ச்சுருதிதெளிக்கும்வீரமாமுனியே ........*

திருக்காவலூர்க்கலம்பகம்

முற்றிற்று.

# தேவமாதாவினது
## தோத்திரம்.

நீயொருதாயொரு தாதையுநீயுயிர் நீயெவையாகிலுநீ.................*
நீகனிவார்கடல் நீயொளியார்சுடர் நீயருளார்முகில்நீ................*
நீயிறையோனெழு மாசனநீநெறி வேதம்வழாநெறிநீ................*
நீமுகிழாத நறுமலர்நீநிறை நூனிகராவுருநீ.......................*

ஏரணியேயிதயத்திலிருந்தெனை யாளுண்டயானவளே................*
சீரணியேமதி வெண்குடையேதிரு மாரிவிடும்புயலே................*
ஆரணியேகரு ணாகரியேயுயிர் யாவுமளித்தமுதார்.................*
வாரணியேதனி நாயகியேநனி வாழுதிவாழுதியே....................*

வாழியனந்த தயாபரனுக்குரி வாய்ந்தருடாயவளே...................*
வாழிவிசும்பிடை வாழுயரும்பரின் வாமவிராக்கினியே...............*
வாழிமுகிண்டில பூவனைகன்னிய மாதனையாளரசே..................*
வாழியழுந்தருளே மறையேயறனே நனிவாழுதியே.................*

மருடருவலியுருவே மருளறுசினவுருவே ……………*
யருடருதயையுருவே யளவறுதிருவுருவே……………*
தெருடருகலையுருவே செயிரறுமனுவுருவே ……………*
பொருடருமணியுருவே பொழிமணவடிதொழுதேன.*

(இதன்பொருள்.)

பிறரஞ்சிமயங்குதற்குக்காரணமாகியவல்லமையுடையோ[illegible], தான் மயக்கமின்றிச் சினத்தைக் கொண்டோனே, அருளி[illegible] தயையுருவோனே, யளவிறந்தசெல்வத்திற் மிக்கோனே, தெளி[illegible] ல்வியினுருவே, பூவுலகங்கொண்ட பாவவினையறும்படி மனுக்கோலத்தை யெடுத்தோனே, பொன்னிற்பதித்த மாணிக்க வடிவோனே, உனதுவாசமலர்ப் பாதத்தைத்தொழுதேன்……………………*

உரையிலகலைநிலையே யுயரறமடையுரையே……………*
கரையிலபடர்கடலே கதியுயிர்பெறுகரையே.. ………*
வரையிலசுகநிலையேவளர்தவமடைவரையே……………*
புரையிலமனுமகனே பொதிமலரடிதொழுதேன்……*

(இதன்பொருள்.)

காதிற்குப்புலனாகிய வொலியைக்கொண்ட வுரையொன்றின்றிக்கல்வியெல்லாமுணர்ந்து நிலையேயுயர்ந்த வரமொன்றே யடையுமுரையே, கரையில்லாதசகல நன்மைநிறைந்த கடலே, கதியைச்சென்றவுயிர்களடையுங்கரையே, மட்டில்லாத சுகானந்தநிலையே, வளர்ந்ததவமொன்றே சேர்ந்தடையுமலையே, ஒப்பில்லாத தன்மைத்து மனுமகனானவனே யுனது மலர்பொதிந்த திருப்பாதத்தைத் தொழுதேன் ..……………………………*

மருமலிமலர்நிழலே மறைமலியுயர்பயனே ………*
திருமலிகரமுகிலே சிவமலிதனிமுதலே……………*
யிருமலியுலகுளரோ யிணரொடுதொழுமடியே ………*
குருமலியறநெறியே கொழுமலரடிதொழுதேன் ……*

(இதன்பொருள்.)

வாசமலர்ச்சோலையொத்த வருளால் நிழல்செய் தளித்தவனே, வேதநமக்குப்பயன்றரும்படிவந்தவனே, செல்வநன்மைகளைப்பொழியு மேகமொத்தகையுள்ளவனே, மோக்ஷத்தைத்தருந்தனிமுதலோனே, வானுலகத்தோரும் பூவுலகத்தோருமலரைச்சாத்தி வணங்கப்பட்ட திருப்பாதத்தையுடையோனே, இங்கவதரித்துக் குருவாகவந்து நல்லறத்தின்வழுவாநெறியே, உனதுதிருமலர்ப் பாதத்தைத்தொழுதேன்.

சோசுவன்வெற்றிப்படலத்திலிருந்தெடுக்கப்பட்டன.

நனத்தெழுதிவைத்ததெனவுறுதிஞானத்தகுதியினுன்......................*
மனத்தெழுதிவைத்தமறைமறையத்தீமைமல்கியதாற்......................*
கனத்தெழுதிவைத்தமினலொத்தவாழ்க்கைகாதலித்துப்......................*
புனத்தெழுதிவைத்தபொருளொத்தவ்வேதம்புறத்தொழிந்தார்.....*

(இ-ள்.) நானேபொற்றகட்டி லெழுதினற்போல ஞானமென்னுமெழுத்தினல் மனிதர்மனத்தி லவர்களை யுண்டாக்கிவைத்தபொழுதேயெழுதிவைத்தவேதம் பினபு மறையும்படி அவர்கள்செய்த பாவங்கள்மிகுந்ததனுல் மேகத்தின்மேலெழுதப்பட்டமின்போ லொளிதந்தொழியுமிப்பூவுலகின் வாழ்க்கையைவிரும்பி மலையினின்றிழியு மருவிமணலின்மேலெழுதிய கல்விப்பொருளழிந்ததுபோல அவ்வேதநூலழியும்படிஅதைவிட்டொழிந்தார்.....................................*

வரிவேதமாகஅவ்வியல்வேதத்தை மீளவுங்கடவுள்
கல்லிலெழுதியளித்ததன்மையாவது.

மருண்மொய்ப்பத்திவினையுமிருளுமொய்த்துமனுக்குலத்தோர் ...*
இருண்மொய்ப்பமனத்தெழுதிவைத்த நுண்மாணெழுத்துணராப்: *
பொருண்மொய்ப்பத்திரிந்தந்தோகுருட்டால்வீழ்வர் புலவிலேனு*
அருண்மொய்ப்பக்கல்லிடையம்மறையைத்தீட்டியளிப்பலென்றான் *

(இ-ள்.) அங்ஙனமயக்கமிகுதியாற்பாவங்களுமந்தோளத்திருளுமொய்த்து மொய்த்தவிருளாகியவஞ்ஞானத்தால் மனிதர்தம் மனதிலே நுன்மையாகவெழுதப்பட்டவேதநூலெழுத்தைக் கண்டுபிடிக்கமாட்டாமற் செல்வப்பொருள்களைமாத்திரந்தேடி அஞ்ஞானக்குருட்டினுலேறும் ஐயோ, நரகத்திலே விழுகின்றனென்று நான் தயைமிகும்படி அவ்வேதநூலைக் கல்லின்மேலெழுதித்தருவே னென்றுணுண்டவன் ..........................................................*

செல்லின்மேல்வண்ணயில்வணாந்தநூலிவன்றன்; .........*
நீட்டவோர்விலங்கலுமேறிக்.................................*
கல்லின்மேல்வணாந்தவெழுத்தொழிந்தாகக்...............*
கண்டருந்தவையயின்சுருதி...................................*
எல்லின்மேன்மிளிர்தன்னுடலமேடாக......................*
விருப்பயிலாணியாற்பொறித்து ..............................*
வில்லின்மேலவிர்செம்புனலின்மையிட்டு ................*
மெலிவறவிளங்கலேசெய்வான்................................*

(இ- ள்.) அவதரித்தகடவுளால் வேதமெங்ஙனம் பரம்பு மென்னில் முன்னாளிலேமேகங்களைக்கடந்த விம்மலையுச்சிமேலெழுதப்பட்டவேதநூ லிக்கடவுடான் மீட்டெழுதும்படி தானுமொரு மலையுச்சிமேலேறிக் கல்லிலேபதித்த வெழுத்துகளொழிந்தன வென்றுகண்டுதன்றயைபுரிந்து சூரியனொப்ப விளங்கிய தன்றிருமேனியே யேடாகக்கொண்டு கூர்ந்தவிருப்பாணிகளால் வேதநூற்பொறித்தெழுதிச் சிந்தின தன்றிருக்குருதியென்னும்விளங்கியமையிட்டுப்பிற்காலத்துமெலியாதபடிவேதம்விளங்கவேசெய்வார்..............................※

அருள்வேதமாகவதனையேயளவில்லாத காருண்ணியத்தாற்கடவுடாமே யவதரித்துத் தமதுதிருவுடலமே திவ்விய வேடாகக்கொண்டு அதிலேஎழுதியளித்தநுக்கிரகம்புரிந்தது ..............................※

(வேறு.)

அழுதார்ந்ததுயர்க்கரத்திற்பிறந்துகைக்கு.................※
மரந்தையின்பாலருந்திவளர்ந்தருள்வளர்ந்த ..............※
பொழுதார்ந்தவஞ்சகத்தார்பகைசெய்தார்ப்பப்........※
பொறையேயராய்ப்பூட்டிச்செம்புனற்சேருக..............※
வுழுதார்ந்தவர்ர்வவிதைவித்திப்பின்னு.....................※
முரியவர நீரிறைத்துவிளைந்தவின்பம்.......................※
வழுதார்ந்தவையகத்தாருய்தற்கீந்தான்.....................※
மணிக்கலத்தூடமுதேந்துமருண்மொய்மார்போன்.....※

(இ-ள்.) சுவாமிதாம்மனிதனுயமுதுநிறைந்த துயர்களின் கையிலேபிறந்து கசக்குந்துன்பங்களினதுபாலையுண்டு வளர்ந்து அவரோடு தமதுதயையும்வளர்ந்தபொழுது பாவிகளவருக்குப் பகைசெய்து முடிங்கலிற்றுமேபொறுமையை யேயொன்றுபூட்டிச்சிந்திய தமதிரத்தத்திருற்சேருக்கியுழுதுநிறைந்ததமது தயையை வித்தாகவிளைத்தபின்னரவரவர்க்கானவரங்களை நீராகவிறைத்து இதனால் விளையுமோக்ஷபேரின்பத்தை இவ்வுலகத்தார் வாழ்வதற்குத்தந்தார். மாணிக்கத்தாற்செய்தபாத்திரத்திலமுதினையேந்தினதுபோலநிறைந்த கருணையைக்கொண்டமார்பினையுடையசுவாமி..............................※

சீனயிமாமலைகாண்படலத்திலிருந்தெடுக்கப்பட்டன.

சர்வேஸ்வராய நம.

# அல்வினையழுங்கல் அந்தாதி.

---

## வெண்பா.

வானிருந்து பாரின்மிசை வந்துதித்தோன் பொற்றாளை
யானுவந்தே னுள்ளத்தி னேத்தலுற்றேன்—றானியற்று
நோயவிழ்த்துத் தாயுளத்தி னொந்த துயர்ப்பாடல்..
வாயவிழ்த்துத் தான்முடிக்க வந்து.

(கலித்துறை.)

வரைகனி வாதி வணங்கினர் மாநில மன்னுயிர்கட்
கொருகனி செய்வடி தீர்ப்பக் குருதியி னோர்நதியாற்
றிருகனி காய்த்த சிலுவைக்கணோர் நிழற்சேர்ந்தெழுந்த
மரியழும் பான்மை யுரைப்பா மனமெழப் பாருளரே. (க)

பாருளர் யாரும் பனிவரைச் சேர்ந்து பதம்பணிந்தே
நேருள தாயின்க ணீரோ டெமதுகண் ணீர்விரவாக்
காருள வெம்முன்னை ணகவடு யாவுங் கழுவியறா..
நாருள நாத னிறையரு ணீக்குமிந் நாட்டிடரே. (உ)

இடருற்ற ஞாலமும் வானு முளவுயி ரென்னவையு
மடிவுற்றுவாழ மனுவுடற் போர்த்து மறவினையாற்
றிடனற்ற கூளி கொடுங்கோற் றரந்தெமைத் தேற்றுவிப்பான்
படியுற்று வந்தருள் சேசெனு நாமம் படைப்பவனே. (ங)

அவனியர் யாரு மியற்றிய தீவினை யையனெடுத்
தெவனினு மாற்றாக் கொடுமையைத் தீர்ப்ப விகலவர்கீழ்ச்
சிவணியர் தாமுஞ் செறிந்தே பிணிபடச் சீருளமாய்
நவமர மீதறை யுண்டா னயனரு ணாயகனே. (ச)

நாயக னாயினு மீண்டு தனக்கோர் நறுமகனைத்
தாயவ ளோங்கு சிலுவையிற் கண்டு தனித்துயரா
னேயக லாழியி னாழ்ந்து கரைபெற நோக்கிப்போ
சேயுட லோடு பிணித்தா லெனச்செழுங் கண்ணுறலே. (ரு)

உறலரி தாணியின் கூட வறைந்தோ வுடலமெலாங்
கறையுறு காய நெருக்கினிற் புக்கோ கணையணையாப்
பிறழ்சிர மேலறை முள்ளினுட் பட்டோ பிணிமகனே
மறுமறு பார்த்து மலர்விழி வாங்குரி தாகுதலே. (சு)

குதலை மொழியாள் குருமணிக் கண்ணுற் குடித்துணுநோ..........*
யிதயம் பொருண்மையின் வாய்விட் டுமிழ விருந்துயர்த்தாய்.........*
முதலங் கடவுளை நோக்கி யுணாத்த முருகவிழ்பூ....................*
மதுவின் கனிசொலைக் கேட்பா மறுவற மானிடரோ...............(௭)

மானிட ருற்ற வடுவினைக் கண்டு மனமிரங்கி.........................*
மீனில மேல்வழி காட்ட விரக்கமில் வெய்தரிதா.....................*
யூனமி லுன்னொ டரிலறு மோரிறை யுன்புதல்வற்....................*
ருனிழி வுள்விட லாமோ தயையுறு தற்பரனே....................(௮)

தற்பர னாகிக் குறையற வீன்ற தடமகனை................................*
யற்புதக் கன்னி தகுதியைச் சேர்த்தி யருமுறையா.....................*
லுற்பவ மீந்தித் துயரைப் படவோ வொருமகளாக்....................*
கற்புடன் றாயென வீன்றேன் கடனொடு காசினிக்கே.............(௯)

காசினிக் காகக் கடியொளி யென்னகை கான்மதிய.....................*
மாசறத் தண்ண மவிர்குடை யன்ன நின் னார்கருணை.................*
மாசறத் தெய்வஞ் செயும்பேரீழ் தெனக்கென் மறமதியார்.........*
பாசறை செய்யுந் தழலாப் படுத்திய வாறரிதே.....................(௰)

அரிதென வான்வா ழருளைப் பெறலா னவிர்குடைக்கீழ்ச்...........*
சுருதியி னுயத் துகடீர் முறையென் றெருகிலுழையா...............*
வொருமக ளாய தமியே னுலகின ருய்த்துவப்பத்.......................*
திருவரு ளின்னைப் பயந்தே னெனக்கொரு சேயெனவே......(௰௧)

சேயென யாவும் படைத்தானை யீன்ற செழுநயனுன்...................*
றாயெனை யாருஞ் சிறந்தவ ளென்றார் தவழ்கடல்சூ....................*
ழாயகல் பாரி லுளரீ ரெனையனை யார்தளரல்...........................*
நோயென யாவுமுள் ளூட்டேறத் தேர்ந்து நொடித்துமினே.(௰௨)

நொடித்தரி தாய துயரொடு கள்வருணேயுயிர்க்கு.......................*
மெடுத்தரி தாய மரத்தி னிறப்பன வோவிமகன்..........................*
வடித்தரி தாய துனியோ டிருமட மாவிடையிற்..........................*
படைத்தரி தாய குமரியு மாயும் பயந்தனனே........................(௰௩)

பயந்தேன் வளர்த்தேன் பரித்தே னணிமுலைப் பாலளித்தே........*
னயந்தேன் சுடர்முக நாடிச் சிறந்தே னறுமலர்வீழ்....................*
கயந்தே னனைகிளர் கண்ணீர் துடைத்தேன் கடிசுரமார்ந்............*
தியன்றேன் பிணர்நினை யன்றே விடுத்தே னிகலவர்க்கே........(௰௪)

இகலவன் வேந்தன் கொடுங்கோல் வெருவி யெகிப்தெனுநா.......*
டகறரச்சேர்ந்து நிறைமறை ஞான மருளறியாத் . ...............*
திகையவர் நர்ப்பண் புரந்தன ளந்தோ சினக்கொடியோர்.........*
மகனை யின் றெள்ளுடன் கொல்வான் மயக்குறக் கண்டனனே..(௰௫)

கண்டு வியந்த மட நலிர் வந்தயிற் கண்கவர்ந்த.......................*
பண்டு வனப்பெழற் பான்மையைப் பார்மின் பணியுறுங்கால்......*
வண்டு வரிச்சிறை மெல்வளி யானவிழ் வார்மடற்சே...............*
யிண்டை மலர்வா டனையா யிளமுக மாறினதே................(௰௬)

மாறினுங் கஞ்ச மலரனை யைந்து மணிவிரற்கை.....................*
பீறிய பேரயி லாணிபொகுட்டாப் பெருகவிழ்தீந்.....................*
தேறலை வீழ்கறை சில்லொன் றுவென் மனத்தொறுக்கும்.........*
வீறென ளுன்னை யறிகுவன் யான்பினர் வேறிலையே............(௰௭)

இலையே மதிவெண் ணிலவே யுடைந்தன வேர்புயத்தை...............*
யலையே தொழும்பார் கொடுமிக லாரு மடித்தவிழ்வாய்க்..........*
கலையே யனையவர்க் கோதி யதனுருக் கண்டெனக்கோ.............*
ருலையே யுமிழுந் தழலா னுளத்திடு காடிவணே.................(௰௮)

இவனுமு வாம லெரிமீ னினைப்போழ் திருவிழிசெய்...............*
துவரவிழ் வாயுடன் றேன்றும் வதனஞ்சுடரொவனே...............*
வவிர் நுதல் வாயின் வடிகறை யாற்சிவந் தஞ்சுடரோன்.............*
புவிவிடு மாலை யனையா யெனக்கிருள் போர்த்ததுவே.........(௰௯)

வேனில வார்ந்த சுடரினை வென்றவிழிமலரான்......................*
மானில மன்னுயிர் தன்னுயி ராமென மாண்பெறநீ...................*
பானலம் வென்ற பரிவுடன் பார்த்துப் படுந்துயர்செய்...............*
கானலின் வேமெனைப் பாராம லென்னவென் காதலனே......(௨௰)

தலனே பொருவித்தடநெடுங் கண்ணெனத் தாரகைசெய்..........*
நிலவே மறைந்து நுதல்கொள்புருவ நிகரிலநீள்.......................*
சிலையே விழியி னுருவுமுள்ளம்பெனச் சேர்த்திவிட.................*
விலதே யெனதுளத் தெய்தாவிணையிறன் பெய்தினனே........(௨௧)

எய்தின வார்ந்த விடும்பையு ளாற்று திகலுவப்பச்.....................*
செய்திகழ் சோர்ந்த தலைகுனித்தந்தோ செழுமுயிர்வாழ்............*
மெய்துறந் தேகுத லோவேனை யின்பம்விரித்துணைப்பா. ...........*
னைதிகழ் சேயின் விழிக்குதலோவென் றறிகிலையே.............. (௨௨)

அறிகிலே யானென்ன வின்னமுளரி யலரனையா.......................*
யெறிதுவர் மேனி பரத்தவிளர்ப்பு மிருவிரும்பா.....................*
ணறைபடு காலினையுற்றகுளிர்ப்புமொ ணையுமின்றிப் ................*
பெறலரி தாவி விடலா லெனப்பிறழ் கின்றனவே................(௨௩)

நவையறு வான்சுடர் யாவும் வகுத்தநன் ஞயகணின்.................*
டவனியர்க் காக மரித்ததி னன்றே வருமுறையா.....................*
னிவரிட ரானிருஞ் சேணிடைத் தோன்று மிரவிநிலாக்..............*
கவினொளித் தார்வமன் மாநிலத் தார்க்குருக் காட்டியதே.......(௨௪)

காட்டிய வார்வ மறியா மறமன்னர் காசினியி.......................*
னூட்டிய திண்சிலை யிவ்வனைப் பார்மி னடுங்கியுளாய்க்...........*
கோட்டலை கொள்ளா துடைந்தா லிதுதனிற் கோட்டியகூர் .........*
சூட்டிய தோரன் பிலனொன் சுடுவினை யெண்ணலரே............(௨௫)

எண்ணலு மெண்ணரி யுறுதி துணையென் றெவருமில்யான்...........*
கண்ணுமிழ் நீர்செய் கடலிடை யாழ்ந்து கருத்திலனே..............*
புண்ணிகழ்ந் தாவி நயந்திலி தேறு முனையுனையாட்.................*
புண்ணுறு வேலென் றுளதா மிடையிடை பூத்தவையே ......(௨௬)

அவைகொ ளவர்க்கு மருமறை நூலறைந் தைம்பொறிசூழ்.......*
தவரிறை விற்சிமை யோனவன் சாற்றிய தானைவவாள்............*
சிவணி யுளமுள் ளுருவிய பான்மையிற் சிந்தையருக்...............*
கவலை யுடைந்தன ளந்தோ கடையி னிறப்புவனே ..............(௨௭)

இறப்புவ தாய விடும்பையி னின்னை யிழந்தனளாய்.................*
வெறுப்புட னுண்மூன் றிருந்தன னல்லோ விரியறிவான் ..........*
மறப்பில நீயே முழுதெனை விட்டு மனமிரங்காப்....................*
பொறுப்பரி தாய வுளநோய் பொழிதலென் னீண்டெனக்கே.(௨௮)

எனக்கோர் சிறுவனுந் தெய்வமு நீயிருந் தேந்தருளா................*
னினக்கோர் பயந்தாளெனைவிட் டிறந்ததென் னின்னையலான்......*
மனக்கோ ருறுதுணை யின்றி புனையிலண் மண்ணிடையான் .........*
பினர்க்கோர் பொழுதிருப் பேனோ வெனதுயிர்ப் பேருயிரோ..(௨௯)

உயிரிடராய பெருங்கடன் மூழ்கினி யுள்ளுடைந்தா ..............*
டுயெறி நீயினுட் பெய்தளிர் போலத் துனிபடுங்கா ................*
லயிலவி ரீட்டியின் மைந்தன் விலாவை யவைக்குவரோ..............*
செயிர்வினைக் கண்ட துயராற் சிதைந்து மயங்கினளே...........(௩௰)

மயங்கி விழவு மரிதோ ழியர்நண்ணி வன்கரமே.....................*
வியங்க விருப்புடன் றூக்கி யழுங்கின ரின்னுயிர்போய்த்............*
தயங்கு விழியான் சிறுவனைப் பின்றொடர் தாயுயிரும்...............*
வியங்கொ ணிலம்விட் டிறந்தன ளோவென விம்மினரோ .......(௬௧)

விம்மின தோழியர் கையிற் கிடந்த விளர்மரியாள் ..................*
செம்மலின் வாயி னருள்பெற் றருந்தவன் சென்றினிதோர்.........*
கம்மது தேனிற் கனிந்த சுவைகொள் கனிமொழியாற்.. ..............*
பொம்மெனத் தாயை யினிப்பார்த் திரங்கிப் புரிந்தனனே .....(௬௨)

புரிந்து மெனையோர் மகனெனக் கொண்ட பொழுதினில்யான். ...*
வருந்தி யழுங்க வெனைவிட லாமோ மனுவுடலான்....................*
விரிந்து நிலத்திடை வேய்ந்த நினக்கோர் வியன்மகன்சே............*
சிருந்தண் மொழியை மறந்தனை யோவென் றியம்பினனே.....(௬௩)

இயம்புதல் வார்குழை வாயி னிதய மிடைநுழைந்தே ...............*
வியன்புவி யாவும் புரக்குந்தன் சேயின் விரிபெயரா ..............*
னயம்பட வுண்ணிகழ்ந் தாவி தடநெடு நாட்டமவிழ்ந். ............*
துயங்குத லிர்னெட் டுயிர்ப்போ டுயவொழுந் தாண்மரியே......(௬௪)

அரிய சிலுவை யிருகையின் மார்பி னணைத்தனளா ...................*
யுரிய வுயிரா யருந்தினள் போல வுயர்மரத்திற். .......................*
கரிய துயரொடு தூங்குஞ் சிறுவனைக் கண்ணுறப்பின்.....................*
றெரிவை முயன்று புலம்பாற் சிலமொழி செப்பினளே ........(௬௫)

நவின் மவிழ்வாய் நறுமிதழ் வென்ற நகையுடல.........................*
மளிநலம் யாவு மகறுறந் தாவி யருமருளாற்.............................*
களிநிகழ்ந் தாயெனைக் காக்க வென துளங் கண்வதிந்தால்.............*
விளிவெனத் தீர்ந்த நயனும் விரிகுடை வேந்திறையே..........(௬௬)

இறையோன் விதித்த வெரிவான் றவழ்ந்தார்ப் பெறிகடல்சூழ்......*
பொறைதோன் றணிநயன் யாவு மறந்தே புரைவினையாற்............*
கறைதோன் றுள்மிடை நீவிர் கொடிய கருத்தயர்ந்தோர்............*
மறுதோன் றியவசை கைம்மா றிதுபழி மன்னவரோ. .......... (௬௭)

மன்னவர் யாவ ருயிரைப் புரப்பான் மனமிரங்கித்.....................*
தன்னளி யாற்று மிவனன் பளவுந் தழல்வினையா.......................*
னண்ணிய நீவிர் செயுங்கோ ளளவு மல்கிடுவா .......................*
னெண்ணிடி னிம்மரங் கோலா மிடுநன் றறிவிலரோ. ..............(௬௮)

அறிவிலர் நீயிரடுந்தொழி லாற்று மலகையையோ ※
றிறையெனப் போற்றித் தொழுதலினன்றோ விருமளியாற் ※
பொறையுள யாவும் புரக்குங் கடவுள் புனைமரத்தி ※
னிறையுறை யுண்டு மரித்தா னிசிமறு வீசனரோ (௩௯)

ஈசற்ற கைவில ரீச ரெனத்தொழு தேத்தியநீர் ※
தேசி னடந்தரிற் கொண்டதி னன்றோ சிலுவையின்மேற் ※
காசு முடிசூழ் பிதாவின் கொடிய கதந்தணிப்பா ※
னூசு தவிரும் பலியாங் கருள்வ னருஞ்சுதனே (௪௰)

சுதனுற வார்ந்த செருக்கு நினைவினிற் சூட்டரிதா ※
யதருறுந் தீய கடவையி னன்றோ வவிர்கறையோர் ※
நதியுறத் தூய சிரத்தை நெடுமுண் ணவைமுடியாற் ※
சிதையுற மூடி யறைந்தார் செயிருறு மாற்றலரோ (௪௧)

மாற்ற லரிதெனக் காம முழைந்த மனமுறக்கண் ※
ணூற்றும் வடுவெனப் பார்வையி னன்றோ வலர்ந்தளிதேன் ※
றூற்றுங் கமல விழியிடை முள்ளுறத் தோன்றிடரா ※
னேற்று மிம்மையைக் குவித்தாங் கெனக்கு ளிருண்டதுவே (௪௨)

உண்டெதி ரூது மளியினஞ் சூழ்ந்த வொண்ணூர்கமழ்தேன் ※
றெண்டுவ ராம்பல் செறிந்துமிழ் போலச் சிறிதுளைத்தா ※
விண்டர்க டேடு மமுதுமிழ்ந் செவ்வா யரிதுறுந்திக் ※
கொண்டச் சொற் கோடலை யன்றோ கொடியகைப் புற்றதுவே (௪௩)

உற்ற குளிசிலை நாணி யனைய வுறுப்பினைதீள் ※
பெற்ற சிலுவையி னீட்டி யிழுத்தனர் பேரிரும்பாற் ※
கொற்றக் குடையி னருளு மிருகை கொடுங்கடியார் ※
முற்று மருளில் வினையான் முடுக வறைந்தனரோ (௪௪)

தனகவி ரார்வத் தகைவய மார்பன் றளர்ந்தினுமார் ※
மனவருள் காட்டப் பகுவாய லென்ன மனுக்குலத்தா ※
ரனலெனக் காமவெம் வேண்டலி னன்றோ வயினெடுவேல் ※
வினைபொரச் சாலத் துயரான் விலாவைத் திறந்ததுவே (௪௫)

துவர்துகி ரோடு கலந்தவெண் முத்தங்கொ டுட்பெரிவா ※
யவிர்தழ லாம்பல் கிழிந்திதழ் நீரோ டவிழ்ந்ததுவே ※
கவினுறக் கீண்ட விலாக்கறை யோடு கமழுமிழ்நீர் ※
நிவர்தகை யான்மட நல்லீர் நுமக்கணி யாகுவதே (௪௬)

ஆகுவ தோர்வழி யற்றைம் புலனிய லாற்றுமைவிட்.................*
டேகுவ தோர்செயுந் தீவினை தீர்ப்ப விரங்கருளான்.................*
போகுவ தோரரும் வீதி நடந்த புரிவவிர்தா.........................*
ணுகுவ தோர மறந்தோ நுனைசயஞ் சேறினதே ... ..........(௪௭)

சேற்றி னிறீய விரகஞ் சுகமெனத் தேடுமவர்.........................*
வீற்றிருந் தாற்று மிகழ்வினை யானும் விரிதலைப்பா..................*
ரோற்றிய நன்வனப் பெல்லா மொருவடி வென்றுருகி.................*
யாற்றிய மேனி வளையா தடிமிதிப் பட்டதுவே.................(௪௮)

பட்ட வடுவின் பரந்த குருதி படுமுடன்மேற்.........................*
பெட்ட கருணையை யாவர்க்குங் காட்டப் பிணைபெறுஞ்சீர்.........*
விட்ட வெனக்கிது காட்டுந் துயரினை மேவியதா ....................*
னட்ட ரறிகுவ ரல்லா னவின்றிட லூங்கரிதே..................(௪௯)

ஊங்கரி தாய சுரந்தொடர் கின்ற வொன்னாரருளா ....................*
ரீங்கிவ னீந்த வினிதன்பு கண்டு மிருவளைமே.........................*
லாங்கடு மாவி லதிக கொடுவினை யாற்றலைநீர்.........................*
நீங்கில ராத னிலையோ நிசிமறந் தந்தகரோ........................(௫௰)

தகவுமி லாளைத் தகமதி யென்றினி தாழியராய்ப்.....................*
பகைவரு மார்வ முளரும் பகைத்துப் பலநிலையாய்....................*
நகுவினை நாடி நகைபுறங் கூறி நனிகவர்ந்தார்.......................*
துகடரு தீவினை யாற்றொட ராப்பயன் றோன்றுவதே ...(௫௧)

தோன்றுந் துயரந் திளைப்ப நிகரி றுயரினர்யா.........................*
னீன்ற வுடலிடை நீங்கிய வின்னுயி ரின்னமுமீண்.....................*
டான்ற நயமெய்ப் புகுந்த புனையி னடைதுயரான்.....................*
மான்ற விடல்வேண் டுவதோ மறுவுறு தோட்டுளரோ..........(௫௨)

தோட்டு மலர்க்கரத் தாணி குருதியிற் றோய்த்தடியே..................*
ஞாட்டைப் புரக்கு மிறைவன் கருணையு நானிலநீர்....................*
கூட்டு மரத்தின் கொடுமையும் யாருங் குறிப்பறிவான்...............*
நீட்டி யிரண்டி லதிகமி யாதெனச் செப்புமினே................(௫௩)

செப்புமின் மேனி சிறப்புயிர் விட்டுத் தினையினுளா....................*
யொப்பிகந் தோனு மிறந்தன னன்றோ வொலிபடவாங்.............*
கப்புமின் ஞாழி யணைநிலத் தார்க்கு மருளமைவாந்.................*
துப்புமின் காந்துடைப் பானு றுயர்மெய் யிறக்குமினே......(௫௪)

ST. MARY'S LIBRARY MADURA

மின்னெடுங் கண்ணழு தேரிழந் தாங்குழை யாயமெய்தா..........*
வென்னிடுஞ் சொல்லா னிரங்கிய சில்ல றெறியுயர்வான்..............*
றுன்னிடு மீனைவெல் மேனி யிறக்கித் துயரலையான்.................*
முன்னிடை மூழ்கித் தளர்தாய் முனர்கொடு வந்தனரோ........(௫௫)

கொடுவந்த மேனியை யன்னை மடியினிற் கொண்டனளா...........*
யிடைவந்த வேதனை வென்ற விடுக்கணு ளெய்துவச்சூழ்.............*
புடைவந்த தோழியர்ப் பாரா மொழியும் புரிந்திலளாய்ப்..........*
படிவந்த தெய்வ மகன்மேனி பார்த்தங் கிருந்தனளே.........(௫௬)

இருந்த விருவுடல் வண்ணம் பொருவிடின் சேசுவினுல்............*
வரைந்த விருதறுஞ் சித்திர மென்பர் வடிதழலாற். ................*
கரிந்த மனத்துய ராற்றுகக் கண்ணிரு நெடடுயிர்ப்பும்.............*
புரிந்த வுயிரிய வில்லாள் புரியுடைத் தாயவளே...............(௫௭)

தாயவ ளுள்ளுரு கித்தடங் கண்ணீர் தருந்தழலாற்.................*
சேயவன் காய நனைந்துவப் பெய்தச் சிறப்பிகழ்தாய்.............*
நோயலை யானுங் கருத்திலன் மாழ்ந்தொண் ணுதல்குளிர்ப்ப.....*
வாயுயிர் போய்மகன் மெய்யாங் கடைந்ததென் பார்சிலரோ...(௫௮)

சிலர்தேற் றுவாருஞ் செறிந்தகண் ணீரைச் செழுந்துகிலாற்........*
சிலர்மாற் றுவாரு மருந்துய ரானுஞ் சிதையவெந்தீ.................*
சிலராற் றுவாரு முடலுறந் தாவி திரும்புதற்கே.....................*
சிலர்போற் றுவாரு மடியர் திதியரு டெய்வதமே..............(௫௯)

வதன மிதழும் வனப்புச் சிலையமை வாணுதலுங்.....................*
கதழுவிர் மீன்வேற் கணுந்துவர் வாயுங் கவின்மடல்சேர்............*
பதுமமென் மேனி யனைத்தும் பரந்தெழிற் பான்மையிலா........*
விதயம்விட் டாவி யிறந்தா ளெனச்சிலர் சாற்றினரோ..........(௬௰)

சாற்றிய பாசுரங் கேட்டு நணுகித் தகையுறுந்தேன்.................*
றூற்றிய வாய்துடிக் கின்றது மல்கித் துவன்றியநீ....................*
ரூற்றிய கண்ணிமைக் கின்றதும் பார்த்தெனி னுன்னணிகழ்ந்த......*
தேற்றில தாவி துறந்தா ளலள்சிலர் செப்பினரோ...............(௬௧)

பினரொன செய்குவ ரெண்ணி மகனுயிர் பின்றொடர்ந்தாய்.........*
துனியுன வாழியின் மூழ்கி யிறந்தன டோன்றுதலா...............*
னனியமு தோழியர் நீக்கி வருத்தஞ்செய் நற்புதல்வ..................*
னினிதரத் தூக்கிச் சிலர்போய்த் தழுங்கி யெடுத்தனரோ........(௬௨)

எடுத்தனர் போர்க்கையி லெய்திய தோர்நய னன்றிழந்து
விடுத்தனர் போற்பயந் தாளெழுந் தோவென விம்மியகாற்
கடித்துணர் தாமரை வாய்க்குவிந் துட்செங் கதிரடைபோ
லடுத்தனர் சேயைத் துகிலா லடக்குதல் பார்த்தனளே (௬௩)

பார்த்து நயந்தார் செபுந்தொழி லானும் பயந்தனடா
னீர்த்த துயரழ லாற்ற விடர்விடு நெட்டுயிர்ப்பாய்ப்
பேர்த்த துகிலாற் கவிந்து பிறழ்தரு பேரொழின்மெய்
கூர்த்து முயன்று தொடர்ந்தா ளிணங்கியர் கூழையினே (௬௪)

இனிதிமிர் பாணிகர் வண்டினம் பாடு மெரிமலர்த்தேன்
பனியுமிழ் தாரு நிழற்றிய சோலையின் பார்நிலங்கீழ்
வனைசிலை யானவி யோரறைக் குள்ளாய் மனுவுடலா
னனையில மாண்ட மகன்சே சதுமெய் யடக்கினரோ (௬௫)

அடக்கினர் போயினு மாங்கு விடலில ளாயவிர்செங்
கடிக்கதிர் போதலிற் றாமரை போலக் கவினிகந்தாய்
நடக்கணாப் பார்ப்பிழந் தோதிமம் போலத் தடநெடுங்கண்
விடுத்திடு நீரொடு மீண்டாள் புலம்பி விளம்பினளே (௬௬)

விளம்பின கேடம் விரத்தா நறவுமிழ் வேரியம்பூ
விளம்பனித் தாரு பொலிந்திரு சோலை யெவையுமொவ்வா
வளம்படு சோலை யிதுவென வேண்டு மனுப்புரப்பா
னுளம்புரிந் தீண்டென் மகன்சே சுடலம் புதைத்தபினே (௬௭)

பின்றொடர் மன்பதைக் கோட்டி விளியப் பிணியளித்த
துன்புடை யோர்கனி காய்த்ததொல் சோலைத் துரிதமெலா
மின்பரி தூற்று மலர்பொது ளுஞ்சினை யிப்பொழிற்
னன்றெனத் தீர்த்து நிலம்புரப் பானிழ னல்கியதே (௬௮)

நல்கிய வன்புடைத் தெய்வ மெனக்குச்செய் யார்நிழற்கீழ்
மல்கிய கன்னித் தமியேன் பயந்த மனுவுடலோ
டொல்கிய நாதனைக் கொண்டதி னென்று முறுபுகழை
நல்கிய பேறுடை யன்றோ நகலுமிக் கல்லறையே (௬௯)

அறைமா டிருமழை சேர்முடி மீதி லணுகிநிலாப்
பெறுவான் சிலைகள் விழுத்தகத் தாங்கிய பேரொழில்வா
னிறைமா மணிசெப் யழகோன் கொலின்று திமிரிருளாற்
பொறையான யாவு மினிதளித் தோனுடல் பூத்ததற்கே (௭௰)

தேடில வீட்டிற் கெழுமுயர் வாயில் கிடக்கையர்க்கார் ... ... ......*
பீடுள வின்ன பிறழுறை யாகிப் பெறலரிதாம்..........................*
வீடுசெய் யாறந் நயத்தினைக் கொண்டு விடுந்துயரா................*
னீடிகழ் தாயென் றனக்கோ ரிருணிலமொத் துளதே...........(எக)

உளம்விளக் கொண்கதி ரோனென்ன வின்ன வொளிருடலம்..........*
விளிவிருட் பாய்ந்த பகுவாய்ப் பிளந்துள் விளங்கியதான்..........*
வளமொழி யில்லா தெனதுளந் தீக்கு மலிதழலைத். ... ...............*
தளர்வுற யாண்டு முமிழா ருளாப்பத் தகைவிலையே..............(எஉ)

தகைவில் மாற்றலர் கொன்றவென் றேவத் தடமகனே...............*
டகலறை யூடெனைப் பெய்தக் குறையொ டடக்கினிரோ ..............*
மிகவில வீடிவ் வறையெனக் காகு மெனதுயிரைத்....................*
திகழரு ளானு மனுப்பீர் செழுநெடுங் கண்ணியரோ..............(எங)

கண்ணி யரியலி னின்பங் கனிந்த கடிமொழியான்.....................*
றண்ணங் கருணையைக் காட்டிய தெய்வதந் தாரணியார்..............*
விண்ணெனன் றுலகிறை சேர்ப்ப் வியற்றிய மீயருளு...................*
னெண்ணணி யிவனைத் தொடர்ந்தோரில் யாரையுங் காண்கிலையே.(எச)

காண்கிலை யென்பதென் கண்டே னெழிலி கவிழ்வரைமே..........*
ணுண்கமழ் யாக்கை யொறுத்துக் கண்ட னயனெழிந்தோர்.......*
சேண்கடை யோதை செறிந்தெழத் தெய்வ சிறுவனைத்தா..........*
மாண்டிழி வாடுகக் கேட்டெ னறிவின் மனுக்குலமே............(எரு)

மனுக்குலத் தானுன் மடமா விரண்டடை வந்துதித்தா..............*
வினக்குலத் தாரை யிழந்தான் பிறநாட் டிவர்ந்திருந்தா..............*
னனிக்குலத் தாரை நயந்தான் பரகதி நல்கியவா.........................*
றனைக்குலத் தார்க்கு முரைத்தா னருளுமத் தாரவனே...........(எசு)

தாரவிழ் தேனிற் கனிந்தவின் சொல்லான் றணந்தவர்க்கே..........*
கூரிய தேற்ற முரைத்தா னெவர்க்குங் கொடுமையெலாந்............*
தீரரு ளீந்தான் செறிந்துயிர் வாடுஞ் சில்குருநோய் ...................*
பாரிடைத் தீரமு தானுன் பரிவுடைத் தெய்வதமே............(எஎ)

தமரினி தாகத் தடவரு ளோடு தனிபுரப்போ...... ... ...................*
னமரரி தார்வத்துக் கைம்மா றெவனே வருமுறையாக்..............*
குமிழ்மறிந் தோடிய கண்ணனந் தகர்க்குக்கொடுத்ததற்கோ..........*
விண்மையவன் கையை யறைந்தீர் சிலுவையி னேற்றினரோ.......(எஅ)

நரம்பிசை யாழென நன்றுறு மாற்ற நவின்றநன்றான்
விரும்பியஎன் மழலைக்கு நாவவிழ்த் தற்கோ விரிதிரைசூ
பிரும்படி யாரி லிரணமர் நீவி ரெதிர்த்தவனை
மரம்புடை மீதி லறைவான் மறுமறு விம்மினிரோ (௭௯)

இரவி கிளர விருளகல்போல விட்டாயேல்லாம்
புரியு மருளொடு தீர்த்தகைம் மாறோ பொழிதலறா
முருகு நறிய முளரிய மேனியை முற்றவுநீர்
துரித மிலவிட மில்லாச் சுவடாய் வருத்தினிரே (௮௰)

வருத்தின் நோயின் மரித்தனர் மீண்டினி வாழ்ந்துவப்பான்
திருப்பிய் வாவி சிறந்த வுடலிடை சேர்த்ததற்கோ
முருக்கின் மேனியி லின்னுயிர் நீங்க முழுதுயிரைப்
புரத்தினைக் கொன்று விடுத்தீர் புலியினும் பூதியரோ (௮௧)

பூதிய ரேனும் புரிவமர் கோனென்ன வென்புதல்வ
றூதர மோடு நினைத்தொடர்ந் தானென வாங்கடியேன்
பேதுற வோங்கு பிறங்கலிற் கண்டேன் பினருமையாந்
தீதுற வின்றிகல் வேறோ வெனதுளந் தேறுதற்கே (௮௨)

தேறுத லின்றிச் சிறுவனுந் தாயுந் திளைத்தவரும்
வீறெனத் துன்பம் விடுத்திட லால விபுலையெலா
மாறில சூழ வடுத்துயர் யாவும் வகுத்திடுமோ
ராறெனத் தீவினை யன்றே வனைவர் பகைப்பநன்றே (௮௩)

நன்றெனுந் தாய வமிழ்தெனுந் தீவினை நஞ்சறியா
நின்றுளத் தார்ந்து நுகர்ந்தன ரந்தோ நிலாவொளிகோ
வின்றருந் தீவினை யாற்றிய வொய்தி யிருமர் தீதிற்
பொன்றலைக் காண்டி னழுவிபொன் றேடு பொருந்தியரோ (௮௪)

பொருந்திய வாயத் துணையெனச் செய்குநர் பூவனத்தில்
வருந்திய தாயெனத் தேற்றுவிப் பாரிலை வான்கத்தி
லிருந்தியல் பாக வருமா வனமென வீண்டிரங்கி
யரந்தையர் போல வழுங்கக்கண் டாற்றுணை யோதுயர்க்கே (௮௫)

துயர்க்கோர் முறுதி துணையுமை யெண்ணிச் சொலாலடங்கா
வுயர்க்கோட் கடவுள் முகமமைந் தோரோ புறந்துயரான்
மயற்கோர் முரியுருக் கொண்டவர் கம்பலை வாய்ந்தனர்போற்
கயற்கோ ரிணையகண் ணீர்விடல் காலின்குறு கின்றனனே (௮௬)

நனியரு டெய்வம் பழிச்சுகின் றேரி னலஞ்சிறந்த.....................*
தனியன் கபிரிய லென்றவ நீமுனர்த் தற்பரனு.........................*
லெனதுழைத் தூதுவந் தென்னைச் சிறந்தவ ளென்றுகந்தே ... ...*
துனியடை ஞானறி லெனை விடலாமோ துணையிலளே..........(௮௭)

துணையில டாயுங் குமரியுஞ் சேர்ந்தனள் சூலுழையா...............*
வினையில சேயைப் பயந்தன ளன்றோ வினையிலநோ. ..............*
பணையில வாழி யலையி னலைவகன்ன டாங்குறைத்த......................*
திணிநயன் றேற்ற முறைத்தாற் சிறப்புறுந் தேர்ந்துளத்தே...(௮௮)

தேர்ந்துளங் கூரச் செழுமுடல் காபிர்யல் சேர்த்தினனுக்............*
கூர்த்துள மாற்ற வழுங்கிய மாதின் குளிரிணைதா......................*
ளார்ந்துளம் போற்றி யமுதிற் கனிந்த வரிபயில்வான் ... ... ......*
கூர்ந்துளந் தேறத் துவர்வா யவிழ்த்தினிக் கூறறையே.........(௮௯)

அறையலை யாழி பனியிற் பெருகுத லாகுவதோ......................*
பொறையென யாவும் பொதுவற வோச்சிப் புரந்திடுநீ ..............*
யிறைவியென் றுதி நினதுளத் தெய்த வெனதுரை நின்..............*
னுறையகந் தேறுத லாமோ வுலகேத்து மொண்ணுதலே......(௯௰)

நுதலிதழ் வாடக் கறைநீர் வழிந்துநுன் கண்டுடிப்பக்...............*
கதலிவெல் மேனி தழலுட விற்போற் கடுப்பவுநீ......................*
தனையிகழ்ந் தெய்து வெதுப்பினைக் கண்டு தளர்வுடன்யான். ......*
விதவுறா யேனும் விதிப்பாம் விரியருட் கோமகளே...........(௯௧)

மகளாய்ப் படியின் மறமக்கட் கீன்றவொர் தெய்வமக..................*
னிகழ்வா யிறந்தா னெனநீ வருந்தெ லெரியழன்செய். ................*
பகையான் பந்த மடக்குல மென்னும் படிபுறைவோர். ...............*
தகையா னினிதென வுய்தாற் குறையோ தயாபரியே............(௯௨)

பரிப்பரி தாய செருக்கொடு கூளி பழித்திழந்த.........................*
வுளைப்பரி தாய நயங்கொள் கதியி னுலகினுளா........................*
ரருப்பரி தாய விருப்புட னும்மக னர்ச்சனையாய் ....................*
வரிப்பரி தாய்த்துதி செய்வ னெனமகிழ் வாய்த்தொடியே...... (௯௩)

தொடியரி னீருழைந் தீன்ற மனுவுட ரொட்டுதித்த.....................*
கடவுளை வீயக் கணுற்று வருந்தெல் கடனெறுபா........................*
ருடையுயிர் யாவு மளித்ததின் மூன்று முறைமகற்கா .....................*
மடிவில வாய்மை யறிகிலை யோமட வார்க்கொளியே...........(௯௪)

ஒளிநகு மார்ந்த நகையுளி ராவி லுயரருளான்......................*
களிநகு யாண்டு நிகரக லாவி கடிகொடுங்கோ......................*
விளிநகு மேனி யிடைப்புக் குலகிடை யீண்டிரவி,....................*
தினநகை யாவும் விளக்குதல்போலுளந் தேற்றிடுமே.........(௯௫)

தேற்றிடும் வாண்முகந் தீட்டிப் பரந்த சிறப்பெழில்யான்..........*
சாற்றிட லாமோ வுலகிடை மூன்றிற் றனக்குவமை,..................*
யாற்றிட வொன்றில தொண்மணி மோத மவிழ்மலர்வா............*
ஞாற்றிடு மீனின வெல்லா முடைத்த நறுமெழிலே..................(௯௬)

எழிலிபெய் மாரியின் வெள்ளம் பெருகி யிரைகடன்மே.............*
லொழுகி வல்லோடு முடுகிய வாறிணை யுன்மகற்கே..................*
யழகென யாவு மளித்திடு வாய்மை யடுத்தடுக்கும்...................*
விழைவிய காலது வான ததனை விதிப்பரிதே..................(௯௭)

விதிப்பரி தாய வடிவைப் பலநின் விரியுளத்தாற்......................*
சிதைப்பரி தாய தயவுடன் கண்டு திகழுயர்வான்.......................*
மதிப்பரி தாய முறையெழப் பார்த்து மனமகிழ்வா....................*
யெதிர்ப்பரி தாய செழுமைநல் லாயென வோதினனே.......(௯௮)

ஓதிய மாற்றஞ் செவியிடை கேட்ப வுடல்பதைப்ப........................*
மாதுளத் தின்புடன் றுன்பிகன் றுலென வாடியருப்......................*
பேதுற லாகிப் பெருங்கட லாழ்ந்து பிறழ்விழியான்.....................*
யாதெனு மோதுத லில்லா ளிருநதி விட்டனனே..................(௯௯)

விட்ட. விருநதி தாயவன் மூழ்கலு மேற்கடலிற்.......................*
சுட்டுச் சுடரவன் மூழ்கலுங்கண்டு துணைப்புடைசூழ்...............*
நட்ட ரிவளை மனைக் கொடுபோகு நற்றேறுதலா......................*
னுட்டங் குறுதி யுரைப்ப ருறவர் வரைவரையே.......................(௱)

அன்னையழுங்கல்அந்தாதி

முற்றிற்று.

சாதாரணசத்தியவேதக்குருப்பிரசாதிகளாலும்-
மகாவித்துவான்களாலுஞ் செய்யப்பட்ட வேதபிரபந்தங்களின்
தமிழ்ப்புத்தகப்

# பெயர்ட்டவணை.

தத்துவபோதகசுவாமியா
ரருளிச்செய்தது.

ஞானோபதேசகாண்டம்
மந்திரமாலை
மந்திரவியாக்கியானம்
ஆத்துமநிருணயம்
தூஷணதிக்காரம்
சத்தியவேதலட்சணம்
சகுனநிவாரணம்
பரமசூட்சமாபிப்பிராயம்
கடவுணிருணயம்
புனர்ஜென்மஆட்சேபம்
நித்தியசீவனசல்லாபம்
தத்துவக்கண்ணாடி
தமிழுக்குப் பொர்த்துகீசுவி
(யாக்கியான அகராதி
யேசுநாதர்சரித்திரம்
தவசுச்சதம்
ஞானதீபிகை
நீதிச்சொல்
அநித்தியநித்தியவித்தியாசம்
பிரபஞ்சவிரோதவித்தியாசம்

---

சாங்கோபாங்கரருளிச்
செய்தது.

பச்சிமகாண்டம்
புராந்திமகாண்டம்
சிற்பகாண்டம்

---

வீரமாமுனிவரும்-சித்தான்
ந்தபண்டாரமுஞ்செய்தது.

ஞானவிளக்கம்

---

வீரமாமுனிவரருளிச்
செய்தது.

தேம்பாவணி
தொன்னூல்விளக்கம்
சதுரகராதி
கித்தேரியம்மாளம்மானை
திருக்காவலூர்க்கலம்பகம்
அன்னையழுங்கலந்தாதி
வேதவிளக்கம்
வேதியரொழுக்கம்
பேதகமறுத்தல்
லுத்தேரினத்தியல்பு
தேவசிநேகமுகாந்திரம்
ஞானவுணர்த்தல்
அடைக்கலமாலை
கலிவெண்பா
வண்ணக்கலைகள்
தேவாரம்
திருச்சபைக்கணிதம்
வாக்கியசித்தாந்தம்
தமிழும்-லத்தீனும்-லத்தீனும்
(தமிழுமாகிய அகராதி
தமிழுக்கு-லத்தீனிலும்-பொர்
த்துகீசிலும் வியாக்கியான
(அகராதி
தமிழும்-லத்தீனுமாகிய கொடு
(ந்தமிழிலக்கணம்
தமிழும்-லத்தீனுமாகிய செந்
(தமிழிலக்கணம்
திருவள்ளுவர் குறளுக்கு-லத்தீ
(ன்மொழிபெயர்ப்பு
வாமன்சரித்திரம்
பரமார்த்தகுருக்கதை

---

சஞ்சீவி நாதராருளிச்
செய்தது.
அண்டபிண்டவியாக்கியானம்
ஞானசஞ்சீவி
தபசுகால ஏழுவெள்ளிக் கிழ
(மைப்பிரசங்கம்
நல்லமரணயத்தம்
லோகப்பிரமாணச்சரித்திரம்
தருமநடக்கை

---

கபிரியேல்பசசேகரென்ப
வராருளிச்செய்தது.
பழைய-புதிய ஏற்பாட்டின்சரி
த்திரார்த்தமடங்கிய இரண்டு
சல்லாபம் (காண்டம்
தேவமாதாவினழுகைக்குரவை

---

சவேரியார்சுவாமியாரரு
ளிச்செய்தது.
வருஷமுற்றுமுள்ள நித்தியபிர
(சங்கம்
ஏழுகிழமையிலொவ்வொரு
(கிழமைக்கு-டுஉ-புதுமை
வியாகுலமாதாவின்சரித்திரம்
சிலதிருநாட்களினவநாள் பிரச
(ங்கம்
சேசுநாதரிருதயப்பிரசங்கம்
அப்போஸ்தலர்சரித்திரம்
இன்னுசியார்தியானம்
பாவசங்கீர்த்தனப்பிரசங்கம்

---

கன்னடசீமையில்விளங்கின
தத்துவபோதகராருளிச்
செய்தது.
இருபத்தாறு-பிரசங்கம்
இருபத்தெட்டு-பிரசங்கம்
முப்பத்திரண்டு-பிரசங்கம்
உபதேசகாண்டம்

---

அமிர்தநாதசுவாமியாரரு
ளிச்செய்தது.
தேவரகசியமாலை

---

செகனிவாசகசுவாமியா
ராருளிச்செய்தது.
ஞானப்பூச்செண்டு
லோகநிந்தை

---

கயத்தானு அநதோனிப்
பிரோயராவென்னுங்கொழு
ம்புமேற்றிராணியாராருளிச்
செய்தது.
பதிதராலுண்டாக்கப்பட்ட
நேச நிருபத்துக்குப் பிரத்தி
மோட்சபாதை (யுத்தரம்

---

யாக்கோபுஆத்துமானெ
ன்னுஞ்சுவாமியாராருளிச்
செய்தது.
தேவசாஸ்திரம்
சுவிசேஷவிருத்தியுரை

---

கொழும்பில்-செபஸ்தியம்
பிரோயராவென்னுஞ்சுவாமி
யாராருளிச்செய்தது.
அர்ச்-அந்தோனியாரைப்பற்றி
ப்பதிதருண்டாக்கினநிப
ந்தனத்துக்குப்பிரத்தியுத்தரம்
ஞானப்புதையல்

---

திருப்பணியாள்வானென்னும்
ஞானப்பிரகாசவித்துவான்
செய்தது.
சர்வேஸ்வரன்சதகம்

# புத்தகப்பெயரட்டவணை.

யாழ்ப்பாணம்-தெல்லி
நகர்வேளாளன்- தோம்பிலி
ப்புதேலிவாவென்னும்வித்
துவான்செய்தது.

விசுவாசவிளக்கம்
திருச்செல்வராயர்காப்பியம்

---

அந்தோனிகுட்டிஅண்ணா
வியார்செய்தது.

பேரின்பக்காதல்
ஞானத்திருப்புகழ்
நவரத்தினமாலை

---

புதுவைவித்துவான்
சாமிநாதபிள்ளைசெய்தது.

ஞானாதிக்கராயர்காப்பியம்
நசரைக்கலம்பகம்
சாமிநாதன்பிள்ளைத்தமிழ்

---

காலேஜி-அ·முத்துச்சாமி
பிள்ளைசெய்தது.

ஆத்துமவுத்தியானம்
வேதவிகற்பதிக்காரம்
வீரமாமுனிவர்சரித்திரம்
இந்துககிறிஸ்டியன்அப்சர்வர்

---

தூத்துக்குடிமனுவேல்
பிள்ளைசெய்தது.

நாவிலாணி

---

மதுரை.ஆதியப்பன்செய்தது

வேதவிகற்பசங்காரம்

---

இன்னுஞ்சிலசுவாமிமார்களும்
வித்துவான்களுஞ்செய்தது.

தியானோச்சிதம்
ஞானாறுதல்
ஞாயிறுவாரப்பிரசங்கம்
ஞானமுத்துமாலை
ஞானோபதேசம்
ஞானோபதேசவிளக்கம்
ஞானோபதேசப்பிரசங்கம்
ஞானநட்சத்திரமாலை
அர்ச்சியசிஷ்டவர்கள்சரித்திரம்
பாவங்களைவிட்டுசர்வேஸ்வரனு
க்கேற்கநடக்க-ஏழுவாரப்பிர
தரகந்திறந்தவாய் (சங்கம்
சிலபுதுமைப்புத்தகம்
மோட்சநிழலாட்டம்
நல்லமரணத்தின்ஆயத்தம்
பதிதரைப்பற்றி உபாத்தியாய
ரும்-குடியானவனுஞ் சம்பா
(ஷிக்குந்தருக்கம்
பதிதராலே சத்திய வேதத்துக்
கு விரோதமாக வுண்டாக்கப்
பட்டசத்திய ஜெய மென்றபு
த்தகத்தைச்சங்கரிக்கிறசத்திய
ஜெயத்தின்சங்காரம்
அர்ச்சியசிஷ்டதேவமாதாவின்
உலாமாலை (புதுமை-ருஉ
மாதா அம்மானை
சுகிர்ததற்பணம்
சுகிர்தமொழி
ஜலப்பிரளயம்
சேசுநாதர்பாடுகளைப்பற்றி
(யசு-பிரசங்கம்
வியாகுலப்பிரசங்கம்
நடுத்தீர்வைப்பிரசங்கம்
பூசையின்சகலகிரியைகளின்
(அபிப்பிராயம்
பூசையிற்குருவுஞ்சீஷனுஞ்
(சொல்லும்வசனங்கள்
தருமவுத்தியானம்

மேலுமநேகவேதப்பிரபந்தங்களுண்டாயிருப்பினும்-அவைக
ளைச்செய்தவர்களிந்நாரென்றறிவது மிகவுமரிதாயிருக்கின்றன.